III. 1921

# MANORANJANI

EDITOR
V. K. DURAISWAMI AYYANGAR, B.A.



...ISHERS:
...AM & CO.,
... & Publishers
...TAH, MADRAS.

## மனோரஞ்சனியின் சந்தா விகிதம்.

இது ஒவ்வொரு மாதமும் வெளியாகும் சஞ்சிகை. 1921-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் முதல் இதன் மூன்றாவது ஆண்டு நடைபெறுகிறது. வருஷ சந்தா மாதம் ஒன்றுக்கு இருநூறு ரூபாய்க்குமேல் வருமானமுள்ள கனவான்களுக்கு ரூபாய் 3. மற்றவர்களுக்கு ரூ. 2-8. வெளி நாடுகளுக்கு ரூ. 3. மாதிரிக் காப்பியின் விலை 4 அணா. மாதிரிக் காப்பியை வி. பி. யில் அனுப்ப முடியாது. வருஷத்தில் எந்த மாதத்தில் சேர்ந்தாலும், செப்டெம்பர் முதல் வெளியான சஞ்சிகைகள் யாவும் அனுப்பப்படும். வருஷம் தொடங்கி எட்டு மாதங்களாய்விட்டால், ரூபாய் மூன்று விலையுள்ள நாவல்கள் பைண்டாகிவிடு மாதலால் அதன் பிறகு சேருவோரிடம் அதிகரித்த சந்தாத் தொகை வசூலிக்கப்படும். விளம்பர விகிதம் எழுதித் தெரிந்துகொள்ள வேண்டும்.

---

### இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட வேறு புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| பாலாமணி அல்லது பக்காத்திருடன் ... ... | 2 | 0 | 0 |
| மேனகா 1, 2, பாகங்கள் (படங்களுடன்) ... | 3 | 0 | 0 |
| திகம்பர சாமியார் அல்லது கும்பகோணம் வக்கீல் 1, 2, பாகங்கள் (படங்களுடன்) ... ... | 3 | 0 | 0 |
| வஸந்த மல்லிகா ... ... ... | 1 | 8 | 0 |
| திலோத்தமா (அகவல்) ... ... ... | 0 | 12 | 0 |
| மங்கையர் பகட்டு (அகவல்) ... ... | 0 | 12 | 0 |
| இராஜேந்திர மோகனா ... ... ... | 0 | 12 | 0 |
| மாணிக்கவாசகர் ... ... ... | 0 | 8 | 0 |
| காட்டுராஜன் ... ... ... | 0 | 3 | 0 |
| வித்தியாசாகரர் (படங்களுடன்) ... ... | 1 | 4 | 0 |

கே. விஜயம் கம்பெனி,

இராயப்பேட்டை, சென்னை.

# மதன கல்யாணி.

5 - OCT 1921

## 1-ம் அதிகாரம்.

### உல்லாச புருஷர்கள்.

சீமைச் சரக்குகளும் புதிய நாகரிகங்களும் மலிந்த காவேரி யின்று போக வசதிகளும் நிறைந்ததுவதான சிறப்புடன் வாய்ந்த சென்னை மாநகரின் தென்மேற்கு பாகம் தேனாம்பேட்டை என்ற பெயரால் குறிக்கப்பட்டு வருகின்றது. அது சுமார் இரண்டு மயில் நீள அகலம் பரவியதாயும் ஆயிரக் கணக்கான அழகிய பங்களாக்களைக் கொண்டதாயு மிருக்கின்றது. சென்னையில் பெருத்த உத்தியோக பதவியை வகித்த ஐரோப்பிய துரைமார்களும், இந்திய வக்கீல்களும், ஐரோப்பிய வர்த்தகர்களும் இந்த பங்களாக்களில் வசித்ததன்றி, சென்னை இராஜதானியின் ஒவ்வொரு ஜில்லாவிலு முள்ள முக்கியமான சில சமஸ்தானத்து ஜெமீன்தார்களும் போலி மகாராஜாக்களும் ஏராளமான தமது செல்வத்தைச் செலவிட்டு நவ நவமான சுகபோகங்களை யெல்லாம் அநுபவித்து குதூகலமாகத் தமது பொழுதைப் போக்கும் பொருட்டு இந்த அழகிய பங்களாக்களை வாங்கி அவற்றில் வசித்து வந்தனர். அவைகளும் மனோகரமான அழகிய பூச்செடிகள் நிறைந்த சோலைகளும் மரங்களடர்ந்த தோப்புகளும், தாமரை அல்லி நீலோற்பலம் முதலியவை தவழ்ந்த தடாகங்களும், வாவிகளும் பெரும்பாலும் நிறைந்து, அவற்றில் வசிப்போர் தாமிருப்பது மண்ணுலகத்திலோ விண்ணுலகத்திலோ வென்று சந்தேகிக்கும்படி நறுமணந்தவிழ் தென்றல் உதிர்த்து குளிர்ச்சியும் இன்பமும் கொள்ளையாய்ச் சொரிந்து சிங்காரமாய் விளங்கின. ரதி மன்மதனென்னத் தகுந்த இரண்டு வனமாளிகை யொன்றனுள், ஒரு நாள் மாலைப்பொழுதில் இந்தக் கதை தொடங்குகின்றது.

அப்போது சூரியன் மேற்றிசையில் மறையும் தருணத்திலிருந்தான். அவனது அழகிய செங்கிரணங்கள் அந்தச் சோலையின்

---

குறிப்பு:—இந்தக்கதை ஓர் இங்கிலீஷ் நாவலின் போக்கை சிறிதளவு தழுவி அமைக்கப் பட்டது.

Xerox copy 4
189936



189936

மரங்களிலும் செடிகளிலும் பழுத்துத் தொங்கிய கனிகளின்மீதும், வாவியிலிருந்த [illegible] மேற்புறத்திலும் தவழ்ந்து அவற்றின் இயற்கை யழகைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டின. குயிலினங்கள் யாவும் அங்கிருந்த பழங்களை சுயேச்சையாகத் தின்று பளிங்கெனத் தெளிந்த தண்ணீரைப் பருகி செருக்கடைந்து ஆநந்த பரவசமுற்று மெய்ம்மறந்து தமது தீங்குரலை யெடுத்துப் பாடி இனிமையை அள்ளி இறைத்துக் கொண்டிருந்தன. கிள்ளைகளும் அணில்களும் தத்தம் பெண்டு பிள்ளைகளுடன் கொஞ்சிக் குலாவிக் குதூகலமாகத் துள்ளிக் குதித்துப் பண்டிகை கொண்டாடின.

மாளிகைக்குள் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்த விசாலமான ஒரு கூடத்தின் ஒரு புறத்தில் சாய்மான நாற்காலியொன்றன்மேல், நாற்பத்தைந்து வயதடைந்த ஒரு ஸ்திரீ சாய்ந்து மூக்குக் கண்ணாடி யணிந்த கண்களினால் ஏதோ ஒரு புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். இன்னொரு மூலையில் பிரம்புப்பாய் விரிக்கப்பட்ட தரையில் ஒரு அழகிய யௌவன மங்கை உட்கார்ந்து, தனக்கெதிரிலிருந்த வீணையை மீட்டி, ஹம்ஸத்வனி ராகத்தை எடுத்து அற்புதமாக ஆலாபனை செய்து, அந்த இனிய இசையோடு தனது மாதுரியமான குரலைப்புணர்த்தி அமிர்தத் துளிகளை வாரி ஜிலீர் ஜிலீரென்று வீசிக் கொண்டிருந்தாள். அவளது வயது பதினைந்து அல்லது பதினாறுக்குமேல் இராது. அழகும் இளமையும் உருக்கொண்டு வந்தனவோவென அமைந்திருந்த அவளது அற்புத மேனி எவ்விதக் குற்றம் குறைபாடின்றி தேஜோமயமாய் விளங்கியது. உச்சி முதல் உள்ளங்கால் வரையிலுள்ள ஒவ்வொரு அங்கமும் சம்பூரணமான வளர்ச்சியும் உன்னத வனப்பும் பெற்று காண்போர் மனத்தையும் கண்களையும் கவர்ந்து கலக்கின. சுருண்டு சுருண்டு நெளிந்து சென்றிருந்த சிரத்தின் உரோமமும், கயல் மீன்பிறழ்ந்த கண்களும், மாதுளை மலர்போலச் சிவந்து கனிந்து தேன் ததும்பிய அதரங்களும், முல்லையரும்பின் பந்திகளைப் போலிருந்த மாசற்ற பற்களும், தந்தத்தில் கடைந்தெடுத்த சிமிழ்போலக் கவிழ்ந்திருந்த கன்னங்களும் ஒன்று கூடிய சுந்தரவதனத்தில் மந்தஹாஸமும், மகிழ்ச்சியும் இயற்கையிலேயே தவழ்ந்து, அவளது நற்குணத்தையும், கபடமற்ற சுபாவத்தையும் எளிதில் காட்டின. அவள் தனது வாயைத் திறந்தபோதெல்லாம் வலது கன்னம் அழகாய்க் குழிந்து அவள் மேம்பட்ட சுகபோகங்களுக்குரியவளென்று ஓயாமல் விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தது. தங்கப் பதுமையைப்

212622



போலிருந்த அந்த உன்னத மடந்தையின் எந்த அங்கத்தை நோக்கினாலும், மனம் தெவிட்டாமல் அதை விட்டு வேறொன்றிற் செல்ல மாட்டாமல் பிரமித்து அப்படியப்படியே அந்த அழகில் ஈடுபட்டு மயங்கி நின்றது. அவளது முடிமுதல் அடி வரையிலுள்ள எந்தபாகத்தைப் பார்த்தாலும் அற்புதமான அழகு ஜ்வலித்து கண்கொள்ளாக் காட்சியாக அமைந்து இன்பத்தையும் சஞ்சலத்தையும் உண்டாக்கியது. மிருதுத்தன்மையும், கற்பின் உறுதியும், பெருந்தன்மையும், நற்குல ஒழுக்கமும், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் பெண்மைத் தன்மைகளும் சுடர்விட்டொளிர்ந்த அருங்குணமணியான அப்பெண் பாவையைக்கண்ட மாத்திரத்தில், உலகைத்துறந்த தபசிகளும் கலக்கமடைந்து "சுவர்க்க லோகமே பெண்ணுருவாய்த் தோன்றி இவ்வுலகிலிருக்கையில் வீணிலே உலகைத் துறந்து விட்டோமே" என்று வருந்தத் தக்க சிறப்பு வாய்ந்தவளாயிருந்தாள்.

இத்தகைய ரூபலாவண்ணியம் பொருந்திய கன்னிகைக்கு அவளது பெற்றோர் கண்மணியம்மாள் என்று பெயர் சூட்டியது முற்றிலும் பொருந்துமல்லவா. இந்த அழகிய மடமங்கை கிருஷ்ணபுரம் சமஸ்தானத்து ஜெமீந்தாரது தம்பியின் புதல்வி; குழந்தைப் பருவத்திலேயே தாய் தகப்பன்மாரை இழந்தவள்; தந்தையோடு பிறந்த அத்தையினால் மிக்க அருமையாக வளர்க்கப்பட்டவள். மீனாக்ஷியம்மாள் என்ற பெயர்பூண்ட அந்த அத்தையே, முன் கூறப்பட்டபடி சாய்மான நாற்காலியில் புஸ்தகம் படித்திருந்தவள். மீனாக்ஷி அம்மாளுக்கு இறந்துபோன தன் கணவனது நிலங்களிலிருந்து வருஷம் ஒன்றுக்குப் பதினாயிரம் ரூபாய் வருமானம் வந்துகொண்டிருந்தது. அவளுக்கு சந்தானமில்லாமற் போனமையால், அவள் கண்மணியம்மாளையும் அவளுக்கு முன்பிறந்தவனான துரைராஜா என்றவனையும் தனது சொந்த மக்களைப்போல அன்பும் ஆதரமும் சுரக்க, செல்வமாகவும் சிறப்பாகவும் வளர்த்து வந்தாள்; இருவருக்கும் நன்றாகக் கல்வி கற்பித்ததன்றி, கண்மணியை வீணை வாசிப்பதில் பயிற்றுவிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் வீணாவித்துவானொருவனையும் அமர்த்தி இருந்தாள்.

இக்கதை தொடங்கிய மாலையில் கண்மணியம்மாள் வீணைவாசித்தபோது, அந்த வீணாவித்துவான் அவளுக்கு சற்று தூரத்தில் மிக்க மரியாதையாக விலகி உட்கார்ந்திருந்தான்; அவன் மைத்துரி

JL
MAHIMA N21-31

யிருந்த மகாவித்துவான் ஒருவருடைய மகனென்பதும், அவனும் தந்தையைப்போலவே கீர்த்தி வாய்ந்தவனென்பதும் எல்லோருக்கும் தெரியவே, ஜெமீந்தார்களின் பங்களாக்களிலுள்ள சிறுவர் சிறுமியர்களுக்கெல்லாம் வீணை கற்பிக்கும்படி அவனை ஏற்படுத்திக் கொண்டனர். மதனகோபாலன் என்ற அழகிய பெயர்கொண்ட வீணை வித்துவானாகிய அந்த யௌவனப் புருஷன் தனது பெயருக்குத் தகுந்தபடி மன்மதனை வென்ற அழகும் சிவந்தமேனியும் நற்குண நல்லொழுக்கமும் ஆண்மையும் கூரிய புத்தியும் கல்வித்திறமையும் முகத்திலேயே ஜ்வலிக்கப்பெற்றவனாய் விளங்கினான். அவன் தனது நிலைமைக்குத் தகுந்தவாறு மரியாதை பணிவு அடக்கவொடுக்கம் முதலியவற்றை பெரிதும் காட்டி மிருதுவாகவும் அழகாகவும் பேசி கண்மணிக்கு ராக ஆலாபனை பயிற்றிக் கொண்டிருந்தான். கண்மணியம்மாளோ, தான் ஜெமீந்தாருடைய வீட்டுப் பெண்ணென்ற நினைவினால் செருக்கடைந்து அவனை அசட்டை செய்தவளாய்க் காணப்படாமல், ஒரு குருவிடம் பணிவாகக் கல்வி கற்றுக்கொள்ளும் சிஷ்யனைப்போல பயபக்தியோடு ஒழுகி, அவனது வாக்குக்கு எதிர்வாக்கின்றி வித்தை கற்று வந்தாள்.

இவர்கள் இங்ஙனமிருக்க அந்த மாளிகையின் மேன்மாடியில் கொலுமண்டபத்தைப்போல அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு விடுதியில் அதே காலத்தில் இரண்டு யௌவனப் புருஷர்கள் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் கண்மணியம்மாளின் தமையனான துரைராஜாவென்பவன். அவனுக்கு இருபத்து மூன்று வயதிருக்கலாம். அவன் உயர்வான சிவந்த அழகிய மேனியைக் கொண்டவன். அவனுடனிருந்த மற்றவன் மாரமங்கலம் என்ற பெருந்த சமஸ்தானத்து ஜெமீந்தாரின் ஏகபுத்திரன்; அவன் தந்தையற்றவன்; வயது பதினேழிருக்கலாம். அவன் குள்ளமான கருத்தமேனியுடையவன். அவனுக்கே கண்மணியை மணம்புரிவிப்பதென்று, அவனது தாயான கல்யாணியம்மாளாலும் மீனாக்ஷியம்மாளாலும் முடிவு செய்யப்பட்டிருந்தது.

துரைராஜாவென்பவன் நன்றாகப்படித்தவனாயினும், அவன் தனது கல்வியை நல்வழியில் உபயோகியாமல், தீயவழிகளில் பயன்படுத்தும் துர்க்குணமுடையவன். நாணயம் நல்லொழுக்கம் என்பவைகளுக்கும் அவனுக்கும் வெகுதூரம்; எத்தகைய துர்நடத்தைக்கும் அவன் பின்வாங்காதவன். மாரமங்கலம் ஜமீன்தாரோ பிஞ்சில் பழுத்தவன். மூட



புத்தியும், அசட்டுத்தனமும், அசங்கியமான மொழிகளையே உபயோகிக்கும் இழிகுணமும், கரைகடந்த செருக்கும், ஆணவமும், கோரரூபமும், கூனல் முதுகும், யாவரையும் தூஷித்து அலட்சியமாக எடுத்தெறிந்து பேசுந்தன்மையும் பெற்றவன். அவ்விருவரும் ஒரு நிமிஷநேரமும் பிரியாமல் மிகவும் அந்தரங்கமான நண்பர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் இணைபிரியாமலிருந்தது நட்பென்னும் உண்மையான வாத்சல்யத்தினால் கட்டுப்பட்டு இருந்ததன்று. ஒரு துஷ்டனுக்கு இன்னொரு துஷ்டனது துணையும் உதவியும் அவசியமாக வேண்டி இருந்தன. துரைராஜாவின் விளையாட்டுச் செலவுக்கு மீனாக்ஷியம்மாள் சொற்பமான பணமே கொடுத்துவந்தாள். மைனருக்கோ பெருந்த பணத்தொகை மாதம் மாதம் வந்து கொண்டிருந்தது. துரைராஜாவுக்கோ சென்னையிலுள்ள விலைமாதரிடமெல்லாம் நட்புண்டு. மைனருக்கு அந்த விஷயத்தில் அதிகமான பழக்கமில்லை. துரைராஜாவின் நட்பிருந்தால், அவனது நட்பினரான பெண்பாலார் யாவரும் தனக்கும் நட்பினராக ஆவார்கள் என்பது மைனரது கருத்து. மைனரது நட்பிருந்தால், அவனது பணப்பையில் எட்டியமட்டும் தனது கையை நுழைக்கலாமென்பது துரைராஜாவின் எண்ணம்; நிற்க, துரைராஜா என்பவன் உலக விஷயங்களில் நன்றாக அடிபட்டவன்; உலகத்தில் என்னென்ன துன்மார்க்கங்கள் இருக்கின்றன வென்பதைக் கரைகண்டவன். சென்னையில் இன்னின்ன இடத்தில் இன்னின்ன திருவிளையாடல்கள் நடக்கின்றன வென்பது அவனுக்கு மனப்பாடம்; அவனுடனிருந்தால் தானும் அவனைப் போலவே கீர்த்தியடையலா மென்பது மைனரது கருத்து. அவ்வாறு இவ்விரு துர்த்த சிகாமணிகளும் ஒருவரை யொருவர் துணையாய்ப்பற்றிக் கொண்டிருந்தனர்.

அவ்விருவரும் முதல்நாளிரவில், வி. பி. ஹாலில் நடந்த நாடகம் (Drama) பார்த்தவர்களாதலின், அன்றைய பகலில் பன்னிரண்டு மணிக்கெழுந்து போஜனம் முடித்துக் கொண்டு படுத்தவர்கள், சற்று முன்னரே எழுந்து சிற்றுண்டி யருந்தி கையில் சிகிரெட்டைப் பிடித்துக் கொண்டு சீட்டாட உட்கார்ந்தனர். முதல்நாளிரவில் பார்த்த நாடகக் காட்சிகளே அவர்களது அகக்கண்ணில் அப்போது வந்து கொண்டிருந்தன. இன்பகரமான அந்த நினைவுகளிலேயே அவர்கள் ஈடுபட்டிருந்தமையால், அதைப்பற்றியே பேசத்

தொடங்கினர். அப்போது மைசூரிலிருந்து பாலிகா மனமோகன நாடகக் கம்பெனி என்ற பெயருடைய ஒரு கூட்டத்தார் சென்னைக்கு வந்து, சில தினங்களாக வி. பி. ஹால் என்னும் கட்டடத்தில் நடித்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் கம்பெனியின் சொந்தக்காரர் ஆண்பிள்ளையாயினும், அதில் சேர்ந்திருந்த நடிகர் யாவரும் பெண்பாலாராகவே இருந்தனர். அவர்கள் யாவரும் நன்றாய்ப் படித்தவர்கள்; 8 வயது முதல் 25 வயதுக்கு மேற்படாத யௌவனப் பருவமும் ஒருவரைப்போல எல்லோரும் கந்தருவஸ்திரிகளைப்போல தேர்ந்தெடுக்கப்பட்ட கண்கொள்ளாவனப்பும் வாய்ந்த மனமோகன சுந்தர ரூபிணிகள். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் வேஷங்களை தத்ரூபமாக மகாதிறமையோடு நடத்தியதன்றி, ஒவ்வொருவரும் பார்சி நாட்டியம், இங்லிஷ் டான்ஸ், பரதநாட்டியம் முதலிய வற்றிலும் அற்புதமாகப் பயிற்றப் பட்டிருந்தனர். ஒவ்வொருவரும் தனித்தனியாக நாட்டியமாடினாலும், பலர் ஒன்று கூடி நாட்டியமாடினாலும், எவ்வகையாலும் அந்த நடனம் மெச்சத் தகுந்ததாகவே இருந்தது. அவர்கள் சென்னைக்கு வந்த சொற்பகாலத்திற்குள் எத்தனையோ தங்கப் பதக்கங்களும் வெகுமதியான பரிசுகளும் பெற்றுவிட்டதன்றி, நாடகம் பார்க்கச் சென்றோரின் மனதை மயக்கி அவர்கள் இரவுபகல் அதே நினைவைக் கொண்டு தவித்து நிற்கும்படி பித்தர்களாக்கி விட்டனர். அந்தப் பெண்மக்கள் யாவரிலும் மேலானவளுக்கு மோகனாங்கி என்று பெயர். அவள் மகாவிஷ்ணுவின் மோகனாவதாரத்தைப் போலவே சிருஷ்டிக்கப்பட்டிருந்தாள். அவள் மைசூர் கலாசாலையில் பி. ஏ. பரிட்சையில் படித்துத் தேறினவள்; அழகிலோ அவளுக்கிணை அவளேயன்றி மற்றவரை அவளுக்கு இணை சொல்வது சிறிதும் பொருந்தாது. அவள் ஸ்திரீ வேஷம் போட்டு வந்துவிடுவாளாயின் ஜனங்களின் மனதை முதலிலிருந்து கடைசிவரையில் காந்தம்போலக் கவர்ந்தவண்ணமிருப்பாள். ஒரு நொடியில் ஜனங்களை சிரிக்கச் செய்வாள்; அடுத்த நொடியில் அவர்கள் கண்ணீர் சொரிந்து கதறியழும்படி செய்துவிடுவாள். அவளது குரலோ குயிலையும் யாழையும் பாகையும் தேனையும் தோற்கச் செய்வது. நாட்டியத்திலோ ஊர்வசி திலோத்தமை என்னும் இந்திரலோகத்து தாசிகள் எப்படி நடிப்பார்களென்பதை பூலோகத்து ஜனங்கள் கண்டநுபவிக்கும்படி செய்பவள். அவளது தேகத்தின் அற்புதமான அமைப்பும் ஜாஜ்வல்யமான வனப்பும் அவளைப்படைத்த,



சர்வவல்லமையுள்ள ஈசுவரனையே மயக்கத்தக்கதாயிருந்தன. அவளிடத்தில் இத்தனை மேம்பாடுகளிருந்தும், அவள் ஒவ்வொருநாளும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குமுன் வந்து நடிப்பவளாயினும், அவள் அந்தரங்கத்தில் மகாநற்குண நல்லொழுக்கம், அடக்கவொடுக்கம், பரபுருஷரை விஷமெனமதிக்கும் பதிவிரதைக்குணம் முதலிய அரியமேம்பாடுகளைப் பெற்றிருந்தாள். சென்னை முற்றிலும், அதைச்சுற்றி நெடுந்தூரம் வரையிலுமுள்ள நாடகவிருப்பமுள்ள ஜனங்கள் எல்லோரும் அவளுடைய சிறப்பைப்பற்றிப் புகழ்ந்து பேசி தமது பொழுதையெல்லாம் வீண் பொழுதாகப் போக்கிக் கொண்டிருந்தனர். பெருத்த பெருத்த மகாராஜாக்களெல்லாம் அவளுடன் தனிமையில் ஒருவார்த்தை சொன்னாலும் தமது ஜென்மம் கடைத்தேறி விடுமென்று நினைத்ததன்றி, அவள் பொருட்டு தமது உடல் பொருள் ஆவி ஆகிய சகலத்தையும் அர்ப்பணம் செய்யத் தயாராகவிருந்தனர். இரகசியமாக அவளுக்கு ஒவ்வொரு நாளும் நூறு கடிதங்களுக்குமேல் தபால் மூலமாகவும் ஆட்கள் மூலமாகவும் அனுப்பப்பட்டு வந்தன. அவள் எதையும் திறந்துகூடப் பாராமல், அப்படியே அடுப்பிற்குள் எறிந்து விடுவாள். அவளை பலவந்தமாகத் தூக்கிக்கொண்டு போய்விடவேண்டுமென்று பல சமஸ்தானாதிபதிகள் நினைத்தனர். ஆனால் அவள் எந்த இடத்தில் தங்கியிருந்தாளென்பதை ஈசுவரனும் காணமுடியாமலிருந்தது. அந்த நாடகத்தில் நடித்த பெண்களில் முக்கியமான சில நடிகள் மாத்திரம் தமக்கு விருப்பமான இடங்களில் சுயேச்சையாக வசிக்கும்படி அநுமதிக்கப்பட்டிருந்தனர். மற்றைச்சிறுமியர் யாவரும் புரசைவாக்கத்தில் ஒரு தனியான பங்களாவில் நாடகத்தின் எஜமானனுடன் கூடவே அவனது பார்வையிலிருந்தனர். இந்த நாடகம் சென்னைக்குவந்த பிறகு அவர்கள் ஆடிய ஆட்டங்களுக்கெல்லாம் தவறாமல் போனவர்களில் துரைராஜாவும் மாரமங்கலம் மைனரும் முக்கியமானவர்கள்.

கதைத் தொடக்கத்தில் இவ்விருவரும் சீட்டாட உட்கார்ந்தார்களல்லவா? அப்போது கீழே கண்மணியம்மாள் வீணையை மீட்டிப் பாடிய இன்னிசை மேலே எட்டியது. அதைக் கேட்ட மைனர் ஜெமீந்தார், "துரைராஜா! மோகனாங்கியின் பாட்டைக் கேட்ட காதுக்கு, இது எப்படி இருக்கிறது பார்த்தாயா? இது பாட்டாகவே இல்லை. ஒப்பாரி சொல்லி அழுவதைப்போலிருக்கிறது" என்று

கூறி நகைத்தான். தனது தங்கையின் பாட்டை மிகவும் இழிவாக மைனர் தூஷித்ததைக் கேட்டும் துரைராஜா ஆயாசமென்பதே கொள்ளாதவனாய் அதை ஆமோதிப்பவனைப்போல புன்னகை செய்தவனாய் சிட்டாட்டத்தை கவனித்தான். அதன் பிறகு இரண்டொரு நிமிஷநேரம் இருவரும் மௌனமாகவே தமது வேலையைப் பார்த்தனர். திரும்பவும் மைனர் துரைராஜாவைப் பார்த்து "நமது கண்மணிக்கு வீணைகற்றுக் கொடுக்கும் மதனகோபாலன் எவ்வளவு அழகாயிருக்கிறான், பார்த்தாயா? அவனுடைய ஜாதியென்னவென்று சொல்ல உன்னால் முடியுமா? எங்கே, உன் சாமர்த்தியத்தைப் பார்க்கலாம்." என்றான்.

துரைராஜா புன்னகை செய்து "இப்படித்தான் என்னுடைய சாமர்த்தியத்தைப் பார்க்கிறதா? ஒரு பெண்பிள்ளையைக் காட்டி அவள் என்ன ஜாதியென்றால், பத்மினி சித்தினி சங்கினி அத்தினி என்ற ஜாதிகளில் அவள் எதில் சேர்ந்தவளென்பதை உடனே சொல்லிவிடுவேன். ஆண்பிள்ளைகளின் ஜாதியைக் கண்டுபிடிக்க என்னாலாகாது" என்றான்.

அதைக்கேட்ட மைனர் குலுங்கக் குலுங்க நகைத்து "இவ்வளவுதானா உன் சாமர்த்தியம்! இதற்குமுன் இவனைப்பற்றி நான் விசாரிக்கவில்லை. என்றாலும், இவன் ஒரு தாசியின் மகனாய்த்தானிருக்கவேண்டும். அதனாலேதான் வீணை வாசிப்பதில் இவ்வளவு திறமை இருப்பதோடு, உடம்பும் உரித்தகிழங்கைப்போல மொழுமொழுவென்றிருக்கிறது. இவனுடைய முகக்களையும் முகவெட்டும் பெண்பிள்ளையினுடையதைப் போலவே இருக்கின்றன. அதனாலே நான் இவனை முதலில் பார்த்த அன்றைக்கே நான் ஆக்ஷேபித்தேன். என்னுடைய அக்கா விருவருக்கும், இவன் வீணை சொல்லிக் கொடுக்கக் கூடாதென்று நான் அம்மாளோடு நேற்று சாயுங்காலம் கூட சண்டைபோட்டேன். இவன் இங்கேயும் வந்து கண்மணிக்கு வீணைகற்றுக் கொடுப்பது எனக்கு கொஞ்சமும் சம்மதமாயில்லை. நீ எப்படியாவது அத்தையம்மாளிடம் சொல்லி இவன் வருவதை நிறுத்திவிடு. வீணைவாசிக்காவிட்டாலும், கண்மணியை நான் கண்மணியாகவே பாவிப்பேனென்பது உனக்குத் தெரியாதா?" என்றான்.

அதைக்கேட்ட துரைராஜா சந்தோஷப் பார்வையாக மைனரை நோக்கி "அப்படியே செய்யலாம்; அதிருக்கட்டும், மாப்பிள்ளை! கை



யில் செலவுக்கு ஒரு காசுகூட இல்லை. எங்கே போனாலும் கடன்காரர்கள் தொந்தரவு செய்கிறார்கள். பெரியப்பன் மாதாமாதம் எனக்கு அனுப்பும் ஐந்நூறு ரூபாய் ஐந்தே நாளைக்கு வருகிறது. அத்தையம்மாள் கொடுப்பது அடுத்தநாளே போய்விடுகிறது. ஒவ்வொரு மாசமும் பணத்தொல்லையே பெரியதொல்லையாய்ப் போய்விட்டது. இப்போது மொத்தமாக எனக்கு ரூபாய் இரண்டாயிரம் வரையில் கடனிருக்கிறது. இந்த சமயம் நீதான் என்னுடைய மானத்தைக் காப்பாற்ற வேண்டும்." என்றான்.

மைனர்:—இப்போது பங்களாவைவிட்டு வரும்போதுகூட எனக்கும் என்னுடைய அம்மாளுக்கும் பெருத்த சண்டை நடந்தது. பணம் கேட்டால் அவள் கொடுக்கிறதே இல்லை. நான் இவ்வளவு பெரிய சமஸ்தானத்தின் அதிபதியாகப் போகிறவன் என்பதை அவள் கொஞ்சமும் நினைக்கிறதில்லை. இன்னம் ஒருவருஷம் போனால் நான் மேஜராய் விடுவேன். எல்லாரையும் கண்ணில் விரல் விட்டு ஆட்டிவிடுவேன். எனக்கு அம்மாள் ஒருத்தி, வேறு இரண்டு வக்கீல்கள் ஆகிய மூவரும் கார்டியனாக அமைந்திருக்கிறார்களென்பது உனக்குத் தெரிந்த சங்கதி. அம்மாளையாவது மிரட்டி ஏதாவது பணம் வாங்கிவிடலாம். அந்த வக்கீல்கள் பரமலோபிகள். எனக்கு மாசம் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய்தான் கொடுப்போமென்றும் அதற்குமேல் ஒரு காசும் கொடுக்கமாட்டோமென்றும் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார்கள். இனிமேல் வேறுவழி இல்லை. நீ சொன்னபடி நாட்டுக்கோட்டைச்செட்டிகளிடத்தில் பாதித்தொகை வாங்கிக்கொண்டு முழுத்தொகைக்குப் பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டியதுதான் வழி. இன்னம் ஒருவருஷங்கழித்து பணத்தை வாங்கிக் கொள்ளட்டும்—என்றான்.

துரைராஜா:—அப்படியானால் எனக்குத் தெரிந்தவன் அண்ணாமலை செட்டி என்று ஒருவன் இருக்கிறான். அவனிடம் இப்போதே போய் காரியத்தை முடிப்போம். எனக்கு இரண்டாயிரம் வேண்டும். உனக்கு எவ்வளவு வேண்டும்?

மைனர்:—எனக்கு மூவாயிரமாவது வேண்டும்.

துரைராஜா:—சரி; மொத்தத்தில் ஐயாயிரம் வேண்டும். இரண்டு வட்டி போட்டு பதினாயிரத்துக்குப் பத்திரம் எழுதிக்கொடுத்தால் பணம் வந்துவிடும்.

மைனர்:—போனால் போகிறது, அப்படியே எழுதிக் கொடுத்து விடுவோம். அதை மாத்திரம் முடிப்பது போதாது. இன்னொரு முக்கியமான காரியமிருக்கிறது. அதற்காகவே நான் அவசரத்துடன் இங்கே ஓடிவந்தேன். இல்லாவிட்டால், நேற்று ராத்திரி தூக்கமில்லாம லிருந்ததற்கு இன்று பகல் முழுதும் தூங்கி இருப்பேன். அந்த விஷயத்தை முடித்துக் கொடுப்பதும் உன்னுடைய பொறுப்பு. நீ மனது வைத்தால் அந்தக் காரியம் அவசியம் முடியும்.

துரைராஜா:—(புன் சிரிப்போடு), அது என்னாலாகக் கூடியதா யிருந்தால், அடுத்த நொடியிலேயே செய்து விடுகிறேன். அது என்ன காரியம்? சொல்.

மைனர்:—ஓகோ! ஒன்றையு மறியாதவனைப்போலக் கேட்கிறாயே! அது இன்னதென்று உனக்குத் தெரியாதோ?

துரைராஜா:—தெரியவில்லையே.

மைனர்:—பெருத்த பெருத்த கைகளையெல்லாம் பார்த்த உனக்கு இது ஒரு அரிய விஷயமல்ல. நேற்று ராத்திரி மோகனாங்கி பாடிக்கொண்டு பார்சி டான்ஸ் ஆடியதைக் கண்ட முதல் என் மனம் அப்படியே தவித்து டான்ஸ் ஆடிக்கொண்டே இருக்கிறது. தேகம் கொதித்து கட்டுக் கடங்காமல் பதறி நிற்கிறது. நான் படும் வாதனையை கொஞ்சமும் சகிக்கவே முடியவில்லை. இதனால் உயிர் போனாலும் சரி; என்னுடைய சொத்தெல்லாம் ஒழிந்தாலும் கவலை இல்லை. எப்படியாவது அந்தப் பெண்ணரசியிடம் ஒரு பேச்சாயினும் பேசினால் போதும். அவளுடன் தனிமையில் பேசும்படியாக, நீ பழக்கம் செய்து வைத்து விடவேண்டும். நீ மனசு வைத்தால், இது ஒரு பெரிய காரியமல்ல—என்றான்.

துரைராஜா:—(ஆசியமாக) சரி; சரி; நல்ல வேலைதான். இது கணமணிக்குத் தெரிந்தால், அவள் என்ன சொல்வாள் தெரியுமா? அவளுடைய சொந்த தமயனாகிய நானே, மாப்பிள்ளைக்கும் கூத்தாடிச்சிக்கும் ஸ்நேகம் செய்து வைக்கிறதென்றால், அவளும் அத்தையம்மாளும், என்ன செய்வார்கள் தெரியுமா? என்னை உடனே பங்களாவை விட்டுத் துரத்திவிடுவார்கள்—என்றான்.



முன்றூல் உட்கார்ந்திருந்தது ஒரு பெண் என்றுகண்ட மைனர் பெரிதும் வியப்பும் அச்சரியமுங்கொண்டு தவிக்கலானன் (63-வது பக்கம்).



மைனர்:—(புன் சிரிப்பாக) துரத்திவிட்டால் நல்லதாய்விட்டது. என்னுடைய பங்களாவுக்கு வந்துவிடு. முதலில் இந்த சங்கதி அவர்களுக்கு தெரியவே போகிறதில்லை. தெரிந்தாலும், அதனுல் குற்றமுமில்லை. நான் மேஜர்ஆக இன்னம் ஒருவருஷகாலத்துக்கு மேலிருக்கிறது. அதன் பிறகே எனக்குக் கலியாணம் செய்ய வேண்டுமென்று என் தகப்பனருடைய மரணசாசனத்தில் எழுதி வைத்திருக்கிறுர். ஒன்றரை வருஷத்துக்குப் பிறகு கண்மணியை யடைவதை நினைத்து இப்போதுமுதல் நான் சந்நியாசியாக இருந்து தபசு பண்ணவேண்டுமோ?—என்றுன்.

அதைக் கேட்ட துரைராஜா "இல்லை யாப்பிளை! நான் விளையாட்டுக்குச் சொன்னேன். ஆண்பிள்ளை யென்றுல் ஆயிரம் இரகசியம் இருக்கும். இதென்ன துவாபரயுகமா? அந்த யுகத்திலேயே ராமர் ஒருவர்தானே ஏகபத்னி விரதராயிருந்தார். மற்றவர் இராவணனைப் போலத்தானே இருந்தார்கள். இந்தக்காலத்தில் கட்டுப்பாட்டில் நிற்கும்படி யாராவது சொன்னுல் புருஷர்கள் கேட்பார்களா? அது இல்லை. அதிலும் இந்த மோகனங்கியைக் கண்டால் யாருக்குத்தான் மனசு கலங்காது. அந்த ராமரே இவளைப் பார்த்திருந்தால், அவருடைய ஏகபத்னி விரதமெல்லாம் பஞ்சாய்ப் பறந்துபோயிருக்காதா; முதலில், நேற்றுமுதல் என் மனம் படும் பாட்டை என்னவென்று சொல்லப்போகிறேன். முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதுபோல நான் இன்று பகல் முழுதும் இன்பக் கனவு கண்டு கொண்டே தூங்கினேன். இந்த விஷயங்களில் அதிகமாக உழன்ற எனது நிலைமையே இப்படி இருந்தால், அவ்வளவு அநுபோக மில்லாத உன்னைப்பற்றி சொல்லவும் வேண்டுமா? இந்த விஷயத்தில் எனக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை. ஆனுல் நம்முடைய ஆசை பலிக்க வேண்டுமே. அதுதான் யோசனையாக இருக்கிறது. அவள் சிவந்துச் சரக்காயிருக்கிறுளே! முதலில், அவள் எங்கிருக்கிறுளென்பதே வெளியில் தெரியாமலல்லவா மறைத்துக் கொண்டிருக்கிறுள். நாடகக் கம்பெனியின் எஜமானுக்கும், அதன் மானேஜருக்கும் அவளிருக்கும் இடம் தெரியுமாம். அவர்கள் உயிர் போவதானுலும் அதை வெளியிடமாட்டார்கள். அவளுடைய இருப்பிடத்தை முதலில் கண்டு பிடிக்க வழிதேடவேண்டும்.

மைனர்:—அதை எளிதில் கண்டுபிடித்து விடலாம். அவள் ராத்திரியில் நாடகம் முடிந்த பிறகு ஏதாவது ஒரு வண்டியில் ஏறிக்

சொன்னதுபோல தன் வீட்டுக்குப் போனான். [illegible] வண்டி யுடன் ஒரு ஆளை தயாராக வைத்திருந்து, வண்டியைத் தொடர்ந்து போகும்படி செய்தால், அவன் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்துச் சொல்லுகிறான்.

துரைராஜா—அது சரி. யோசனைதான். அப்படியே செய்ய லாம். என்னுடைய தவிசுப்பிள்ளை பொன்னம்பலத்தை இந்த வே லைக்கென்றே [illegible] வைத்திருக்கிறேன். இன்று ராத்திரி அவனை விட்டால், அவன் [illegible] போனாலும் கூடவே போ [illegible] பார்த்துக் கொண்டு வந்து விடுவான். அது போகட்டும். இடம் நிச்சயமாக வைத்துக்கொள்வோம். அதன் பிறகு அவளிடம் எப்படி நெருங்குகிறது. அவளோடு கூடவே ஒரு கிழவி இருக்கிற ளாம். [illegible] அவள் வேட்டை நாயைப்போல. [illegible] அனுப்பிவிடுகிறாள். [illegible] மூலமாக [illegible] [illegible] போட்டுவிடுகிறா ளாம். [illegible] மகாராஜா எவ்வளவோ [illegible] விட்டார். [illegible] வைத்து அனுப்பினாம். [illegible] கேட்டையே நெருப்பில் போட்டு எரித்துவிட்டாளாமே. அப் படிப்பட்ட [illegible] எப்படி நெருங்குகிறது?

[illegible]—(சிறிது ஆழ்ந்து யோசனை செய்து) முதலில் இடம் [illegible] பிறகு எப்படியாவது [illegible] [illegible] சௌந்தரியவதி முதலி [illegible] சம்பளமும் பணம் இனி [illegible] எப்படி விழுந்த [illegible] கட்டினான். அதன்படி செய்வோம். [illegible] பொன்னம்பலம் தவறாமல் இடத்தை மாத்திரம் கண் டுபிடித்து விட்டால், நான் [illegible], அந்த [illegible] அல்லது [illegible] [illegible] போட்டுக்கொண்டு அவளிருக்கு மிடத்துக்குள் [illegible] கொண்டு வருகிறேன். அதன் பே [illegible] காரியத்தை முடிப்போம்—என்றான்.

[illegible] துரைராஜா [illegible] "பலே! [illegible] தெரிந்த யோசனைக்கு [illegible] சொல்லு



போகிறேன். அப்படியே செய்வோம்." என்று கூறிய வண்ணம் தவிசுப்பிள்ளை பொன்னம்பலத்தை அழைத்து, அன்றிரவில் அவன் செய்யவேண்டிய காரியத்தை அவனுக்குத் தெரிவித்து, அதற்குத் தேவையான தந்திர யுக்திகளையெல்லாம் சொல்லிக் கொடுத்து, அவனை அனுப்பிய பிறகு இருவரும் எழுந்தனர். அன்று ஏழுமணி முதல் ஒன்பதரை மணிவரையில் குலேபக்காவலி என்னும் நாடகம் வி. பி. ஹாலில் நடத்தப்படுமென்ற விளம்பரம் வெளியிடப்பட்டிருந்த தாதலின், செட்டியாரிடம் போய் கடன் விஷயத்தை முடித்துக் கொண்டு நேராக அப்படியே வி.பி. ஹாலுக்கு தாமும் முன்னதாகவே போய்விடவேண்டுமென்னும் எண்ணத்துடன் அவர்களிருவரும் பங்க ளாவைவிட்டு வெளிக்கிளம்பினர்.

---

## 2-வது அதிகாரம்.

### குலேபக்காவலி—மோகனாங்கி

அன்றுமாலை 6-மணி சமயமாயிற்று; நாடகம் நடத்தப்படும் வி. பி. ஹாலில் ஜனங்கள் அபரிமிதமாகக் கூடிவிட்டனர். அதன் கூடம் முழுதும் கூக்குரலும் குதூகலமுமே நிறைப்பட்டன. மண் ணாசை, பொன்னாசை, பெண்ணாசை யென்னும் மூன்று பெரும் பேய்கள் முற்றிலும் வெறிகொண்டு கோபம் மோகம் லோபம் மதம் சண்டை பொறாமை கபடு தூபம் தரித்திரம் முதலிய பலவகைப் பட்ட துர்க்குணங்களான பிள்ளை குட்டிகளுடன் நிருத்தனம் செய் யும் நாடக மேடையாகிய வெளியுலகத்துக்கு முற்றிலும் மாறாக, அந்த நாடகக்கும்பலாகிய சிறிய உலகம் சந்தோஷமே நிறைந்ததாய்த் தோன்றியது. மிகவும் விசாலமாகவிருந்த அந்தக் கூடத்தில் எங்கும் விண்மணிகளைப்போல சரம் சரமாய்த் தொங்கிய மின்சார விளக்கு களின் ஜோதி கோடி சூரியப்பிரகாசமாய் ஜ்வலித்தது. சப்தவருண ங்களையுடைய காகிதங்களால், அழகழகாய்ச் சித்திரிக்கப்பட்ட தோர ணங்களும் பூக்களும் வாணவிற்களின் அணிவகுப்போ, தேவேந்திர சபையோ, அன்றி கந்தருவ உலகத்தில் மன்மதனும் இரதியும் கொ லுவிருக்க அமைக்கப்பட்ட அற்புத அலங்காரமோ வென்னத்தோ ன்றி காண்போர் கண்களையும் மனத்தையும் கவர்ந்தன. ஆயிரக்கண க்கில் வரிசை வரிசையாய்ப் பரப்பப்பட்டிருந்த வழுவழுப்பான கருங் காலி நாற்காலிகளில் எங்கு பார்த்தாலும் வைரக் கடுக்கன்களும்

வைரக் கம்மல்களும் ஜரிகைகளும் பட்டாடைகளுமே மயமாய்த்தோன்றின. பெருமையால் நிமிர்ந்த ராவ்பகதூர்களும் திவான் பகதூர்களும், செல்வத்தால் செருக்கிய செட்டிமார்களும், வாய்மையால் வலுத்த வக்கீல் மார்களும், அலங்காரப் பிரியர்களும், டாம்பீகர்களான கோலாகல புருஷர்களும், மனமோகன சுந்தரரூபங்களைப்பெற்ற யௌவனப் பெண்டிரும் புருஷரும் சிரித்த முகமும்-இனித்த சொற்களுமாய்க் காணப்பட்டு இன்ப மயமாயிருந்தனர். ஆனால் வெளிமயக்கான அந்தப்பிரகாசத்திற்குள் நுழைந்து அவர்களது அந்தரங்கமான மனோ நிலைமையை ஆராயப்புகுந்தால், அங்கு உண்மையான ஆநந்தமும், திருப்தியும், சாந்தமான அமைதியுமிருக்கக் காண்பது மாத்திரம் சந்தேகம். உண்மையில் தாம் பரம ஏழ்மை நிலைமையிலிருக்கிறோமென்பதை மறைத்து தாம் பெரிய முதலாளிகள் என்னும் எண்ணத்தை பிறர் மனதில் உண்டாக்கும் பொருட்டு ஜரிகை வேஷ்டிகளும் பட்டுச் சட்டைகளும் பெருத்த தலைப்பாகைகளும் அணிந்திருந்தவர் பல்லோர். மகாகொடிய பொறாமைகளையும் கவலைகளையும் கொண்ட தமது மனதை வெளியில் காட்டாமல் மறைப்பதன் பொருட்டு புன்னகை செய்தோர் பலர். ஜாதி ரோஜா மல்லிகை முதலிய புஷ்பங்களும் வைர ஆபரணங்களும் நிறைந்த சிரங்களுக்குள் பித்தமும் பேதைமையும் அற்குணங்களும் வெறியும் அஞ்ஞான இருளும் நிறைந்திருக்கப்பெற்றவர் அநந்தம். வேறு பலரிடத்தில் விலை மதிப்பற்ற பதக்கங்களும், முத்துமாலைகளும், வைர சரங்களும் அழகுசெய்த மார்புகளுக்குள் ஆசைகளும் பலவகைப்பட்ட மோக விகாரங்களும் கொந்தளித்துக் கொண்டிருந்தன. புது நாகரிகங்கற்ற பலர் தமது முகங்களிலும் வெண்மையான மாவைப்பூசி நாடக வேஷங்களைப் போல மினுக்கி காண்போர் கண்களுக்கு விருந்தாயமைந்திருந்தனர்; ஆதலின் அந்த அழகிய மாளிகையில் இரண்டு வகையான நாடகங்கள நடிக்கப்பட்டன. மேடைமீதிருந்த நாடகக்காரர்கள் குலேபகாவலியும், கூடத்திலிருந்த ஜனங்கள் பிரபஞ்ச லீலா விநோதமும் நடத்திக் கொண்டிருந்தனர்.

முதல் வரிசையிலிருந்த சோபாக்களில் தேனாம்பேட்டை வாசிகளான சமஸ்தானாதிபதிகளும், மகாபிரபுக்களும் நிறைந்து கம்பீரமாக உட்கார்ந்திருந்தனர்; அவர்களினிடையில் நமது துரைராஜாவும், மாரமங்கலம் ஜமீன்தாரையும் இருந்தனரென்று சொல்வது மிகையாகும். ஏனென்றால் அச்சில்லாமல் தேரோடாதல்லவா? அவர்களில்லாவிடில் அங்கு வந்திருந்தோருக்கு மகாஜனங்களென்ற பெயர் எப்படிப்பொருந்தும்? ஆகையால் அவர்கள் மற்றவர் வருவதற்கு ஒரு நாழிகைக்கு முன்னரே வந்துவிட்டனர். உட்புறத்தில் நிற்கவும் இடமில்லையென்பது தெரிந்தும், நாடகக்காரர்கள் மேன்மேலும் பணத்தைப்பிடுங்கிக்கொண்டு ஜனங்களை உள்ளே தள்ளித்தள்ளி அடைத்துக்கொண்டே இருந்தமையால், எலி நுழைய இடம்போதாத இண்டு இடுக்கு மூலை முடுக்குகளிலெல்லாம் ஜனங்கள் நெருக்கிக்கொண்டு, மோகனாங்கியை மாத்திரம் பார்த்தால் போதுமென்று ஓணானைப் போல தலைகளை நீட்டிக்கொண்டிருந்தனர். சிலருக்குக் கால்கள் நசுங்கித் துவையலாயின; சில பெண்டிரின் கம்மல் தொங்கிய காதுகள் அறுந்துபோயின. சிறிது தாமதமாய் வந்த வக்கீல்களான மூன்று கிழவர்களின் சிரத்தில் எலிவாலைப்போலத் தொங்கிய குடுமிகள் போனவிடந் தெரியவில்லை. அவர்கள் மோகனாங்கியை மறந்து தங்கள் குடுமிக்களவு இந்தியன் பீனல் கோடின் எந்தப்பிரிவில் சேர்ந்ததென்பதைப்பற்றி யோசித்திருந்தார்கள். புதிதாய் முறுக்கேற்றி தும்பைமலரைப்போல சலவை செய்யப்பட்ட மஸ்லின் சட்டைகள் சக்கை சக்கையாய்க் கிழிந்து கோபித்துக் கொண்டு பலவிடங்களுக்கும்போயின. ஜரிகைத் தலைப்பாகைகளும், ஷோக் அங்கவஸ்திரங்களும் கீழே விழுந்து காலால் துவையுண்டன. சிகரெட்டுப்புகையின் பரிமள கந்தமும் மூச்சுக்காற்றின் கொதிப்பும் நெருக்கத்தினாலுண்டான வியர்வை நாற்றமும் ஒன்றுகூடி அது சுவர்க்கபோகமோ அல்லது நரக வேதனையோ என்ற சந்தேகத்தை யுண்டாக்கிக்கொண்டிருந்தன.



இத்தகைய லீலா விநோதங்களுக் கிடையில் குலேபகாவலி நாடகம் ஆரம்பமாயிற்று. மோகனாஸ்திரம் பாய்வதுபோல மனதைக் கவரக்கூடிய இனிமையான பாடல்களுடனும் வசனங்களுடன் ஒவ்வொரு பெண்மணியும் தோன்றி தனது திறமையைக் காட்ட வாரம்பித்தனள். கடைசியாக, தாசிவேஷம் தரித்துத் தோன்றிய மோகனாங்கியைக் கண்டவுடன் ஜனங்கள் அடக்கமுடியாத ஆவேசமும், வெறியும், கரைகடந்த குதூகலமும், பெருமகிழ்வும் கொண்டு தம்மை மறந்து, கைகொட்டி ஆர்ப்பரித்தனர். அவள் வரும்பொழுதே யாவரும் கண்டு திகைக்கும்படியாக பார்சி நடனமாகிய வண்ணம் ஓர் இந்துஸ்தானிப் பாட்டை எடுத்து ஜிலுஜிலென்று பன்னீர் தெளிப்பதைப்போல மகாஜனங்களின் செவிகளில் தூவிக்கொண்டு

விண்ணுலகி னின்று தெய்வகன்னிகை சிறகுகளுடன் வந்திறங்குவதைப்போல

"கற்றைவிரி பொற்சடை மயிர்த்துறு கலாபம்
சுற்றுமணி புக்கவிழ மிக்கிடை துவன்றி
வித்தவழ வாணிபிர மெய்யணிகள் மின்னச்
சித்திடை நடக்கவொளிர் சேடிபெயர்த்து"

மேடைமீது காட்சி கொடுத்தாள். ஆகா! அவளது அற்புத வடிவத்தை என்னவென்று சொல்வது! ஒப்புயர்வில்லாத அற்புத வனப்போடு தோன்றிய அந்த அணங்கின் அழகை வருணிக்க தெய்வ பாஷையான வடமொழியிலும் தக்க சொற்கள் இல்லையென்றே கூற வேண்டும். அதுகாறும் கூக்குரல் செய்துகொண்டிருந்த மகாஜனங்கள் யாவரும் உயிரற்ற பதுமைகள்போல பேச்சுமூச்சின்றி வாயைப் பிளந்துகொண்டு அப்படியப்படியே திகைத்து, அவள்மீது சென்ற தமது நாட்டத்தையும் மனத்தையும் தம் வசம் திருப்ப சிறிதும் வல்லமையற்றவராய் பிரமிப்படைந்து தேனில் வீழ்ந்த ஈக்கள்போல இன்ப வெள்ளத்தில் கிடந்து தத்தளித்தனர்; எள் விழும் சப்தமும் நன்றாகக் கேட்கத்தக்கபடி நிச்சப்தம் குடிகொண்டிருந்தது.

அந்தப் பெண்பாவையின் வயது பதினெட்டுக்குமேல் இராது. பதினான்கு லோகங்களிலுமுள்ள அழகிற் சிறந்த யௌவன மடந்தையரின் லக்ஷணங்களை யெல்லாம் அள்ளி ஒன்று சேர்த்துக் கடைந்தெடுத்த அமிர்த ஸாரமே அந்த வடிவமாக அமைந்து தோன்றி, மனதைக் கொள்ளைகொண்டதோ வென விளங்கி,

"பொன்னெழுது பூவிலுறை பூவையெழில் பூவைப்
பின்னெழில்கொள் வாள்விழி பிறழ்ந்தொளிர் முகத்தாள்
கன்னியெழில் கொண்டது கலைத்தட மணித்தேர்
மின்னிழிவ தன்மையிது விண்ணிழிவ தென்ன
கானிலுயர் கற்பகம் உயிர்த்த கதிர்வல்லி
மேனிகனி பெற்றவிளை காமநெறி வாசத்
தேனின்மொழி யுற்றினிய செவ்விகனி பெற்றோர்
மானின்விழி பெற்றமயில் வந்ததென வந்தாள்"

ஆனால், அத்தகைய அற்புத ஜோதி நிறைந்த பெண் வடிவத்தை இவ்வுலகில் கண்படைத்தவன் எவனும் கண்டிரானென்பது திண்ணம். சிருஷ்டி காலந்தொட்டு எத்தனையோ கோடி ரதிதேவி



களைப் படைத்த பிரம்மதேவனுக்கே மோகனாங்கியின் அழகு அது காறும் காணாத புதுமையாயிருந்த தென்றால், மற்றவருக்கு அது எங்ஙனமிருந்திருக்குமென்பது கூறாமலே விளங்கும். அங்கு கூடியிருந்தோர்களது மனதில் அதற்கு முன் வதைத்திருந்த கவலைகளும் துன்பங்களும் துயரங்களும் சஞ்சலங்களும் தெய்வாம்சம் பொருந்தியிருந்த அந்த மின்னற்கொடியின் தோற்றத்தால் மறைந்து, சூரியன்முன் இருளைப்போல ஓடி யொளிந்தன. கானகத்திலுள்ள மான்கன்றுகள் பூமியில் கால்கள் வைப்பது தெரியாமல் எவ்வாறு துள்ளிக்குதிக்குமோ அவ்வாறு, அவள் நடனம் செய்தபோது, அவளது அற்புத மேனி பட்டினாலானதோ, பஞ்சினாலானதோ, காற்றினாலானதோ, அல்லது அவையாவற்றினும் இலேசான சொப்பனத்தினால் ஆனதோ என்று ஐயுறும்படி மண்ணிலுமின்றி விண்ணிலுமின்றி பம்பரம்போலச் சுழன்றது. அவளது மனோவேகத்திற்கு சமமாகத் தொடர்ந்து சென்று வளைந்து கொடுத்த அவளது தேகம் நடுத்தர உயரமும், அழகிய பருமனும், அதனதனிடத்தில் அதிகம் குறைவு என்பதின்றி உன்னதமாக உயர்ந்து சரிந்த தசைப்பிடிப்பும் கவிந்த கன்னங்கள், வளைந்த கழுத்து, பரந்தமார்பு, துவண்ட இடை, கடைந்தெடுத்த கைகால்கள் முதலிய எல்லா அங்கங்களும் சாமுத்திரிகா லக்ஷணத்திற்கு ஒரு இம்மியளவும் பிசகாமல், பார்க்கப் பதினாயிரம் கண்வேண்டிய அபார சிருஷ்டியாக விருந்தன. அவளது சரீரத்தின் மேற்புறம் சருமத்தாலானதோ, மெருகு கொடுத்த தங்கத் தகட்டாலினும் தந்தத்தகட்டாலினும் கொண்டு பொருத்தப்பட்டதோ வென்ன கண்ணாடிபோல வழுவழுப்பும் பளபளப்பு மமைந்து, காண்போர் முகம் அதில் பிரதிபிம்பித்தது. பூரண சந்திரோதயமோ, தளையவிழ்ந்து மலர்ந்து நகைத்த செந்தாமரை மலரோ, இனிமையையும், குளிர்ச்சியையும் அள்ளி வீசிய அமிர்த கலசமோ வென்று தோன்றிய அவளது சுந்தரவதனம்,

"கொண்டலின் குழலி பாம்பல் குனிசிலை வன்னே கொற்றக்
கெண்டையின் தாளை மென்றிக் கேண்மைய கிடந்த திங்கள்
மண்டில வதன மென்று வைத்தனன் விதியே நீயப்
புண்டரீ கத்தை யுற்ற பொழுதது பொருந்தித் தேர்வாய்"

என்று வருணிக்கத் தக்கதாய், இரதிதேவி தனது மோகனாஸ்திர பரிவாரங்களுடன் கொலுவீற்றிருந்த வசீகர சபா மண்டபம்

போல, வருணிக்க இயலாத வாமக் காஞ்சியமாய் அவளது தேகமான பதினான்கு லோகங்களுக்கும் மேலே நின்ற சுவர்க்கலோகமாய்க் காணப்பட்டது.

சீதளாகாரமான அத்தகைய வதனத்தின் வசீகரத் தன்மையை பதினாயிர மடங்கு சிறப்பித்துக் காட்டிய அவளது சிரத்தின் அளகபாரமோ சொல்லிலடங்கா எழில் வாய்ந்ததாய்,

"காரினைக் கழித்துக் கட்டிக் கள்ளினோ டாவி சூட்டிப்
பேரிருட் பிழம்பு தோய்த்து நெறிவுறீப் பிறங்கு கற்றைச்
சோர்குழல் தொகுதிச் சூழல் சுடர்மையென் நிறைய நம்மா
நேர்மையைப் பருமை செய்த நிறைகுறைக் கூந்தல் நீத்தம்"

என்ற லக்ஷணப்படி யமைந்திருந்தது. இத்தகைய வைபவங்களுக் கிடையில் நின்ற அவளது கண்ணிணைகள் ஒரு நொடியில் மனிதரைக் கொல்லும் விஷமாகவும், அதே நொடியில் தமது மலர்ச்சியால் உயிர்கொடுக்கும் அமிர்த சஞ்சீவியாகவும் அமைந்து முகத்தைக் காட்டிலும் விசாலமாய் காதளவு ஓடி நின்று,

"பெரியவாய்ப் பரவை யொவ்வா பிறிதொன்று நினைந்து பேச
அரியவாய் ஒருவ ருள்ளத் தடக்குவ வல்ல வுண்மை
தெரிய ஆயிரக்கால் நோக்கில் தேவர்க்கும் தெய்வ மெய்யத்
துரியவாய் வெளிய வாகும் வார்தடம் கண்கள் அம்மா"

என்று யாவரும் வியக்கும் வண்ணம் அமைந்து,

"கஞ்சிடை யமிழ்தம் கூட்டி காட்டங்க ளாலே மென்மைச்
செஞ்சவே நீண்டு மீண்டு சேயரி சிதறித் தீய
வஞ்சமும் களவு மின்று மதைபெற மதர்த்த கண்கள்
அஞ்சன மிறையோ கண்ணன் வண்ணமோ அறிதல் தேற்றும்"

என்று, கள்ளம் கபடம் முதலிய எத்தகைய குற்றங்களுக்கும் இடமின்றி கூர்மையான புத்தியையும் மேன்மைக் குணங்களையும் பரிசுத்தமான மனதையும் வெளிப்படுத்தின.

இவ்வாறு உச்சி முதல் உள்ளங்கால் வரையிலுள்ள ஒவ்வொரு அங்கமும் மகா சிரேஷ்டமாய் அமைந்திருந்தது. இத்தகைய தனிச் சிறப்பு வாய்ந்த வானுலகத்து மங்கையான மோகனாங்கி நாடகமேடையில் குயில்போலப் பாடி மயில்போல ஆடி அன்னநடை நடந்து



கிளிபோல மொழிந்து தனக்கிணைதானேயென நடித்து, ஜனங்களின்மீது மோகனாஸ்திரப் பிரயோகம் செய்து, அவர்களது மதியை மயக்கிப் பித்தராக்கிப் பிரமிக்கச்செய்தாள். அங்கு கூடியிருந்த கிழவர்முதல் சிறு குழந்தை வரையிலுள்ள சகலரும் கலக்கிப்போய் திக்பிரமைகொண்டு தடுமாறினர். தாமே அழகில் சிறந்தவரென்று அகங்காரம் கொண்டு செருக்குற்றிருந்த பெண்டிர் யாவரும் திகைத்து வெட்குற்றிருந்தனர். அவளே யாவிலும் மேம்பட்ட ஜாதிஜோதி என்ற நினைவை அத்தகைய மகளிர் தமது மனதிற் குள்ளாயினும் கொள்ள நேர்ந்தது. முன் வரிசையில் உட்கார்ந்திருந்த துரைராஜாவும் மாசமங்கலம் மைனரும் தேன்குடித்த நரிகள்போல மதியிழந்து அறிவழிந்து மோகாவேசங்கொண்டு எப்படியாகிலும் அவளது நட்பை சம்பாதித்துக் கொள்ளவேண்டுமென்ற உறுதியை முன்னிலும் அதிகமாகக் கொண்டவர்களா யிருந்தனர். அங்கிருந்த ஆண்பாலரில் ஒவ்வொருவரும் அத்தகைய துராசைகொண்டனரென்றே கூறவேண்டும். ஆனால் அங்கு ஒரு மூலையிலிருந்த வித்வானான மதனகோபாலன் ஒருவனே அத்தகைய துராசை கொள்ளாமல், மோகனாங்கியின் மேம்பாடுகளைப் பற்றி உண்மையான பெருமையும், ஆநந்தமு மடைந்தவனாய், அவளிடத்தில் மதிப்பும் மரியாதையும் வைத்தான்.

குவலயக்காவலியின் ஒரு காட்சி முடிந்து மறுகாட்சி தயாராகும்போது ஜனங்கள் கூச்சலிடுவார்கள். மோகனாங்கி திரும்பவும் எப்போது வருவாள் வருவாளென்று ஆவலோடு காத்திருப்பார்கள். மற்ற நடிகர்கள் தோன்றினால், அவர்களை தூஷித்து, உள்ளே போகும்படி கூறி பகற்றமான மொழிகளை உபயோகிப்பார்கள். மோகனாங்கி மறுபடி தோன்றினால் முன்போல வெறிகொண்டு தலைவிரித்து ஆடுவார்கள். இவ்வாறு அந்த ஜெகன்மோகினி அன்றிரவு நெடுநேரம் வரையில் அந்த மகாஜனங்களை குரங்குகளைப்போல ஆடச் செய்தனள், ஒவ்வொரு காட்சியிலும் அவளுக்கு எண்ணிறந்த தங்கப்பதக்கங்களும், புஷ்ப ஹாரங்களும், வைர மோதிரங்களும், பட்டாடைகளும் வந்து குவிந்துகொண்டிருந்தன. கரகோஷங்களும், சிரக்கம்பங்களும், சந்தோஷக் கூச்சல்களும் கடைசி வரையில் அதிகரித்துக்கொண்டே போயின. கடைசியில் நாடகம் முடிவடைந்தது. அதுகாறும் மூட்டைகள்போல ஒருவர்மேல் ஒருவராய் அழுக்கிக்கொண்டு கிடந்த

ஜனங்கள் யாவரும் சமுத்திர கோஷம்போல ஆரவாரித்து எழுந்து தாறுமாறாகப் புகுந்து ஒருவர்மீதொருவர் விழுந்து தகைத்தவண்ணம் வெளியிற் செல்ல வாரம்பித்தனர். சிலர் சிலராய் உள்ளே சென்றதை விட, யாவரும் ஒரே காலத்தில் வெளிப்பட முயன்றது மகா கோரமான காட்சியாக விருந்தது. குழந்தைகளை இழந்தோர் சிலர்; ஆபரணங்களைத் தொலைத்தோர் பலர். ஒருவர் தவறாமல் எல்லோரும் தமது மனதையும் மனதின் நல்ல நிலைமையையும் மோகனாங்கியிடம் பறிகொடுத்துத் திரும்பினோராகவே இருந்தனர்.

இவ்வாறு ஜனங்கள் எல்லோரும் வெளியில் போக அரைநாழிகைசென்றது. மோகனாங்கி தோன்றி ஆடிய இடத்தை விட்டு வெளியில் போக மனமற்றவராய் இன்னமும் சிறிது உள்ளே நின்றோரான சிலர் பலவந்தமாக வெளிப்படுத்தப்பட்டனர். அந்த நாடகத்தில் நடித்த யாவரும் வெளியில் போவதற்கு மேடையின் பின்புறத்தில் ஒரு வழி இருந்தது. அந்த வழியின் வெளிவாசலில் நூற்றுக்கணக்கான ஜனங்கள் நடிகரெல்லோரும் போவதைப் பார்க்க வேண்டுமென்னும் ஆசையோடு நின்றனர். அவர்களுக்காக எண்ணிறந்த வண்டிகளும் சாரட்டுகளும் தயாராக நின்றன. அவ்விடத்தில் தஞ்சை ராஜாவின் தவிசுப்பிள்ளையான பொன்னம்பலமும் ஒரு பைசைகில் வண்டியை வைத்துக்கொண்டு, உள்ளே இருந்து வந்தவரை உற்று நோக்கியவண்ணமிருந்தான்.

அரைமணி நேரம் சென்றது; அதுவரையில் வேஷக்காரிகளில் ஒருத்தியும் வெளிப்படவில்லையாதலால், அங்குகூடி நின்ற ஜனங்களில் பெரும்பாலோர் அவ்விடத்தை விட்டுச் சென்றனர். அதன் பிறகு, உட்புறத்திலிருந்த வேஷங்களைந்த ஸ்திரீகளும் மடந்தையரும் தனியாகவும் இருவர் மூவராய்க் கூடி சம்பாஷித்த வண்ணமும் வெளிப்பட்டனர். அவர்களை புரசைவாக்கத்திற்கு அழைத்துப்போகும் பொருட்டு குத்தகையாக அமர்த்தப்பட்டிருந்த ஆறு குதிரை வண்டிகள் தயாராக நின்றன. கொட்டகையின் வேலைக்காரர் இருவர் அந்தப் பெண்களுடன் கூடவே வெளியில் வந்து ஒவ்வொரு வண்டியாக வாசற்படியண்டை கொணர்ந்து வண்டிக்கு நால்வர் வீதம் பெண்களை உட்கார வைத்து வண்டிகளை யனுப்பியவண்ணமிருந்தனர். பொன்னம்பலம் அருகில் நெருங்கி வண்டியண்டையில் ஏறிய பெண்மணிகளைக் கடைக்கண்ணால் உற்று நோக்கியவண்ணமிருந்தான். அதன் பிறகு



வேறு சில மங்கையர் வெளிப்பட்டனர். அவர்கள் தமது சொந்த ஜாகைகளில் வெவ்வேறு திக்குகளில் இருந்தவர்களாதலால், அவர்களுடைய உறவினரோ நட்பினரோ வண்டிகளுடன் வெளியில் தயாராகக் காத்திருந்து அவர்களை அழைத்துச் சென்றனர். அவர்களிலும் மோகனாங்கி காணப்படவில்லை. அதன் பிறகு ஒரு நாழிகை சென்றது; வேறு எவரும் வரவில்லை. பொன்னம்பலம் இமைகொட்டாமல் கவனித்துக்கொண்டே யிருந்தான். அப்போது அவ்விடத்தில் ஒற்றைக்குதிரை பூட்டப்பெற்ற ஒரு அழகிய பெட்டிவண்டி வந்து நின்றது. அது ஜன்னல்களால் நன்றாக மூடப்பட்டிருந்தது. வண்டி புதியதுபோல பளபளவென்று மின்னியது. அந்த வண்டி வந்து கால்நாழிகை யானவுடன், வி. பி. ஹாலுக்குள்ளிருந்து இன்னொரு ஸ்திரீ வெளிப்பட்டாள். அவள் மஞ்சள் பட்டில் ஜரிகைப்புள்ளிகள் நிறைந்த சேலையும் உயர்ந்த ஆபரணங்களையும் அணிந்திருந்ததாகத் தெரிந்தது. ஆனால் அவள் ஒரு பெருத்த சால்வையால் தலை முதல் கால்வரையில் நன்றாகப் போர்த்திக் கொண்டிருந்தமையால் முகம் சிறிதளவே வெளியில் தெரிந்தது. பொன்னம்பலம் அவளது முகத்தை உற்றுநோக்குமுன் அவள் பெட்டிவண்டிக்கதவைத் திறந்துகொண்டு வண்டிக்குள் நுழைந்து விட்டாள். ஆனால், அவளது உயரம் பருமன் நடையுடை முதலியவற்றினால் அவளே மோகனாங்கி என்று பொன்னம்பலம் எளிதில் கண்டுகொண்டான். தவிர, அந்த நாடகத்தின் மானேஜரே மிகவும் மரியாதையாக அவளை அழைத்து வந்து வண்டியில் ஏற்றிவிட்டுக் கதவைச் சாத்தித் தாளிட்டு வண்டியை ஓட்டும்படி கூற வண்டி புறப்பட்டது. அதனாலும், அவளே மோகனாங்கி யென்று உறுதி செய்து கொண்ட பொன்னம்பலம், பெட்டி வண்டி சிறிது தூரம் போகும்படி விட்டு, தனது பைசைகிளின்மீதேறி உட்கார்ந்து கொண்டு பெட்டிவண்டியைத் தொடர்ந்து சென்றான். வண்டி மறைந்து போகாமலும், பிறர் சந்தேகிக்கும்படி வண்டியிடம் அதிகமாக நெருங்காமலும் சற்று தூரம் பின்னாகவே தொடர்ந்தான்.

வி. பி. ஹாலிலிருந்து புறப்பட்ட பெட்டி வண்டி விசையாகவே ஓடியது. அப்போது இரவு 10 மணி சமயமாதலால், ஜனங்களின் நடமாட்டமும் இல்லாதிருந்தது. பெட்டி வண்டி பெரியமெட்டு ரயில் கேட்டைக் கடந்து ரயில்பாதைக்கும் கூவம் ஆற்றுக்கும் இடையில்

மேற்கே நோக்கிச் செல்லும் பாதைவழியாக ஓடி எழும்பூரைக் கடந்து கோமளேசுவரன்பேட்டை வாராவதிக்கு வந்தது. அவள் கோமளேசுவரன்பேட்டையிலிருப்பவள் என்று ஐயமுற்ற பொன்னம்பலம் அவ்வளவு சமயத்தில் தனது வேலை முடியப்போவது பற்றித் தனக்குள் மகிழ்ச்சியடைந்தவனாய் மிகவும் ஜாக்கிரதையாகத் தொடர்ந்து வந்தான். வண்டி கோமளேசுவரன் பேட்டைக்குள் நுழையாமல் கூவம் ஆற்றின் கரையோரமாகச் சென்று பாதையிலேயே ஒரு ஸ்பென்ஸர் தபாலாபீசுக் கருகில் வந்து மவுண்ட்ரோட்டை யடைந்தது. தான் எதிர்பாராத திக்கில் வண்டி போவதைக் குறித்து பொன்னம்பலம் வியப்படைந்தவனாய் பின்னும் வந்து கொண்டிருந்தான். பெட்டி வண்டியின்மேல் உட்கார்ந்திருந்த வண்டிக்காரன் இரண்டொரு முறை பின்புறம் திரும்பிப் பார்த்ததனால், அவன் தன்னைக் கண்டுகொண்டானோ வென்று ஒருவகையான அச்சம் பொன்னம்பலத்தின் மனதில் உண்டாய்க் கொண்டிருந்தது. மவுண்ட்ரோட்டின் இருபுறங்களிலும் பெருத்த மரங்கள் அடர்ந்திருந்தன. எங்கும் மின்சார விளக்குகள் நன்றாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ஆங்காங்கு போலீஸ் ஜேவான்கள் நின்று கொண்டிருந்தனர். வெகுதூரத்துக்கு ஒரு மோட்டார் வண்டி வந்துகொண்டிருந்தது. ஆயிரம் விளக்கை நோக்கிப்போகும் கூலிக்கார ஆதி திராவிடர்கள் தங்கள் கள்ளைக் குடித்து ஆடிவிழுந்து பாடிக் கொண்டு சென்றனர். இருபுறங்களிலும் வெள்ளைக்காரர் கம்பெனிகளின் பிரம்மாண்டமான கட்டிடங்கள் நிறைந்திருந்தன. அவ்விடத்தில் வந்த வண்டி மவுண்ட்ரோட்டிலேயே மேற்குப் பக்கம் செல்ல வாரம்பித்தது. எதிரில் ஆயிரம்விளக்கு, தேனாம்பேட்டையின் வடபாகம் முதலியவைகளிருந்தமையால் அந்த வண்டி அங்குதான் ஏதாவது பங்களாவுக்குப் போகிறதோ வென்று பொன்னம்பலம் பின்னும் ஐயமுற்றவனாய்ச் சென்றான்.

வண்டி ஆயிரம்விளக்கைத் தாண்டி சர்க்கார் பூந்தோட்டம் வெள்ளாளத் தேனாம்பேட்டை முதலிய இடங்களை யெல்லாம் கடந்து நாலுமயில் தூரத்திலிருந்த சைதாபேட்டையை யடைந்தது. ஆனால், அந்த ஊருக்குள் நுழையாமல், பாட்டை வழியாகவே மேலும் சென்று அடையாற்றுப்பாலத்தைக் கடந்து அப்பாலும் சென்றது. அவள் சைதாபேட்டையிலிருக்கிறாளென்று பொன்னம்பலம் நினைத்ததும் தவறாக முடிந்தது. வண்டி சைதாபேட்டையைத் தாண்டி, கிண்டியென்னும் ஊரை யடைந்து, அதற்கு மேலும் பாட்டையிலேயே சென்று கடைசியாக ஆலந்தூரை யடைந்தது. அவ்விடத்தில் பாட்டைக் கருகில் முன்புறத்தில் சிறிய பூஞ்சோலையைக் கொண்ட ஒரு பங்களாவிருந்தது. அதன்வாசலிற் போனவுடன் வண்டி நின்றது. வண்டிக்காரன் கீழே இறங்கி இரும்புக் கம்பிகளாலான பங்களாக்கதவின் அண்டையில் நின்று "லச்சுமூ! லச்சுமூ! கதவைத்தொற" என்று இரண்டு முறை கூவியழைத்தான்.



வண்டிக்குப் பின்புறம் வந்த பொன்னம்பலம் அதுவே அவளது பங்களாவென்று உறுதிசெய்து கொண்டவனாய், பைசைகிளை நிறுத்திக் கீழே இறங்கி, அதன் ரப்பர்குழாய்க்குக் காற்று அடித்துப் புதுக்குபவனைப்போலப் பாசாங்கு செய்தவண்ணம் வண்டியை நோக்கிக்கொண்டிருந்தான். இரண்டு நிமிஷ நேரத்தில் கதவு திறக்கப்பட்டது. பெட்டிவண்டி பங்களாவுக்குள் போய்விட்டது. கதவும் திரும்ப மூடப்பட்டு உட்புறம் பூட்டப்பட்டது. பொன்னம்பலம் திரும்பவும் தனது பைசைகில் வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டு, மேலும் சிறிது தூரம் மேற்கில் சென்று அந்தப் பங்களாவின் முன்புறத்தை நன்றாக அடையாளம் பார்த்துக்கொண்டு அது இத்தனாவது மயில் இத்தனாவது பர்லாங்குக்கு அப்பால் இருக்கிறதென்பதையும் சரியாக அறிந்துகொண்டு தனது ஈருளிச்சக்கரவண்டியைத் திருப்பிவிட்டு இரவு ஒருமணி சமயத்தில் துரைராஜாவின் பங்களாவுக்கு வந்து சேர்ந்தான்.

துரைராஜா மாரமங்கலம் மைனர் ஆகிய இருவரும் பொன்னம்பலத்தின் வருகையை எதிர்பார்த்த வண்ணம் மேன்மாடியில் கண்விழித்து சீட்டாடிக்கொண்டிருந்தனர். மேன்மாடிக் கதவும் தாளிடாமல் வெறுமையாய்ச் சாத்தி வைக்கப்பட்டிருந்தது. பொன்னம்பலம் மேன்மாடிக்குச் சென்று, தான் பெட்டி வண்டியைத் தொடர்ந்து சென்ற வரலாற்றையும், மோகனாங்கி ஆலந்தூருக் கருகிலுள்ள ஒரு பங்களாவில் இறங்கிய விவரத்தையும் விரிவாகக் கூறி அந்த பங்களாவின் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பதற்குத் தேவையான குறிப்புகளை யெல்லாம் தெரிவித்துவிட்டு, அவர்களுடைய அநுமதியின்மேல் படுக்கைக்குச் சென்றான்.

பொன்னம்பலம் ஜெயமடைந்து வந்ததைக் கேட்ட மாரமங்கலம் மைனர் அப்பொழுதே புறப்பட்டுப் போகவேண்டுமென்றும் ஆவ

வினால் அடிக்கடி அடித்ததைக் கண்ட துரைராஜா "மாப்பிள்ளே! இப்போது போவதில் எவ்விதமான பயனும் ஏற்படாது. பொழுது விடிந்தவுடன் காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு நான் முதலில் அங்கு போய் எப்படியாவது தந்திரம் செய்து, அவளுடைய நட்பை சம்பாதித்துக் கொண்டுவருகிறேன். அதன்பிறகு நீ போவதற்கு சௌகரியமாயிருக்கும்" என்றான்.

அதைக் கேட்ட மைனர் "ஆகா! நல்ல காரியம் செய்தாய்! இன்று வி. பி. ஹாலிலிருந்து வந்தவுடன் நீ அவளைப் புகழ்ந்து பேசியதைக் கண்டால், உனக்கும் அவள்மேல் ஆசை விழுந்திருக்கிறதென்பது நன்றாய்த் தெரிகிறது. நீ போய் அவளைப் பிடித்துக்கொண்டால், அப்புறம் என்னை மறந்துவிடுவாய்; ஆகையால், நானே போய் இதை முடித்துக்கொள்ளுகிறேன்" என்றான்.

துரைராஜா புன்சிரிப்போடு "நாம் ஒன்று செய்வோம். எனக்கும் அவளுடன் சிநேகம் செய்து கொள்ளவேண்டுமென்ற ஆசை மனதில் எழுந்து வருத்துகிறது. ஆகையால் திருவுளச்சீட்டுப் போட்டுப்பார்ப்போம். யாருக்கு சீட்டு விழுகிறதோ அவர் போக வேண்டியது" என்றான்.

மைனர் அதற்கு இணங்க, உடனே சீட்டுப்போடப்பட்டது. அதிர்ஷ்டம் மாரமங்கலம் மைனர் பக்கத்திலேயே இருந்தது. அவருக்கே வெற்றி கிடைத்தது; ஆதலால் அவரே மறுநாட்காலையில் அவளூருக்குப்போய் மோகனாங்கியுடன் சிநேகம் செய்வதற்கு வேண்டிய அநுகூலங்களைத்தேடுவதென்று இருவரும் முடிவு செய்து கொண்டனர்; மாரமங்கலம் மைனர் அன்றிரவு அந்த பங்களாவிலேயே சயனித்திருந்தானாயினும், அவனுக்கு தூக்கமென்பதே பிடியாமையால், படுக்கையில் பொழுது விடியும் வரையில் புரண்டு புரண்டு படுத்திருந்தான். பொழுது விடியுமுன் எழுந்து அந்தப்பங்களாவை விட்டு நடந்து அரை மயில் தூரத்துக்கப்பாலிருந்த தனது பங்களாவை யடைந்தான். அவனது தாயும் மூத்த சகோதரிகள் இருவரும் அந்த பங்களாவிலிருந்தனர். அவர்களுக்குத் தெரியாமல், வெளியில் போய்விடவேண்டுமென்னும் எண்ணத்துடன் தனிமையான தனது விடுதிக்குப் போய் தன்னை நன்றாக அலங்கரித்துக் கொள்ளத் தொடங்கினான்.



அப்போது அவன் மனது மிகுந்த உற்சாகத்தினாலும் ஆவலினாலும் பலவகைப்பட்ட நினைவுகளினாலும் துடிதுடித்துப் பொங்கியெழுந்தது. தான் எவ்விதமான தந்திரம் செய்து மோகனாங்கியின் நட்பை யடைவது என்பதைக் குறித்து யோசனை செய்தான். அப்போதே நேராக அவளிருந்த பங்களாவுக்குள் போவது தவறென்று நினைத்தான். அந்த பங்களாவின் சுற்றுப்புறங்களில் வசிப்போர் யாவரென்பதை ஆராய்ந்தறிந்து, அவர்களுடன் தந்திரமாகப் பேசி, மோகனாங்கியின் வரலாற்றையும், அவளது பங்களாவிலுள்ள வேலைக்காரிகளைப்பற்றிய வரலாறுகளையும் உணர்ந்து அதன் மூலமாக வேலைக்காரிகளிடம் பழக்கம் செய்துகொள்ள வேண்டுமென்று நிர்மாணித்துக்கொண்டான். அவன் தனது அழகு, யோக்கியதை முதலியவற்றைப்பற்றி மிகவும் பிரமாதமான அபிப்பிராயம் கொண்டிருந்தான். தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டவுடன் நிலைக்கண்ணாடிக்கெதிரில் நின்று குனிந்து நிமிர்ந்து உதட்டை நீட்டிப் பல்லைக் காட்டிப் பார்த்துக்கொண்டான். கண்ணாடிக்குள் விகாரமான ஒரு சிறுவனது வடிவம் தெரிந்ததாயினும், கண்ணாடி நேர்கண்ணாடி யாதலால் தனது சரியான வடிவத்தை அது உள்ளபடி காட்டவில்லையென்று நினைத்து, தான் மிகவும் அழகுடைய மன்மதனென்றே மனதிற்குள் நினைத்துக்கொண்டான். தவிர, அவனது சமஸ்தானத்திலுள்ள குடியானவர்களும் அரண்மனைச் சிப்பந்திகளும் மற்றவரும் சிறுபிராயத்திலிருந்தே அவனை "மகாராஜா, மகாராஜா" வென்று மெச்சி, அவனிடத்தில் கூழைக்கும்பிடு போட்டு அவன் மனப்போக்குப்படி நடந்துகொண்டு வந்ததனால் அவன் தன்னை சர்வவல்லமையுள்ள ஒரு சக்கரவர்த்தி யென்றே நினைத்துக்கொண்டான். அழகு செல்வம் உன்னத பதவி முதலிய எல்லாவற்றிலும் தான் இணையற்றிருப்பதால், எந்த ஸ்திரீயை தான் வசியப்படுத்துவதும், எளிதென்று நினைத்தான். தான் ஒரு வார்த்தை சொல்லவேண்டியதே தாமதம்; சொன்னால் எப்படிப் பட்டவளும், சலாம் செய்து கொண்டு, தன் இச்சைப்படி நடப்பாள் என்பது அவனுடைய துணிபு. சிறந்த பெண் பாலாரின் கற்பிலேயே அவனுக்கு நம்பிக்கை கிடையாது. அதிலும் நாடகத்தில் வந்து ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு முன்னால் நடிப்பவளிடத்தில் கற்பென்பதே இராதென்பது அவனது உறுதியான கொள்கை. தவிர, அவளது வரலாறுகளை விசாரித்தறிந்த பின்பு, தனது சமஸ்தானாதிபதி உடைகளை விலக்கிவிட்டு ஓர் ஏழையைப்போல உடையணிந்து அவனது

பங்களாவுக் கருகிலிருந்து அவள் போகும் போதும் வரும்போதும் கண்ணில் பட்டுக்கொண்டிருந்தாள். அவள் தன்னைக் கண்டு வியப்படைந்து, ஏழை உடைகளுக் குள்ளிருப்பது ஒரு பெருத்த சமஸ்தானாதிபதி என்பதை எளிதில் கண்டுகொள்வாளென்றும், அதன் பிறகு தனது கருத்தை தந்திரமாக அவளுக் குறிவுறுத்தினால், அவள் உடனே நிரம்பவும் வியப்படைந்து, அவள் விஷயத்தில் தான் தனது மகோன்னத பதவியை விட்டு தாழ்ந்த நிலைமையில் வந்ததைப்பற்றி, தன்மீது காதல் கொண்டு தனது பாதத்தில் சரணாகதி யடைந்துவிடுவாளென்றும் நினைத்து மனப்பால் குடித்தவனாய், ஒருவகையான தீர்மானம் செய்துகொண்டு புறப்பட்டான். முதல் நாள் மாலையில் நாட்டுக்கோட்டைச் செட்டியிடம் வாங்கிய பணத்தில் தனது பாகமாகிய மூவாயிரம் ரூபாயும் நோட்டுகளாக ஒரு மணிபர்சில் வைக்கப்பட்டிருந்தனவாதலின், அதை எடுத்து தனது சட்டையின் உட்புறப் பையில் வைத்துக்கொண்டான். வைரக்கடுக்கன்கள், வைரமோதிரங்கள், தங்கக் கடியாரம் தங்கச் சங்கிலி, காப்பு, கொலுசு முதலிய அலங்காரங்களுடன், வெளிப்பட்டு, பங்களாவிலிருந்த எவர் கண்ணிலும் படாமல் தெருவை யடைந்து சிறிது தூரம் நடந்து அங்கு எதிர்ப்பட்ட ஒரு குதிரைவண்டியை ஆலந்தூர் வரையில் அமர்த்தி அதில் உட்கார்ந்துகொண்டான். வண்டி வேகமாக ஓடி, அரைமணி நேரத்தில், மோகனாங்கி யிருந்த பங்களாவுக்கு சிறிது தூரத்துக்கு அப்பாலிருந்த ஆலந்தூரை யடைந்தது. மைனர் ஜெமீந்தார் கீழே இறங்கினார். வண்டிக்காரன் தனது கூலியைப் பெற்றுக்கொண்டு, வந்தவழியே போய் விட்டான்.

---

## 3-வது அதிகாரம்,

### அம்பட்டக் கருப்பாயி; கட்டையன் குறவன்.

குதிரை வண்டியில் சென்ற போதே மோகனாங்கியின் பங்களா இன்னதுதானென்று அறிந்துகொண்டு போன மைனர்ஜெமீந்தார் ஆலந்தூரில் வண்டியிலிருந்து கீழே இறங்கியபின், மெல்ல நடந்து வண்டி சென்ற பாதை வழியாகவே திரும்பி வந்தான். அந்த ஸ்திரீயின் பங்களாவுக்கு அரைக்கால் மயில் தூரத்தில் மைனர் நின்று, மிகவும் மகிழ்ச்சியோடு அதை உற்று நோக்கினான். அந்த பங்களா



பாதையை ஒட்டியதாயிருப்பினும், பாதையிலிருந்து 50 கஜ தூரம் வரையில் அழகான பூஞ்சோலை யிருந்தது. அதன் பிறகு இரண்டு மேன்மாடிகளையுடைய அழகிய புதிய கட்டிடமிருந்தது. பின்புறத்தில் தென்னை மா பலா முதலிய மரங்கள் தோப்பைப்போல அடர்ந்திருந்தன. பெட்டி வண்டி குதிரை முதலியவை நிற்பதற்கு லாயங்களும், ஏற்றங்களைக் கொண்ட கிணறுகளும் காணப்பட்டன. ஓர் ஆள் உயரம் எழுப்பப்பட்டிருந்த ஒரு மதில், நாற்புறத்திலும் அவற்றை வளைத்துக்கொண்டிருந்தன்றி, அதன் முன்புறத்தில், பாதையில் இரும்புக்கம்பிகளாலான கதவும் வாசலுமிருந்தன. அதிலிருந்து அவள் மற்ற நாடகக்காரிகளைப்போல ஏழையல்லவென்றும், தக்க செல்வமுடையவளென்றும், அந்த செல்வமிருந்ததினாலேயே அவள் எவர்க்கும் இடங்கொடாமல் கற்பை காப்பாற்றுகிறாளென்றும் எண்ணிக்கொண்ட மைனர், நாற்புறங்களிலும் திரும்பி கண் கண்ட தூரம் வரையில் நோக்கினார்; மனிதர் குடியிருக்கக் கூடிய வீடே காணப்படவில்லை. பங்களாவுக்கு எதிர்ப்புறத்தில் அரைக்கால் மயில் தூரத்துக்கப்பால்; சில தென்னை மரங்களும் ஒரு பெருத்த வைக்கோல் போரும் ஒரு புளியமரமும் காணப்பட்டன. பூமி அதுவரையில் ஏற்றமானதாயும் அதற்கப்புறம் இறக்கமானதாயும் காணப்பட்டதாகையால், அதற்கப்பால் என்னவிருக்கிறதென்பதைப் பார்க்கவேண்டுமென்றும் ஒரு வகையான அவா மனதில் எழுந்து தூண்டியது. பாதையிலிருந்து அந்தத் தென்னந்தோப்பை நோக்கி ஓர் ஒற்றையடிப்பாதை சென்றதைக் காணவே, அதன் வழியாகச்சென்றால் தோப்பிற்கு அப்புறத்தில் காட்டுக் கொட்டகை முதலிய மனிதரிருப்பிடம் ஏதாவது இருக்கலாமென்ற, ஒரு யூகம் உண்டாயிற்று. அவன் உடனே அந்த ஒற்றையடிப் பாதையைப் பின்பற்றி நடந்து தென்னந்தோப்பை யடைந்தான். அதற்கு அப்புறத்தில் இருந்த இறக்கத்தில் சற்று தூரத்தில் ஒரு சிறிய குடிசை காணப்பட்டது. அது தனிமையாக இருந்ததைக் காண, மைனருக்கு ஒருவகையான மகிழ்ச்சி தோன்றியது. விரைவாக நடந்து அந்த வீட்டையடைந்தான். அது நெடுங்காலத்துக்கு முன் கட்டப்பட்டதாயும், மிக்க எளியதாயும் காணப்பட்டது. வாசற்கதவு சாத்தி உட்புறம் தாளிடப்பெற்றிருந்தது. வெளிப்புறத்தில் எவரும் காணப்படவில்லை. உள்ளே யார் இருக்கிறார்களோ, கதவைத் தட்டினால் கோபித்துக் கொள்ளுவார்களோ என்று நினைத்தவன் அச்சத்

கொண்டு தயங்கி திண்ணைமீது உட்கார்ந்து இரண்டு மூன்று முறை கனைத்துக்கொண்டு குரல் கொடுத்தான். உட்புறத்திலிருந்தோர் அவனை கவனித்ததாகத் தோன்றவில்லை. கால் நாழிகை கழிந்தது. கதவும் திறக்கப்படவில்லை. கையை கதவில் வைத்து மெல்ல அழுத்திப்பார்த்தான்; உட்புறத்தில் தாளிடப்பட்டிருந்தது; இன்னொரு கால்நாழிகை நேரம் மௌனமாய் உட்கார்ந்திருந்தபின் சிறிது துணிவடைந்து, "ஐயா! ஐயா!" என்று கூப்பிட்டவனாய், கதவை மெல்லத்தட்டினான். "ஆர் ஐயா அது" என்று கேட்டுக்கொண்டு, ஒரு பெண்பிள்ளை கதவைத் திறந்து மைனரை உற்று நோக்கினாள். அவள் சுமார் நாற்பத்தைந்து அல்லது ஐம்பது வயதடைந்த ஒரு ஏழை ஸ்திரீ. நன்றாகத் தடித்து உயர்ந்த விகாரமான சரீரத்தைக் கொண்டவள்; பலவிடங்களில் கிழிந்திருந்த, ஒரு கண்டாங்கிச் சேலையைக் கட்டிக்கொண்டு, காதில் நாகபடம், கொப்பு, கையில் இரண்டு விரல்களில் பித்தளை மோதிரங்கள், கழுத்தில் பொன் வைரமணி மாலை, சிவப்பு நிறமுள்ள ஸ்படிகமணி மாலை, ஆகிய அலங்காரங்களுடன் காளிகாதேவியைப்போலக் காணப்பட்டாள். அவளைக் கண்டவுடன் மைனருக்கு தான் கோரிவந்த காரியத்துக்கு அவள் அநுகூலமானவளல்லவென்ற நினைவும், அதிருப்தியும் ஏற்பட்டன. திண்ணையை விட்டுக் கீழே இறங்கினான். விலையுயர்ந்த ஆடையாபரணங்களுடன், பெரிய மனிதர் வீட்டுப்பிள்ளையைப்போல விருந்த அந்தச் சிறுவன், ஒரு மூலைக்காட்டிலிருந்த தனது வீட்டை நோக்கி நடுப்பகல்வேளையில் வந்ததைக்குறித்து வியப்பும் திகைப்பும் அடைந்த அம்பட்டக் கருப்பாயி "சாமி! ஒக்காருங்க. நீங்க எந்த ஊரு சாமி?" என்று ஒருவகையான அன்போடு பேச, அதைக்கேட்ட மைனர் சிறிது துணிவடைந்தான். முதல் பார்வையில் அவளிடத்தில் கொண்ட அருவருப்பும் சிறிதளவு விலகியது. அவளை நோக்கி "நான் இருப்பது தேனாம்பேட்டை; சைதாப்பேட்டைக்கு ஒரு காரியமாக வந்தேன். இந்த ஆலந்தூரில் என்னுடைய சிநேகிதர் ஒருவர் இருக்கிறார். அவரைப்பார்த்துவிட்டுப் போகலாமென்று வேடிக்கையாக நடந்துவந்துவிட்டேன். நல்ல வெயில்வேளை. மிகவும் தாகமாக இருக்கிறது. இங்கே தென்னமரமிருப்பதைக் கண்டேன். இளநீர் விலைக்கு அகப்பட்டால், ஒன்று வாங்கி சாப்பிட்டுப் போகலாமென்று வந்தேன். அதுதான் வந்த காரியம்" என்றான்.



அதைக் கேட்ட கருப்பாயி விசனமடைந்து "அடாடா! மரத்துலே ஏறிப் புடுங்கிப் போட மனிசர் இல்லியே! என்ன செய்யறது! பெரிய மனிசரு தாவமாயிருக்குதுன்னு சொல்லுறீங்களே! நான் அம்பட்டச்சி; நீங்க எங்க ஊட்டுலே தண்ணி கிண்ணி சாப்பிடமாட்டீங்க. கொஞ்சம் இப்பிடியே திண்ணைலே குந்துங்க. அதோ எனக்கே தெரியுதே வங்களா; அதுலே எவனாச்சும் தோட்டக்காரன் கீட்டக்காரன் இருந்தா, இட்டாரேன்." என்றாள்.

அதைக் கேட்ட மைனர் திண்ணையில் ஏறி உட்கார்ந்து கொண்டவண்ணம், "இல்லை அம்மே! நீ போகவேண்டாம். போய் வர, நேரமாகும். திண்ணையிலே கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தால், தாகம் போய்விடும். அந்த பங்களாவிலே யாரிருக்கிறார்களோ என்னவோ; அங்கே போய் பகல் பன்னிரண்டு மணி சமயத்திலே தொந்திரவு செய்யக்கூடாது. போகவேண்டாம் அம்மே! நான்கூட அந்த பங்களாவுக்குள்ளே போய், தண்ணீர் இருந்தால் சாப்பிடலாமென்று பார்த்தேன். வெளிக்கதவு சாத்தி மூடப்பட்டிருக்கிறது. அதில் யார் இருக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா!" என்று நயமாகக் கேட்டான்.

கருப்பாயி "தெரியுஞ்சாமி! யாரோ நாடவக்காரியாம் ஒரு சின்னப் பொண்ணு அதிலே இருக்கறாளாம்." என்றாள்.

மைனர்:—நாடகக்காரியா? நீ அவளைப்பார்த்திருக்கிறாயா? உனக்கு அவள் சிநேகந்தானா?—என்றான்.

கருப்பாயி:—அவளெ நான் பாத்ததே இல்லிங்க.

மைனர்:—அப்படியானால் இந்த இடத்துக்கு நீ புதியவளா அல்லது அவள் புதியவளா?

கருப்பாயி:—நான் எங்கப்பன் பாட்டங்காலமா இஞ்செதான் இருக்கறவ. அவ இந்த வங்களாக்கு வந்து ஒரு மாஷகால மாச்சுங்க.

மைனர்:—அப்படியானால் அவளுடன் கூட யார் யார் இருக்கிறார்கள் என்பதாவது தெரியுமா?—என்றான்.

அதைக் கேட்ட கருப்பாயி, அவனுடைய கருத்தை ஒருவாறு உணர்ந்து கொண்டவளாய்ப் புன்னகை செய்து "ஒருத்தரையும் தெரியாதுங்க. வேணும்னா ஒரு சணநேரத்துலே தெரிஞ்சுக்கினு

வந்து, 'சொல்றேனுங்க. ஒங்க கருத்தெ நல்லா தெரியும்படி சொன்னு என்றலெ என்ன ஆவனுமோ அதெ ஒடனே செய்யறேன்.'' என்று கூறினாள்.

அதைக்கேட்ட மைனர், அவள் தன்னுடைய கருத்தை நிறைவேற்றுவதற்கு நிரம்பவும் அநுகூலமாயிருக்கத் தக்கவளென்று கண்டு கொண்டான். என்றாலும், அவளை உடனே நம்பிவிடக் கூடாதென்று சிறிது எச்சரிக்கையாய்ப் பேச வாரம்பித்தான்; "எனக்கு உன்னால் ஆகவேண்டிய காரியம் என்ன இருக்கிறது? அப்படி இருந்தாலும் அதை ஒழுங்காய்ச் செய்து முடிக்கும் திறமை உனக்கு இருக்கிறது என்பதை நான் எப்படி உறுதியாக நம்புகிறது?" என்றான்.

கருப்பாயி சிரித்துக்கொண்டு " இத்தனை பெரிய மனிசரான நீங்க, அலுவலில்லாமெயா ராசபாட்டெயெ விட்டு இம்பிட்டுத் தூரம் வந்தீங்க! ஒட்டெச்சட்டியிலெதான் கொழுக்கட்டெ வேவும் இம்பாங்களே அது தெரியாதா! நீங்க வந்த சோலி இன்னதுன்னு எனக்குத்தெரிஞ்சுபோச்சு; ஒங்கிளுக்கு என்னென்ன சங்கதி தெரியனுமோ அதெல்லாம் சொல்லிப்புட்டு நீங்க போயிட்டு இன்னைக்கி பொளுது சாய இஞ்சே வாங்க. நான் எல்லா சங்கதியும் சொல்லிப்புட்றேன்,'' என்றாள்.

மைனர்:—சரி; அப்படியே செய்வோம். நீ மாத்திரம் இந்தக் காரியத்தை முடித்துக் கொடுப்பாயானால் உனக்கு நூறு ரூபாய் தருகிறேன். இந்த நாடகக்காரி யிடத்தில் சிநேகம் செய்துகொள்ள வேண்டுமென்பது என்னுடைய விருப்பம்; அதற்காகவே நான் இங்கு வந்தேன். அவளுடன் யார்யார் இருக்கிறார்கள்? வேலைக்காரிகளில் எவளுடைய பேச்சை அவள் கேட்கிறாள்? இன்னம் வேறு எவரிடத்திலாயினும் அவள் பிரியம் வைத்திருக்கிறாளா? அவளுடைய வேலைக்காரியின் மூலமாக இதை முடிக்க முடியுமா? அவள் பங்களாவை விட்டு வெளியில் உலாவும் பொருட்டு எப்போதாவது வருவதுண்டா? அவள் பணத்தின்மேல் ஆசைப்பட்டால், எவ்வளவு பணம் கேட்பாள்? என்ற விவரங்களையெல்லாம் நீ அறிந்து வைக்கவேண்டும். இதோ முதலில் உனக்கு பத்து ரூபாய் கொடுக்கிறேன். இதை அச்சாரமாக வைத்துக்கொள்; காரியத்தை முடித்தால், உன



க்கு ரூபாயாலேயே அபிஷேகம் செய்துவிடுகிறேன்." என்றவண்ணம் தனது பணப்பையை எடுத்து அவளுக் கெதிரில் ஆடம்பரமாகத் திறந்து பத்து ரூபா நோட்டு ஒன்றை எடுத்து அவளுக் கெதிரில் போட்டான்.

உடனே கருப்பாயி "பணம் கொடுக்கறது இருக்கட்டுங்க. இதுக்குள்ளு ஒங்க மனசுக்கு சந்தோசமான ஒரு அச்சிலெ முடிச்சுக்குடுத்தா, எனும் சனும் குடுக்காமலெ இருப்பீங்க. என்னாத்துக்கும் நீங்க ஒண்ணுஞ்செய்யுங்க; பொளுதுசாய எழுமணிக்குள்ளாற ராத்திரிச் சாப்பாட்டெ முடிச்சுக்கினு இஞ்சே வந்துடுங்க; அதுக்குள்ளாற எல்லாச் சங்கதியும் வெசாரணை பண்ணிவைக்கிறேன். சரிப்பட்டா அந்த வேலைக்காரியைக்கூட இட்டாந்து இஞ்சே வச்சு வைக்கறேன். நேருலே பேசி முடிச்சுக்கலாம்." என்றாள்.

மைனர்:— அப்படியானால் நான் ராத்திரி எங்கே படுத்துக் கொள்ளுகிறது?

கருப்பாயி:—அநேகமா நாடகக்காரி வங்களாவுக்கே போறத்துக்கு வழி சேஞ்சிப்புட்றேன். தவறினா, இஞ்செயே படுத்திருங்க. புதுப்பாயி தலவாணியெல்லாம் தயாருப்பண்ணி வைக்கிறேன்—என்றாள்.

அதைக் கேட்ட மைனர் மிகவும் சந்தோஷமடைந்தவனாய், அவளுடைய பிரேரபணைக் கிணங்கினான். தேடிப்போன மருந்து காலில் தட்டுப்பட்டதைப்போல, தனது கருத்துக்கு நிரம்பவும் அநுகூலமான உதவி வெகு சுலபத்தில் ஏற்பட்டது பற்றி, தனது அதிர்ஷ்டத்தைப் புகழ்ந்துகொண்டதன்றி அந்தக் காரியம் அவசியம் பலிக்குமென்பதற்கு அது ஒரு நல்ல சகுன மென்று நினைத்தவனாய் தமது பணப்பையைத் திறந்து இன்னொரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து அவளுக் கெதிரில் அலட்சியமாகப் போட்டு "இதோ இதையும் எடுத்துக்கொள். எனக்கு நல்ல படுக்கையாக ஒன்று தயாரித்துவை; உனக்கு அதன் பொருட்டு ஏதாவது செலவு ஏற்படும். ஆகையால் இதையும் எடுத்துக்கொள். வேலைக்காரி எவ்வளவு பணம் கேட்டாலும் கவலையில்லை. இந்தக் காரியத்தை முடிக்கவேண்டியது உன்னுடைய பொறுப்பு. நான் போகலாமா? உன்னை நம்பி இருக்கலாமா? மறந்துபோய் விடுவாயோ?" என்றான்.

அதைக் கேட்ட கருப்பாயி கையெடுத்துக் கும்பிட்டு மிகவும் வணக்கமாக "சாயங்காலம் வந்துதான் பாருங்களேன். ஒங்க மனசு குளிரும்படி செஞ்சா சரிதானே" என்றாள். அதைக்கேட்ட மைனர் அவளிடத்தில் மிகவும் நம்பிக்கை கொண்டவனாய், தின்னையை விட்டிறங்கியவண்ணம், "நான் போய்விட்டு சாயுங்காலம் சரியாக 7-மணிக்கு இங்கே வந்து விடுகிறேன்." என்று கூறி அவளது வணக்கத்தைப் பெற்றுக்கொண்டு ஒற்றையடிப்பாதையின் வழியாக நடந்து, ஆநந்த பரவசமடைந்தவனாய் இராஜ பாட்டையை யடைந்து ஆலந்தூர் சென்று அவ்விடத்தில் ஒரு வண்டியமர்த்திக் கொண்டு தேனாம்பேட்டையை நோக்கிச் சென்றான்.

* * * * * *

இவ்வாறு மைனர் சென்றபின் அரை நாழிகை கழித்து, அம்பட்டக் கருப்பாயி தனது வீட்டின் கதவைச் சாத்தி வெளியில் பூட்டிக் கொண்டு அவ்விடத்தை விட்டு ஒற்றையடிப் பாதையின் வழியாக நடந்து இராஜபாட்டைக்கு வந்து அங்கிருந்த பங்களாவண்டையில் நின்று நெடுநேரம் காத்திருந்தாள். பங்களாவிற்குள்ளிருந்த தென்னை மரங்களில் கட்டப்பட்டிருந்த மொந்தைகளிலுள்ள கள்ளை இறக்கிக் கொள்ளும்பொருட்டு அவ்விடத்துக்கு வந்த சாணார முத்தனிடம் பேச்சுக்கொடுத்து, தனது பையைத்திறந்து வெற்றிலை புகையிலை முதலிய வசியமருந்தை எடுத்துக் கொடுத்து, கால் நாழிகை நேரம் வரையில் அவனுடன் சம்பாஷித்திருந்த பிறகு அங்கிருந்து புறப்பட்டு இராஜ பாட்டை வழியாகவே சைதாப்பேட்டையை நோக்கி நடந்து அதற்கு சமீபத்திலுள்ள நக்காட்டுத்தாங்கல் என்ற சிறிய ஊருக்கு வந்து சேர்ந்தாள். அந்த ஊருக்குள் நுழையாமல், அதற்குள் அரைக் கால் மயில் மேற்கிலிருந்த ஒரு காட்டுக்குள் நுழைந்தாள். அந்தக் காடு மலைபோல வளர்ந்த சப்பாத்துப் புதர்களும் புளியமரங்களும் நிறைந்து அதற்குள் பார்வை நுழையாவண்ணம் அடர்ந்ததாய்க் காணப்பட்டது. மலைத்தொடரைப்போல இரண்டு திக்கிலும் முடிவின்றி நெடுந்தூரம் சென்ற அந்தக் காட்டண்டைசென்ற அம்பட்டக் கருப்பாயி, தனது கூர்மையான விழியால், அதில் பிறருக்குத் தெரியாவண்ணம் மறைந்து வளைந்து வளைந்து சென்ற ஒரு சிறிய ஒற்றையடிப்பாதையை யடைந்து அதற்குள் நுழைந்து அரைக்கால் மயில் தூரம் சென்றாள். ஆகாயத்தளாவிய புளியமரங்களும் கள்ளிப்



புதர்களும் சப்பாத்துப் புதர்களும் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருந்த தோற்றம் மிக்க பயங்கரமாகவிருந்தது. அதற்குள் சென்ற ஒற்றையடிப்பாதை பழக்கமுள்ளவருக்கன்றி மற்றவருக்குந் தெரியாததாய் மறைந்து கிடந்தது. சிறிதும் அச்சமின்றி அதன் வழியாகச் சென்ற கருப்பாயி நெடுந்தூரம் நடந்தவுடன் அந்தக் காடு முடிவடைந்தது.

அவ்விடத்தில், மறைந்திருந்த 15, 20 சிறிய குடிசைகள் காணப்பட்டன. அவை யாவும் கூரை வீடுகளாயிருந்தன. அவற்றின் நடுவில் ஓட்டு வீடு ஒன்று இருந்தது. அந்த ஊர் குறவர்கள் வசிக்கும் ஒரு சிறிய குப்பமாகக்காணப்பட்டது. எங்கும் குறவர்களும் குறத்திகளும் சிறுவர்களும் சிறுமிகளும் மூங்கில் பிளந்து கூடை முறங்கள் பின்னுவோரும், கருவேப்பிலை சேகரிப்போரும், காட்டுப்பூனைகள் குத்துவோரும், பறவைகள் பிடிப்போரும், வேறு பலவகையான தொழில்களைச் செய்வோருமாய்க் காணப்பட்டனர். ஆடுகளும், மாடுகளும், கோழிகளும் ஏராளமாயிருந்தன. அவ்வூரிலிருந்த மனிதர் தொகையைக்காட்டிலும் நாய்களின் தொகையே அதிகமாகவிருந்தது. ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது எழெட்டு நாய்கள் வேட்டைக்காக வளர்க்கப்பட்டன. கூரைகள்தோறும் சுரைக்கொடிகள் மூடிக்கொண்டிருந்தன. அவ்வாறு தோன்றிய அந்தச் சிற்றூர் தனியான ஒரு உலகமாய்க் காணப்பட்டதாதலின், வெளியூர்களிலிருந்து எவரும் அதற்குள் வருதலே அருமை. எப்போதாயினும், போலீஸ் ஜெவான்கள் இருவர் மூவர் வந்தால் அவர்களது விஜயம் மகாராஜாக்களின் விஜயம் போலவே கொண்டாடப்படும். அவர்கள் ஒவ்வொருவருக்கும் கூடைகள் முறங்கள் கோழிகள் காடைகள் புறாக்கள் முதலிய பாத காணிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். அவற்றைப் பெற்றுக்கொண்டு அவர்கள் சந்தோஷமாகத் திரும்பிப் போய்விடுவார்கள். அந்த மகாஜனங்களின் உபயோகத்துக்காக அங்கு பிரத்தியேகமான ஒரு கள்ளுக்கடை இருந்தது. அதில் சாராயமும் சீமைச்சரக்குகளும் கூட விற்கப்பட்டு வந்தன. அதன் சொந்தக்காரனுடைய பெயர் கந்தசாமி நாயகன், அவனும், கன்னியம்மாள் என்று பெயர் கொண்ட அவனுடைய மனைவியும் அவ்விடத்தில் ஒரு பெருத்த வீட்டில் பேர்கூறப்பட்ட லாகிரி வஸ்துக்களை விற்பதன்றி, அந்த மகா ஜனங்களுக்குத் தேவையான பலசரக்குகள் மூக்கு மசாலவடை முதலிய சிற்றுண்டிகள்

ஆகிய சகலமான பொருட்களையும் விற்று அதனால் பெருத்த பொருள் சம்பாதித்திருந்தனர். அன்றி, அந்தக் குறவர்களில் பெரும்பாலோர் இராக்காலங்களில் கன்னக்களவு வழிப்பறி முதலிய துன்பகரமான தொழிலையும் செய்து வந்தனராதலின், அவர்களால் கொணரப்படும் திருட்டு சாமான்களுக்கும் ஒன்றுக்குக் கால்பங்கு விலை கொடுத்து கந்தசாமி நாயகன் வாங்கிக்கொள்வது வழக்கம்; எல்லா விதங்களிலும் கந்தசாமி நாயகன் அவ்வூர் மகா ஜனங்களுக்கு காமதேனுவைப் போல மிக்க அநுகூலமாக இருந்து வந்தான்.

இத்தகைய சிற்றூருக்கு அம்பட்டக் கருப்பாயி வந்து சேர்ந்தான். அவன் அடிக்கடி அவ்வூருக்கு வரும் வழக்கமுடையவனாதலால், அவனைக்கண்ட ஜனங்களும் வியப்படையவில்லை. நாய்களும் வாயைத் திறவாமல் படுத்துக்கொண்டிருந்தன. அவன் மற்ற எந்த வீட்டுக்கும் போகாமல், நடுவிலிருந்த ஓட்டு வீட்டுக்குப்போய்ச்சேர்ந்தான். அதன் வெளிக்கதவு சாத்தி உட்புறம் தாளிடப்பட்டிருந்தது. கருப்பாயி கதவண்டை போய் அதைத்தட்டினான். உடனே "ஆர் அது" என்று ஒரு பெண்பிள்ளையின் குரல் உட்புறத்திலிருந்து கேட்டது. "நான்தான் கருப்பாயி" என்றான் அம்பட்டச்சி.

அடுத்த நிமிஷம் கதவு திறக்கப்பட்டது. உட்புறத்தில் ஒரு ஸ்திரீ நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு சுமார் இருபத்தைந்து வயதிருக்கலாம். அவள் முரட்டு உடம்பைப் பெற்றவளாயினும், மிகவும் கட்டான அழகிய தேகத்தையும் வசீகரமான முகத்தையும் உடையவளாயிருந்தாள். அவளைக் கண்டவுடன் கருப்பாயி சந்தோஷமான பார்வையாகப் பார்த்து "வள்ளியம்மா! ஒம்புருஷன் இருக்கானா?" என்றான். "இருக்கானே. ஒன்னை உள்ளே இட்டாரச்சொன்னான்" என்றாள் அவள். அதைக்கேட்ட கருப்பாயி உள்ளே நுழைந்தான். வள்ளியம்மை திரும்பவும் கதவைமூடி உட்புறம் தாளிட்டுக்கொண்டு, கருப்பாயிக்குப் பின்னால் நடந்தாள். உட்புறமெல்லாம் ஆடுகளும், கோழிகளும், காடைகளும், கவுதாரிகளும், அவற்றின் மல மூத்திரங்களும், அடுக்குப்பானைகளும், தொம்பைக் கூண்டுகளும், பலவகைப்பட்ட தானியங்களும், விசிப்பலகையும் நிறைந்து மூச்சுவிடவும் இடமின்றி இருந்தன. உட்புறத்தின் ஒரு மூலையில் கயிற்றுக் கட்டிலொன்றன்மேல், தடித்துக் கருத்த தேகமும் பயங்கரமான கொடிய தோற்றமும் கொண்ட ஒரு மனிதன் திண்டில் சாய்ந்து



உட்கார்ந்திருந்தான். வாய் நிறைய புகையிலை வெற்றிலை முதலியவற்றைப் போட்டு மென்றுகொண்டும், பக்கத்திலிருந்த ஒரு படிக்கத்தில் சதக்கு சதக்கென்று எச்சிலை உமிழ்ந்து கொண்டுமிருந்தான். எங்கு பார்த்தாலும் பாணாத்தடிகளும் பட்டாக்கத்திகளும் சொருகப்பட்டிருந்தன. இன்னொரு மூலையில் அடுப்பின் மேல், ஒரு சட்டியில் காட்டுப்பன்றியின் மாமிசம் வெந்துகொண்டிருந்தது. அவன் உட்கார்ந்திருந்த கட்டிலுக்கு அடியில் ஒரு மண் தோண்டியில் கள்ளும், சீசாப்புட்டிகளில் சாராயம் முதலிய சீமைச் சரக்குகளு மிருந்தன.

அங்கு சாய்ந்திருந்த மனிதனுக்கு சுமார் நாற்பது வயதிருக்கலாம். பெருத்த முகமும் அடர்ந்து கொம்புகளைப்போல நீண்டிருந்த மீசைகளும், அவன் மதுரைவீரனோ ஐயனாரப்பனோ முனீசுவரனோ என்ற அச்சத்தை உண்டாக்கின. புஜங்களும், கைகளும், மார்பும் எஃகினால் அடிக்கப்பட்டனவோ வென்னத் தோன்றி கத்தியால் வெட்டினாலும் கத்தியின் கூர்மையை மழுக்கி அதன்பற்களை உடைக்கத்தக்கவையாயிருந்தன. அவன் மனித இனத்தையும் சேராமல் விலங்கின் இனத்தையும் சேராமல் இரண்டுக்கும் இடையில் ஒரு புதிய சிருஷ்டியாக இருந்தான். அவனுடைய அங்க அமைப்போ மனிதனைப் போலிருந்தது. தேகமும் குணஅமைப்பும் கொடிய துஷ்டவிலங்குகளின் அமைப்பைப்போல விருந்தன. அந்தக் குப்பத்தில் அவனே எல்லோருக்கும் அதிபதியாகவும், மற்றவர் அவனுடைய ஏவலை நிறைவேற்றும் நாய்களைப்போலவு மிருந்தனர். கதவைத் திறந்த வள்ளியம்மை என்பவள் அவனுடைய ஆசை மணவாட்டி. அவ்வூரிலுள்ள கூரைவீடுகளுக்கு நடுவில் அவனது ஓட்டு வீடு எப்படி ஒரு அரண்மனையைப்போல விருந்ததோ, அதைப்போல, மற்ற குறத்திகளுக்கிடையில் வள்ளியம்மை ஒரு சக்கரவர்த்தினிபோலவும், அவளுடைய ஆசை நாயகனான கட்டையன் குறவன் குறவர்களுக்குள் சக்கரவர்த்தி போலவும் விளங்கினார்கள். ஒவ்வொரு வீட்டுக்காரரும் கிரமமான வழியிலும் அக்கிரமமான வழியிலும் சம்பாதிக்கும் பொருளில் பத்தில் ஒரு பங்கு கட்டையன் குறவனுக்குக் கொடுத்துவிடவேண்டும். அது நிற்க, கட்டையன் குறவன் கொள்ளையடிக்கச் சென்றால், அவன் எவர்களைக் கூப்பிடுகிறானோ அவர்கள் உடனே அவனுடன் செல்லவேண்டும். அவன் கொள்ளையடிக்கும்

பொருள்களில், அவளுக்கு மனதிருப்தி ஏற்படக்கூடியபடியே அதையே அவர்கள் வாங்கிக்கொள்ளவேண்டும்; இத்தகைய ஒப்பற்ற சிறப்பு வாய்ந்த நம்பிராஜனுடைய சன்னிதானத்திற்கே அம்பட்டக் கருப்பாயி வந்து சேர்ந்தாள்.

அவளைக் கண்டவுடன் களித்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்த கட்டையன் " கருப்பாயியா? வா அம்மே! இப்பிடிக்குந்திக்க. என்ன சொகமா? ஆறுமாஸமா இந்தப்பக்கமே காணுமே " என்றான்.

அதற்குள் அவனுக்கெதிரில் வந்து தரையில் உட்கார்ந்து கொண்ட கருப்பாயி, மகிழ்ச்சியைக் காட்டிய முகத்தோடு "சொகந்தாப்பா! ஒங்கிட்டவர்மேயென்ன போகாமெ யென்ன. வந்தாக்கா ஒனக்கு ஏதாச்சும் பலத்த வேட்டை கொண்டாரணும். இல்லாமெப் போறு, சொம்மா வாரத்துலே என்ன பெரயோசனம்? அதுனாலே தான் வரல்லே" என்றாள்.

அதைக்கேட்ட கட்டையன் "அப்பிடியாறு இப்ப பலத்த வேட்டை கொண்டாந்திருக்கேன்னு அர்த்தம். அப்பிடித்தானு?" என்று சமுகமாகக் கேட்டான்.

கருப்பாயி:—கொண்டாந்துதான் இருக்கேன். அது இருக்கட்டும். வள்ளியம்மா ஒரு மாஸமா முழுகாமெ இருக்கான்னு சொல்லிக்கிட்டாளே. பளய செதிகெகாரி நான் ஒருத்தி இருக்கேனே. எனக்கு சொல்லியனுப்ப ஒனக்குத் தெரியாமெத்தானே போச்சு? என்னெயெல்லாம் மறந்துபுட்டியா அப்பா நீ? நான் என்ன ஒன்னெப்பொன்னு! இருவது வருசத்துக்கு முன்னே இருந்த மாதிரியா இப்ப கொமரியா இருக்கேன்—என்று நிஷ்டூரமாகக் கூறினாள்.

அதைக்கேட்ட கட்டையன் "கருப்பில்லாமெ ஒன்னாலும் நடக்குமா! நீதான் வந்திருந்து புள்ளெ பெத்து விடணும்; ஒனக்கு சேதி சொல்லியனுப்பணுமின்னு ரெண்டு நாளெக்கி மின்னெதான் வள்ளிக்கிட்ட சொன்னேன். அதுக்குள்ளற நீயே வந்துட்டே. ஒனக்குத் தான் நல்லா மருத்துவம் தெரியும். நீதான் வரணும். அந்த சமயத்துலே சொல்லியனுப்பறேன்; ஒடனே வந்து குதிச்சடணும். தெரியுமா? வராமெ இருந்துடுவியோ?" என்றான்.



கருப்பாயி "அம்மிட்டு பிரியமாச்சும் வச்சிருக்கியே! அதுவே போதும்; ஒரு காக்கா காலுலே சீட்டு எளுதி அனுப்பினாக்கூட ஓட்டமா ஓடியாந்துட மாட்டேனு? நீ மவராசா இல்லியா! ஒங்க வூட்டு அவசரத்துக்கு வராமப்போனு, கண்ணெப்புடுங்கிட மாட்டியா! பயப்படாதே. நான் இருக்கறேன் சமயத்துக்கு" என்றாள்.

அந்த முகஸ்துதியைக்கேட்ட கட்டையன் மகிழ்ச்சியும் தற்பெருமையும் அடைந்தவனாய் "கருப்பாயியோட பிரியம் எப்பவும் மாறாமெ ஒரேமாதிரியா இருக்குது. மத்தவங்க அப்பிடி இல்லே. அது கெடக்கட்டும். கொஞ்சம் சோறு தின்றியா? அருடியது வள்ளியம்மா? எங்கே, அக்காளுக்குக் கொஞ்சம் கறியும் சோறும் சட்டியிலே போட்டுக் கொண்டாந்துவை; லோட்டாவுலே தண்ணி கொண்டா" என்று அன்போடு கூறினான்.

அதைக்கேட்ட கருப்பாயி " இல்லெ அப்பா! வாறும் வாறும் இப்பதான் சாப்பிட்டு, ஒரு அவசரமா ஓடியாந்தேன். இதோ திரும்பி ஓடணும் வள்ளியம்மா! கொண்டார வாணாம். அப்பா! கட்டையா! இன்னக்கி ராத்திரி பன்னண்டு மணிக்கு நீ எங்க வூட்டுக்குக் கட்டாயமா வரணும். வரமுடியுமா?" என்றாள்.

கட்டையன்:—சங்கதி யென்ன? நல்லாத்தான் சொல்லேன். இங்கெ வேறே யாருமில்லியே. பயமென்ன?

கருப்பாயி:—ஒன்னுமில்லே. இன்னக்கி ராத்திரி எங்க வூட்டுக்கு ஒரு மனிசன் வாரான். அவனெ காமரா உள்ளே படுக்க வைக்கப்போறேன். அவனெ ராத்திரியே ரகசியமா சரிப்படுத்திப்புடணும். அவன் காதுலே இருக்கற வைரக்கடுக்கன் வைரமோதிரம் தங்கக் கெடியாரம் எல்லாம் அஞ்சாயிரம் ரூவா தாளும். பணப்பையிலே ஒரு கட்டு நோட்டு சொருகி வச்சுக்கிறான். அது பத்தாயிரம் ரூவா இருக்கும். நல்ல வேட்டை. காரியத்தெ முடிக்கறத்துலே கஷ்டமே இல்லே. அவன் 17,18 வயசுப் பையன்; சோனிக்குஞ்சு கணக்கா இருக்கான். மூக்கெப் பிடிச்சா உசிரு போயிரும். சொத்தெ ஆளுக்குப் பாதியா எடுத்துக்கலாம்" என்றாள்.

கட்டையன்:—அந்தப் பையன் ஒங்க வூட்டுக்கு என்னத்துக்கு வாரான்?

கருப்பாயி:—எங்க வூட்டுக்கிட்ட ஆலந்தோப்புப்பாதையிலே ஒரு வீங்களா இருக்குதல்ல. அதுலே ஒரு கூத்தாடிச்சி வந்திருக்கிறு. அவ நல்லா மூக்கும் முழியும் பவிசா மக்கா இருக்கறு. அவளோட வலேயிலே ஒரு பயன் உழுந்துகெடக்கறுன். அவளை சரிப்படுத்தறு முன்னு எங்கிட்டச் சொன்னுன். அதுக்காவ வரச்சொல்லி இருக்கறேன். அவனையே சரிப்படுத்திப்புட்டாப் போவுது." என்றுள்.

அதைக் கேட்ட கட்டையன் "சரி; அப்பிடியான்னு நல்ல வேட்டெதான். நான் மாத்தரம் வாறேன். பாளை சீவற பிச்சாங்கத்தி, கைத்தடி. ரெண்டும் போதும். ரெண்டையும் எடுத்தாறேன். நீ ஒரு மம்மட்டி மாத்தரம் தயாரா வச்சுவை. பன்னண்டு மணிக்கு அவன் நல்லா தூங்கற சமயத்துலே, ஆடறுக்கற மாதிரி கத்தியாலே ஒரே அறுப்பா வூட்டியெ அறுத்து, காமயிலுக்கு அன்னுண்டே கொண்டுபோயி குழிதோண்டி நல்லா பொதெச்சுப் புடுவோம். ஆனு, காமரா உள்ளே ரெத்தம் கித்தம் படாமெ சாக்கிரதெயா காரியத்தெ முடிக்கனும். எனுன்னு பின்னுலே, அந்தப் போலீசுக் காரப் பயலுவ எதாச்சும் தொந்தரவு பண்ணுவானுங்க. நீ கவலெப் படாதே. காரியத்தை ஒம் மனசுபோலெ முடிச்சுக் குடுக்கறேன். போய் தயாரா இரு" என்றுன்.

கருப்பாயி:—சரி; சந்தோசம். நீ தவருமெ வந்துடனும். நான் அவங்கிட்ட பொய் சொல்லி நம்பவச்சு படுத்திருக்க வைக்கறேன். நான் அவசரமாப்போவனும் போவட்டுமா?—என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள்.

கட்டையன்:—சரி போயித்துவா, கொஞ்சம் தாவத்துக் காச்சும் குடியேன்; சொம்மாப்போறியே; நல்ல புதுக்கள்ளு இருக்குது; கொஞ்சம் ருசி பாக்கறியா?—என்று உற்சாகத்துடன் கேட்க, அவள் "இல்லேப்பா; ராத்திரி காரியமெல்லாம் முடியட்டும். அப்பாலே, கொடங்கொடமா கள்ளுக் குடிச்சுக்கலாம். நான் போயித்துவாறேன். வள்ளியம்மா! கதவெ மூடிக்கோ" என்று சொல்லிக்கொண்டு வாசலை நோக்கிச் செல்ல, வள்ளியம்மை விரைவாக வந்து வாசற் கதவின் தாளைத்திறந்து அவளை வெளியில் அனுப்பிவிட்டு திரும்பவும் தாளிட்டுக்கொண்டு உள்ளே வந்தாள். அவ்விடத்திலிருந்து புறப்பட்ட அம்பட்டக் கருப்பாயி விசையாக நடந்து தனது இருப்பிடத்தை



யடைந்து, அன்றிரவுக்கு ஆக வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்து வைத்துக்கொண்டு மாரமங்கலம் மைனரது வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள்.

---

## 4வது அதிகாரம்.

### பெரிய இடத்துக் குழந்தைகள்.

மாரமங்கலம் மைனரது கதி எப்படி முடிந்த தென்பதைக் கூறுமுன், மாரமங்கலம் சமஸ்தானத்தைப்பற்றிய விவரம் சிறிதளவு தெரிய வேண்டியது அவசியமாக இருக்கிறது. மாரமங்கலமென்பது தஞ்சை ஜில்லாவில் காவிரிக்கரைக்கு இருபுறங்களிலும் நெடுந்தூரம் பரவிய ஒரு பெருத்த சமஸ்தானம். அதன் ஜெமீந்தாருக்கு ஒவ்வொரு வருஷத்திலும் ஐந்து லக்ஷம் ரூபாய் வருமானம் வந்தது. இந்த இராஜதானியிலே அதுதான் எல்லாவற்றிலும் பெருத்த சமஸ்தானமாகக் கருதப்பட்டு வருகிறது. இந்தக் கதை தொடங்குவதற்கு பதினெட்டு வருஷங்களுக்கு முன் அந்த சமஸ்தானத்தை கடைசியாக ஒரு ஜெமீந்தார் ஆண்டுகொண்டிருந்தார். அப்போது அவருக்கு வயது ஐம்பத்தைந்து; அவருடைய நாற்பத்தைந்தாவது வயதில் அவருடைய மனையாட்டி இறந்துபோய் விட்டாள். அப்போது அவருக்கு ஆண்பெண் ஆகிய எவ்வகையான சந்ததியுமில்லா திருந்தது. ஆதலின் அவர் ஏகாங்கியாக இருந்தார். ஆனால் அந்த ஜெமீந்தாருக்கு தம்பியொருவனிருந்தான். அவனுடைய பெற்றோர் அவன் குழந்தைப் பருவத்திலிருந்த போதே காலஞ்சென்றனர். ஆதலின் அனாதையாயிருந்த அந்தச் சிறுவனை ஏகாங்கியாயிருந்த அந்த ஜெமீந்தார் தமது குழந்தையைப் போல மதித்து மிகுந்த வாத்ஸல்யத்தோடு வளர்த்து அவனுக்குக் கல்வி கற்பிக்க நினைத்து சென்னையிலிருந்த தமது பங்களாவில் கொண்டு வைத்து சென்னை கலாசாலையில் படிக்கும்படி ஏற்பாடு செய்து, அவன் பொருட்டு எண்ணிறந்த ஆடம்பரங்களை யெல்லாம் அமைத்து வைத்தார். அவன் வயதடைந்தவுடன், அவனுக்கே தமது சமஸ்தானம் முழுதும் சேரவேண்டுமென்ற விருப்பங் கொண்டவராய், அவனை தமது சொந்த மகனைக்காட்டிலும், தாம மடக்கு விசேஷமான அருமையாராட்டி செல்வமாகவும் சிறப்பாக

வும் வளர்த்துவந்தார். அவன் பதினேழு வயதடைந்தான். சென்னையிலிருந்த பல துஷ்ட நண்பர்களின் சகவாசத்தால் அவன் பற்பல தீய வழிகளில் நடந்து, துன்மார்க்கச் செயல்களில் பிரவேசித்தான். அவன் அறுமாத காலத்துக்குள் ஒன்றிலிருந்து இன்னொன்றாய் கெட்ட காரியங்களி லிறங்கி கூத்தி குடி சூதாட்டம் முதலிய சகல மான காரியங்களிலும் இறங்கி தினந்தினம் ஆயிரக்கணக்காகப் பணச் செலவு செய்யத் தொடங்கினான். பெரிய தகப்பனால் அனுப்பப் படும் பணம் அவனுடைய பெருவாரிச் செலவுக்கு சிறிதும் போதாது தாய்ப்போகவே, அவன் கடன் வாங்கத் தொடங்கினான். கிழட்டு ஜெமீந்தாருக்கு இவனுடைய செயல்களெல்லாம் இரகசியமாக எட்டிக்கொண்டிருந்தன. அவர் மிகவும் வருந்தி அவனுக்கு அடிக் கடி கடிதம் எழுதி நயமாகவும் பயமாகவும் புத்தி சொல்லிப் பார்த் தார். அது அவனது செவிகளுக்கு ஏறவில்லை. பிறகு பணம் அனுப்புவதை நிறுத்திவிடுவதாக பயமுறுத்திப் பார்த்தார். பையன் அதற்கும் சரிப்படவில்லை. ஜெமீந்தார் மனமுடைந்தவராய், கடைசி யாக ஒரு கடிதம் எழுதினார். அவன் தனது தீயசெயல்களை யெல்லாம் விட்டு உடனே மாமங்கலத்துக்கு வந்துவிட வேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிடில் தமது பங்களாவுக்கு அவன் நுழையக் கூடா தென்று கண்டிப்பான கடிதமெழுதி, அவன் தமது சொற்படி செய்யாவிடில் பங்களாவை பூட்டி முத்திரை வைத்துவிட்டு வந்து விடும்படி மானேஜருக்கும் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தார். ஒரு நாள் பையன் இரவெல்லாம் சுற்றித் திரிந்துவிட்டு விடியற்காலம் முகத்தில் முக்காடு போட்டு மூடிக்கொண்டு பங்களா வுக்குள் நுழைந்தபோது மானேஜர் குறுக்கே நின்று கடிதத்தைக் கொடுத்தார். அதைப் படித்தவுடன் பையனுக்கு பெரிதும் கோபம் பொங்கியெழுந்தது. "கிழப்பயலுக்கு இவ்வளவு தைரியமா? நான் அவன் சொல்வதைக் கேட்கமாட்டேன். அவன் என்ன என்ன செய்யமுடியும்? அவன் இன்றைக்கோ நாளைக்கோ சாகப்போ கிறான். அதன் பிறகு சொத்தெல்லாம் யாருடையது? அவன் தயவும் வேண்டாம் பிரியமும் வேண்டாம். அவன் சொற்படியும் நான் இனி நடக்கமாட்டேன்" என்று சொல்லிய வண்ணம் கடிதத் தை மானேஜரது முகத்தில் வீசி அடித்துவிட்டு திரும்பிப் போய்விட் டான். அவன் சொன்ன மறுமொழியை ஒரு வார்த்தை விடாமல் மானேஜர் அப்படியே பெரிய ஜெமீந்தாருக்கு எழுதிவிட்டார்.



அதைக் கேட்டவுடன் கிழவருக்கு சகிக்கமுடியாத கோபமுண்டானது மன்றி, அந்த விசுவாச காதகனுக்குச் செய்ததெல்லாம் வீணாயிற்றே என்ற நினைவினால் மனமுடைந்தவராய் கரைகடந்த விசனத்திலாழ்ந்த வரானார். எவ்வளவோ மேன்மையான சமஸ்தானம் அப்படிப்பட்ட அயோக்கியனுக்குப் போய்ச் சேருவதைப்பற்றி மிகவும் சங்கட மடைந்து ஒரு வாரம் இரவு பகலாய் அதே நினைவாகவிருந்து கடைசி யாக ஒரு முடிவுக்கு வந்தார். தாம் உடனே ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டியதே தக்க காரியமென்று தீர்மானித்தார். அவருக்கு அப்போது வயது ஐம்பத்தைந்தான தால், தமக்கு தக்க இடத்தில் பெண் கிடைக்காதென்பதை உணர்ந் தார். ஆதலால் ஒரு ஏழை வீட்டிலேயாவது பெண் பார்க்கவேண்டு மென்று நினைத்து, தமது ஊரையடுத்திருந்த ஒரு கிராம மிராசுதாரை வரவழைத்தார். அவருக்கு கல்யாணி என்று பெயர் கொண்ட மகா ரூபலாவண்ணியம் பொருந்திய ஒரு பெண்ணிருந்தாள். அப்போது அவளுக்கு வயது பதினொன்று ஆயிருந்தது. அந்தப் பெண்ணைத் தமக் குக் கொடுக்கும்படி கேட்க, தீர்க்கிய தரித்திரனான அந்த மனிதன் உடனே இணங்கிவிட்டான். பெண்ணும் நன்றாகப் படித்த புத்தி சாலி. மகா அற்புதமான அழகு வாய்ந்தவள். அவ்வளவு பெருத்த சமஸ்தானத்துக் கெல்லாம் தான் எஜமானியாகப் போவதைக் கருதி னாளேயன்றி, புருஷன் கிழவனென்பதை நினையாமல் அவளும் முழு மனதோடு அதற்கு இணங்கினாள். ஒரு வாரத்திற்குள் கலியாணமும் முடிந்து, சோபனமும் நிறைவேறியது. பெண்ணை மங்கையான கல்யாணியும் வயோதிகரான ஜெமீந்தாரும் ஒன்று கூடி இரண்டு டலும் ஓருயிரும்போல அந்நியோன்யமான தாம்பத்தியத்தில் இல்லறம் நடத்த லாயினர். எவருக்கும் கிடைக்காத அன்பு மதிப்பும் ஒப்பற்ற பெருத்த செல்வமும் தனக்குக் கிடைத்ததனால் உண்டான உற்சாகத் தினாலும் குதூகலத்தினாலும் கல்யாணி தனது கணவன் வயதான கிழவ னென்பதையே நினையாதவளாய், தன்னை அவ்வளவு பெருத்த செல்வாக்கில் வைத்து உண்மையான வாழ்க்கைப்படுத்தச் சொரிந்த அந்த மனிதனிடம் உண்மையான விசுவாசமும் அன்பு மதிப்பும் காட்டி பிரியமும் பயபக்தியோடு நடந்து வந்தாள். கிழவனைப் புருஷனிடத்தில் அடைய வேண்டிய சுகம் தனக்கு இல்லையே என்ற நினைவாகிலும் ஏக்கமாகிலும் அவளுக்கு உண்டாகவில்லை. மற்ற எல்லா விஷயங்களிலும் ஏற்பட்ட பெருமையினாலும் சந்தோ

சங்களிருந்தும் அவன் முயற்சியும் திருப்தியடைந்தவளாய்ப் பர்த்தாவுக் கேற்ற பதிவிரதையாக ஒழுகிவந்தாள். அவர்கள் இவ்வாறு களித்திருக்கையில், கிழவர் கலியாணம் செய்துகொண்ட சங்கதி அவருடைய தம்பி மகனான சின்னதுரைக்கு எட்டியது. அவன் அதைக் கேட்டுத் திடுக்கிட்டவனாய் "சாகப்போகிற கிழவனுக்கு இனிமேல் ஆண்பிள்ளை பிறக்கப்போகிறதோ!" என்று கூறிப் பரிகசித்தாலும், கிழவனுக்கு அவ்வயது அகாலத்தில் குழந்தை பிறக்காதென்ற நம்பிக்கையினால் சிறிதும் அஞ்சாதிருந்தான். ஆறு மாதங்களுக்குப் பிறகு புதிய ஜெமீந்தாரிணி கருப்பிணியா யிருக்கிறாளென்ற செய்தி பரவியது. அப்போதும் சின்னதுரை அதை இலட்சியம் செய்யவில்லை. மேலும் நான்கு மாதங்களில் ஒரு ஆண் குழந்தை பிறந்ததென்ற சமாசாரம் பரவியது. பெரிய ஜெமீந்தார் குடிகள் முதலிய சகல ஜனங்களும் அதைக் குறித்துக் கரைகடந்த மகிழ்ச்சியடைந்து அதை ஒரு திருவிழாவைப்போலக் கொண்டாடினார்கள். அந்த விஷயம் சின்னதுரைக்கு எட்டவே அவன் அப்போதே சிறிது கவலை கொள்ளத்தொடங்கினான். அவன் மனதில் பலவகையான சந்தேகங்கள் தோன்றி வதைத்தன. அது உண்மையாகவே ஜெமீந்தாருடைய குழந்தையாயிருக்குமோ அல்லது மோசக் கருத்தான காரியமாயிருக்குமோ என்று நினைத்தான். ஆனால், அது மாத்திரம் முதலிய குழந்தைகளுக்கெல்லாம் தப்பி இருக்காதென்று அவன் மனதில் ஒரு நினைவுண்டாயிற்று. அதனால் அவன் அதைப்பற்றி எவ்விதமுயற்சியும் செய்யாமல் சும்மாவிருந்தான். அதன் பிறகு ஒன்றரை வருஷத்துக் கொருமுறை ஒவ்வொரு குழந்தையாக வேறு இரண்டு பெண் குழந்தைகள் கிழவருக்குப் பிறந்தன. அந்தச் செய்தியும் சின்னதுரைக்கு எட்டியது. முதலில் பிறந்த ஆண் குழந்தையும் மூன்றுவயதடைந்து மிகுந்த அழகும், புத்தி கூர்மையும், தேகாரோக்கியமும் உடையதா யிருப்பதாகவும் கேள்விப்பட்ட சிறிய ஜெமீந்தாருக்கு அப்போதே உண்மையில் பெருத்த அச்சமும் கவலையும் உண்டாயின. துஷ்டர்களான தனது நண்பர்களிடம் அவன் தனது நிலைமையை விரித்துக் கூறி அவர்களுடன் மந்திராலோசனை செய்து பெரிய ஜெமீந்தாரின் ஆண் குழந்தையைக் கொன்று விடுவதே தகுதியான காரியமென்று உறுதி செய்துகொண்டான். எப்படி அந்தக் கொடிய செயலை நிறைவேற்றுவதென்று அவர்கள் உடனே யோசித்தனர். திருட்டு, கொலை முதலியவற்றில்



பேர்பெற்று அஞ்சா நெஞ்சுபடைத்த ஒரு குறவன் சக்காட்டுத்தாங்கலில் இருப்பதாகக் கேள்விப்பட்டு தக்க ஆளை அனுப்பி தந்திரமாக அவனைத் தருவித்து அவனுக்குத் தேவையான பொருள் கொடுத்து அவன் மாரமங்கலம் போய் அரண்மனைக்குள் நுழைந்து ஆண் குழந்தையை எடுத்து வந்து கொன்று எறிந்து விடவேண்டுமென்று அவனுடன் ஒப்பந்தம் செய்துகொண்டனர். அந்தக் குறவனுக்கு அப்போது இருபது அல்லது இருபத்திரண்டு வயதிருக்கலாம். அவனது பெயர் கட்டையன் குறவன் என்பதாம். அவர்களிடம் பாதிப்பணம் அப்போது பெற்றுக் கொண்ட கட்டையன் குறவன் மாரமங்கலம் சென்று நாலைந்து நாட்கள் வரையில் பதுங்கி இருந்து அரண்மனையின் இரகசியங்களை யெல்லாம் அறிந்து ஒரு நாள் குழந்தைகள் மூவரையும் தாதிகள் அரண்மனைக் கடுத்த தோட்டத்தில் வைத்து விளையாட்டிக் காட்டியிருந்த சமயத்தில், உள்ளே புகுந்து தடியால் வேலைக்காரிகளை அடித்து வீழ்த்திவிட்டு ஆண் குழந்தையை எடுத்துக் கொண்டு ஓடி விட்டான். மூர்ச்சித்து விழுந்து கிடந்த தாதிகள் ஒரு நாழிகைக்குப் பிறகு எழுந்து மூத்த குழந்தை காணாமல் போய்விட்டதைப்பற்றி பெருத்த ஆரவாரம் செய்து விஷயத்தை அரண்மனையில் தெரிவிக்க, ஜெமீந்தார் கல்யாணியம்மாள் குடிகள் ஆள்மாகாணங்கள் முதலிய சகலரும் விசனக் கடலில் மூழ்கினர். ஏராளமான ஆட்கள் எல்லாத் திசைகளிலும் சென்று எவ்விடத்திலாயினும் குழந்தை கிடக்கிறதோ வென்று தேடி இரண்டு மூன்று நாட்கள் அலைந்து குழந்தையைக் காணாமல் திரும்பினர். மாரமங்கலம் அரண்மனையே துக்கமாகிய இருளில் ஆழ்ந்து விட்டது. கிழவரோ பித்துப் பிடித்தவராய் விட்டார். தாம் எண்ணிய எண்ணமெல்லாம் ஒரு நொடியில் மண்ணாய்ப் போனதைக் கண்டு கரைகடந்த துன்பமடைந்து புத்திர சோகத்திலாழ்ந்து விட்டார். சின்னதுரையே இவ்வாறு சூழ்ச்சி செய்தவனென்பது ஜெமீந்தார், கல்யாணி, பிறர் ஆகிய யாவருக்கும் சந்தேகமற விளங்கியது. அந்த நிலைமையில் தனது மனதிடத்தை இழக்காதிருந்த கல்யாணி கிழவரைத் தேற்றி தானுடனே சென்னைக்குப் போய் குழந்தை உயிருடனிருக்கிறதா அல்லது கொல்லப்பட்டுப் போனதா என்பதை நிச்சயமாக அறிந்து வருவதாய்ச் சொல்லி அவரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு தேவையான தாதிகள் சிப்பந்திகள் முதலியோருடன் புறப்பட்டு சென்னையை யடைந்து தமது பங்களாவில் இறங்கி மிகவும் இரகசியமாக விசாரணை செய்யத்தொடங்கினாள்.

இவ்வாறு செய்தி இங்கிலாந்துக்கு எட்டியவுடன் ஜான் தனது காரியத்தை முடித்த பிறகு இரண்டாம்நாள், சென்னையிலிருந்த சின்னதுரையிடம் வந்து, குழந்தையைக் கொண்டுபோய் நடு இரவில் அழுக்குத் தொட்டி பக்கத்திலுள்ள ஒரு வீட்டு வாசலில் போட்டு விட்டு வந்ததாகக் கூறி, அதன்மேல் அணியப்பட்டிருந்த அழகிய சிறிய உடைகளையும் ஆபரணங்களையும் காட்டியதன்றி, அந்தக் குழந்தையின் மார்பில் வலது கையில் ஒரு மச்சமிருந்ததைக் கண்டதையும் கூறினான். அதைக் கேட்ட சின்னதுரை திருப்தியடைந்து, மிகுதித் தொகையையும் கொடுத்து அவனை அனுப்பிவிட்டான். இரண்டு நாட்களில் பத்திரிகைகளிலும் அந்தக் குழந்தை காணாமற் போனதைப் பற்றிய விவரம் வெளியாயிற்று. அதைக் கண்ட சின்னதுரை மிகவும் சந்தோஷமடைந்து, இனி கவலையில்லை என்றும் கிழவன் அதிசீக்கிரத்தில் இறந்து போவானென்றும், உடனே தான் ஜமீன்தாராக ஆய்விடலாமென்றும் நினைத்து மனப்பால் குடித்திருந்தான். அதன் பிறகு ஒரு மாதகாலமாயிற்று. மாமல்லத்தில் கிழவர் இன்னமும் படுத்த படுக்கையாகவே இருந்தார். சென்னைக்கு வந்த கல்யாணியிடத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. குழந்தையைப் பற்றிய நிச்சயமான செய்தியொன்றும் கிடைக்கவில்லையென்றும் அநேகமாக அகப்பட்டுப் போகுமென்ற நம்பிக்கையிருப்பதாயும் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. அதைப் பார்த்த கிழவர் மிகவும் மகிழ்ச்சியும் ஆவலும் கவலையும் கொண்டு தத்தளித்தவராயிருந்தார். அவ்வாறு இன்னொரு மாதகாலம் சென்றது. கடைசியாக கல்யாணியிடத்திலிருந்து வேறொரு கடிதம் வந்தது. குழந்தை அகப்பட்டு விட்டதாயும் அது சரியான போஷணை இல்லாமையால் இளைத்துப்போய் நோய்கொண்டிருப்பதாயும், ஒரு வாரத்தில் அது குணமடையுமென்று டாக்டர் சொல்லுவதாயும், குணமடைந்தவுடன் குழந்தையை எடுத்துக்கொண்டு மாமல்லம் வந்துவிடுவதாயும் அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. எதிர்பாராத அந்த அதிசந்தோஷ சமாசாரம் கிழவருக்குப் பொறுக்கமுடியாததாய்ப் போய்விட்டது. அளவு கடந்த மகிழ்ச்சிப் பெருக்கைத் தாங்கமாட்டாமல் அவர் கீழே சாய்ந்து விட்டார். அவருடைய இருதயம் அந்த மனவெழுச்சியைத் தாங்கமாட்டாமல் உண்மையிலேயே படீரென்று வெடித்துவிட்டது. குழந்தையைத் திரும்பவும் கண்ணால் காணும்பாக்கியத்தை யடையாமல் அவர் ஒரே



கொடியில் உயிர்துறந்தார். அதைக் கண்ட சிப்பந்திகள் யாவரும் அச்சமும் திகைப்பும் விசனமுமடைந்து, சென்னையிலிருந்த கல்யாணியம்மாளுக்கும், சின்னதுரைக்கும் தந்தியனுப்பினார்கள். அதைப் பெற்ற சின்னதுரை தான் நீண்டகாலமாக எதிர்பார்த்த அதிர்ஷ்டம் அப்போதே லபித்ததென்று நினைத்து களை கடந்த சந்தோஷமடைந்து, கிழவரது உத்தரகிரியைகளைச் செய்து, சமஸ்தானத்தை ஏற்றுக் கொள்ளுவதற்குத் தயாராகப் புறப்பட்டு உடனே மாமல்லம் வந்து சேர்ந்தான். அதன் பிறகு, தன்னிலும் சந்தோஷியாகவே என்று நினைவு கொண்டவனாய், விசனமுற்றவன்போல நடித்து, ஜமீன்தாரது பிரேதத்தின்மேல் வீழ்ந்து அழுது தனது தந்தையைப் பற்றியும், தான் அவர் மனதிற்கு அதிருப்தியுண்டாம்படி நடந்து கொண்டதைப் பற்றியும் பிரலாபித்து, தனது குற்றத்தை யுணர்ந்து கழிவிரக்கங் கொண்டவனைப்போலப் பாசாங்கு செய்தான். குழந்தை அகப்பட்டு விட்டது என்ற விஷயம் கிழவரைத் தவிர மற்றவர்க்குத் தெரியாததையால், சின்னதுரையே இனி ஜமீன்தாரென்றும், அவனே கிழவனுக்குக் கருமம் செய்யவேண்டியவனென்றும், ஜனங்களெல்லோரும் முடிவு செய்தனர். கல்யாணியம்மாளின் வருகையை நெடுநேரம் எதிர்பார்த்தனர். அவள் வரவில்லை. ஆகையால் புரோகிதரை வைத்துக் கொண்டு சின்னதுரை தகனம் செய்வதற்குரிய சடங்குகளைத் தொடங்கினவனாய் இன்னும் சிறிது நேரத்தில் பிணம் ஒழிந்து போகுமென்றும் அபாரமான அந்தச் செல்வமெல்லாம் உடனே தனது வசமாய் விடுமென்றும் நினைத்து மனக்கோட்டை கட்டியவனாயிருந்தான். அவர்கள் கொட்டு முழக்கி பிணத்தை எடுப்பதற்கு ஆயத்தமாக இருந்த தருணத்தில் கல்யாணியம்மாள் குதித்துக் கொண்டு ஓடிவந்து தனது கணவன் மீது விழுந்து புரண்டழுது பிரலாபித்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு நெடுநேரம் அழுதாள். அதன் பிறகு ஜனங்கள் எல்லோரும் அவளைத் தேற்றி சவத்தை தகனம் செய்ய வேண்டுமென்று கூறி சின்னதுரையைக் கொண்டு செய்ய வேண்டிய சடங்குகளைத் தொடங்கினார்கள். அது காறும் சின்னதுரையின் முகத்தையே காணாதவளான கல்யாணியம்மாள், யாரோ அன்னிய மனிதன் உத்தரகிரியைகளைச் செய்ய ஆரம்பித்ததையுணர்ந்து, அந்த மனிதன் யாவனென வினவினாள். அந்த சமஸ்தானத்துக்கு அடுத்த உரிமைக்காரனான சின்னதுரை அவனே யென்று அருகிலிருந்தோர்

கூறவே, அதைக்கேட்ட கல்யாணியம்மாளுக்கு ரௌத்திராகாரமான கோபம் பொங்கி யெழுந்தது; "ஆகா! இந்தக் கொலைகாரனை உள்ளே யார் விட்டவர்கள்? பெரியவருடைய குழந்தை தங்கம்போல இருக்கையில் வேறு எவனுக்கு பாத்தியதை இருக்கிறது? காணாமற் போன குழந்தை உயிரோடு அகப்பட்டு விட்டது. அதை தாதி வைத்துக் கொண்டிருக்கிறாள். இந்த மனிதன் முகத்தில் விழிக்க எனக்கு மனம் கூசுகிறது. இவனைப் போகச்சொல்லுங்கள்" என்று கண்டித்துக்கூறிவிட்டு, குழந்தையை வேறொரு அறையில் வைத்துக் கொண்டிருந்த தாதியை அழைக்க, அவள் மூன்று வயதடைந்த குழந்தையுடன் வந்துசேர்ந்தாள். அதைக்கண்ட ஜனங்கள் யாவரும் கரை கடந்த வியப்பும், மகிழ்ச்சியுமடைந்து குழந்தையை மாறி மாறி யெடுத்து முத்தமிட்டுக் கொஞ்சினார்கள். சரியான போஷணையில் லாமையால், அது கருத்தும் இளைத்தும் தோன்றுகிறதென்று தாதி சமாதானம் கூறினாள். யாவரும் அதை ஆமோதித்தனர். வேறு சிலர் அதன் மார்பிலிருந்த மாங்காய்வடி மச்சத்தை ஆராய்ந்து பார்த்தனர். மச்சம் அப்படியே காணப்பட்டது. யாவரும் திருப்தி யடைந்தனர். அந்த விபரீதமான செய்தியைக் கேட்ட சின்னதுரை அவமானத்தினாலும், திகைப்பினாலும் குன்றிப்போய் வாய்திறந்து பேசமாட்டாமல் மெல்ல அப்பால் நழுவினான்.

அதன் பிறகு குழந்தையே கருமங்களைச் செய்யக் கடமைப் பட்டதாதலின், அதற்கு பிரதிநிதியாக ஒரு உறவினன் தருப்பம் வாங்கி கருமங்களைச் செய்து தகனத்தை நிறைவேற்றினான். கல்யாணியம்மாள் நிரம்பவும் புத்திசாலியாதலால் சமஸ்தானத்தின் தலைமையை தானே வகித்துக் கொண்டாள். பெரிய ஜெமீந்தார் இறந்து போவதற்கு சில நாட்களுக்குமுன்னால் ஒரு மரணசாசனம் எழுதி வைத்திருந்தார். குழந்தையின் மைனர்ப் பருவம் நீங்குகிறவரையில் கல்யாணியம்மாளும், சென்னையிலுள்ள அவரது நண்பர்களான வக்கீல் சிவஞான முதலியார், சோமனாதபுரம் ஜெமீந்தார் ஆகிய வேறு இருவரும் மைனருக்கு போஷகராக இருந்து காரியங்களை நடத்த வேண்டுமென்ற விவரமும் வேறு பலவகையான விவரங்களும் அதில் எழுதப்பட்டிருந்தன. சென்னையிலிருந்த போஷகர்கள் இருவரும் அடிக்கடி மாரமங்கலம் போவதில்லையாதலால், கல்யாணியம்மாளே சகல அதிகாரத்தையும் நடத்தி வந்தாள். ஜெமீந்தாரின் தகன



தினத்திற்கு மறுநாட்காலையில் ஒரு விபரீதமான செய்தி பரவியது. அரண்மனைத் தோட்டத்தின் ஒரு மூலையிலிருந்த மாமரமொன்றில் கட்டப்பட்ட ஒரு மணிக்கயிற்றில் சுருக்கிட்டுக் கொண்டு சின்ன துரை தற்கொலை செய்துகொண்டு பிணமாய்த் தொங்குகிறானென்ற பயங்கரமான சமாசாரம் தெரிந்தது. துரோகி கொலைகாரன் என்று ஜனங்கள் யாவரும் தூற்றிப் பாடினார்கள். போலீஸாரும் மற்றவரும் பிணத்தை பரிசோதித்து, அவன் தானே தற்கொலை செய்துகொண்டிருக்கிறானென்று மகஜர் எழுதிய பிறகு பிணம் கொளுத்தப் பட்டது. அன்றோடு கல்யாணியம்மாளின் கஷ்டமும் மனக்கவலையும் ஒழிந்தன. அவள் தனது இரண்டு குழந்தைகளுடன் மிகவும் சந்தோஷமாகக் காலங்கழிக்கத் தொடங்கி, மனோன்னதமாகச் சேர்ந்திருந்த பொருட்களையும் ஆண்டனுபவிக்கத் தொடங்கினாள். அவள் சென்னையிலிருந்த தங்களது பங்களாவில் சில மாதங்களும் மாரமங்கலம் அரண்மனையில் சில மாதங்களுமாக மாறி மாறி இருந்து சகலவித சுகபோகங்களுடன் தனது குழந்தைகளை வளர்த்து வந்தாள். அவ்வாறு பதினான்கு வருஷங்கள் சென்றன. குழந்தைகள் இருவரும் யௌவனப் பருவமடைந்தன. அவர்களில் மூத்தவனே, இந்தக் கதையின் தொடக்கத்தில் மாரமங்கலம் ஜமீன் என்று குறிக்கப்பட்டவன். அவன் துரைராஜாவின் [illegible] சகலவிதமான துர்க்குணங்களையும் கற்று, தாயான கல்யாணியம்மாளின் சொல்லுக்குக் கீழ்ப்படியாத துஷ்டனாய் மாறி தன்மார்க்கத்திலேயே சென்று கொண்டிருந்தான்.

அவன் போகஸ்திரீயினிடம் சிநேகம் செய்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடன் ஆலந்துறையை யடைந்து அப்பட்டக் கருப்பாயியின் நட்பை சம்பாதித்துக்கொண்டு அவளுக்கு உதவுவதாக உறுதி சொல்லிவிட்டுத் திரும்பிவந்தானல்லவா? அவன் தங்களுடைய பங்களாவை யடைந்து தனது தாயான கல்யாணியம்மாள் முதலியோரின் கண்ணில் படாமல் தனது பணப்பெட்டியைத் திறந்து முடித்துக் கொண்டு மறுபடி ஆலந்துறைக்குப் போவதற்குத் தேவையான உயர்ந்த உடைப்பட்டாடைகள் முதலிய சாமான்களையெல்லாம் எடுத்து ஆயத்தமாக வைத்துக்கொண்டிருந்தான். தனது எண்ணம் சுலபத்தில் பலிக்கப்போவதைக் கருதி மனக்கோட்டை கட்டி உலகத்திலுள்ள அழகான பெண்கள் யாவரிலும் சிறந்தவளும் உலகத்தை யாளும் மன்னர்களுக்கும் கிடைக்காத பெண்கள் நாயகமு

மான் மோகனாங்கி தன்னிடம் காதல் மொழி கூறி கொஞ்சிக் குலாவி சரசசல்லாபம் செய்யும் பாக்கியம் அன்றிரவே தனக்கு ஒரு கால் கிடைத்தாலும் கிடைக்கலா மென்று நினைத்து பகற்கனவு கண்டு கொண்டிருந்தான். பொழுது ஏற ஏற அவனது பித்தம் தலைக்கேறியது. ஆசையும் ஆவலும் மலைபோலப் பெருகி, அவனது தேகத்திற்கும் மனத்திற்கும் முறுக்கேற்றினவாதலின் அவன் ஓய்வின்றி எழுவதும் உட்காருவதும் தன் வீதியிலேயே உலாவுவதுமாயிருந்த தன்றி அவன் மனது முற்றிலும் ஆலந்தூர் பங்களாவுக்குள்ளிருந்த இன்ப வடிவத்திலேயே லயித்துப் போயிருந்ததாதலின், அவன் தன்னையும் தானிருந்த உலகத்தையும் மறந்தவனா யிருந்தான். கடியாரம் அப்போதைக்கப்போது மணி யடித்தபோதெல்லாம், அவன் அதை கவனித்து "இன்னமும் பொழுது போகவில்லையே" என்று தவித்து ஒவ்வொரு உடையாக அணிந்தணிந்து கழற்றி நிலைக்கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டே இருந்தான். சரியாக மாலை ஆறுமணிக்குப் புறப்பட வேண்டு மென்று தீர்மானித்துக் கொண்டு அதன் பொருட்டு தனது அலங்காரத்தையெல்லாம் பகல் மூன்று மணிக்கே செய்து முடித்துக் கொண்டவனாய் கடியாரத்தைப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தான். மணி ஐந்தாயிற்று. அந்த சமயத்தில், அவனுக்கு முன்னால் ஒரு வேலைக்காரன் தோன்றி குனிந்து வணங்கி "பெரிய எஜமானியம்மாள் அழைக்கிறார்கள்" என்றான். இதைக் கேட்ட மைனருக்கு கோபம் பிறந்தது. தான் புறப்படப் போகும் நல்லசமயத்தில் தனது தாய் எதற்காக அழைக்க வேண்டுமென்ற நினைவும் ஆத்திரமு முண்டாயின. உடனே எழுந்து தனது தாயிருந்த அந்தப்புரத்தை நாடிச் சென்றான்.

மாரமங்கலம் ஜெமிந்தாரிணியான கல்யாணியம்மாளுக்கு அப்போது முப்பத்து மூன்று வயது நிறைந்தது. அவள் மகா கம்பீரமான அழகு வாய்ந்தவள் என்பது முன்னரே குறிக்கப்பட்டிருக்கிறது. எவருக்கும் கிடைக்காத சுக போகங்களிலும் அபரிமிதமான செல்வத்திலும் தானே ஏக சக்ராதிபதியாயிருந்து, தேகத்தைப் பாது காத்துக் கொண்டவளாதலின், அவளது அழகு அபாரமாய்ப் பெருகி அவள் பூலோக சக்கரவர்த்தினியோ அல்லது இந்திராணியோ என்று யாவரும் நினைக்கும்படி ஜெகஜ்ஜோதியாய் விளங்கி



னாள். சாமர்த்தியமாகவும் சாதுரியமாகவும் பேசும் வாக்குவன்மையும், யாவரையும் அடக்கியாளும் மேம்பாடும் திறமையும் பெற்றவளாய், அவளைக் கண்ட யாவரும் பயபக்தியும், மதிப்பும் கொள்ளும்படியாக விருந்தாள். இளமைப் பருவத்திலேயே விதவை நிலைமையடைந்தவளாதலின், அவளது பாலியமும், உன்னத வளப்பும், சிதறிச் சீர்குலைந்து போகாமல், மெருகேற்றிய சுவர்ணம்போலவும், பட்டை தீர்ந்த வைரத்தைப்போலவும் ஆயிரமடங்கு ஒளிபெற்றிருந்தன. வயதேறுவதனால், சிலருக்குண்டாம் தசைப்பற்றைப்போல அவளுக்கு எவ்வித இழுக்கும் ஏற்படாமல், அவள் யௌவனப் பருவத்திலிருந்ததைவிட அப்போதே மிக்க வசீகரத் தோற்றமுடையவளாய்த் தோன்றினாள். காண்போர், அவளுக்கு இருபது வயதே இருக்குமென்று மதித்தலன்றி, முப்பத்து மூன்று வயதடைந்தவளாக அவளை எவரும் சொல்லத் துணியவில்லை.

அவள் பாலியப் பருவத்தினளாதலின் சகலமான ஆபரணங்களையும் அணிந்திருந்தாள். மைனர் அழைக்கப்பட்ட அந்த தினம் அவள் முற்றிலும் கருப்புப்பட்டில் ஜரிகைக் கரையுள்ள பகட்டான சேலையணிந்திருந்தாள். தந்தம்போலப் பளபளப்பாயிருந்த அவளது மேனிக்கு கருப்புப் பட்டாடை மிகவும் பொருந்தி அவளது அழகை நிரம்பவும் சோபிக்கச் செய்தது. சாய்மான நாற்காலிபோலிருந்த ஒரு சோபாவில் அவள் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அந்த அந்தப்புரத்தில் எங்கும் படங்களும் நிலைக்கண்ணாடிகளும், லஸ்டர்களும், சோபாக்களும் பூந்தொட்டிகளும், ஜாலர் வைத்த தொங்கல்களும் நிறைந்து நாடகக்காட்சிபோல அமைந்திருந்தன. அவள் சந்தோஷமற்ற வதனத்தோடு உட்கார்ந்திருந்ததைக் கண்ட மைனருக்கு ஒருவகையான அச்சம் தோன்றியது. அவள் தன்னை எதற்காகவோ கண்டிக்கப் போகிறாளென்பதை உணர்ந்து கொண்டான். என்றாலும், அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல், தன்னுடைய தாய்க்கு தான் முற்றிலும் அடங்கியவனல்லனென்பது தோன்ற உள்ளே நுழைந்து அவளுக்கு நெடுந்தூரத்துக்கப்பால் எங்கேயோ ஒரு மூலையில் கிடந்த ஒரு சோபாவில் உட்கார்ந்து தனது தாயின் பக்கம் காலை நீட்டி உட்கார்ந்து இன்னொரு திக்கிலிருந்த படத்தைப் பார்த்தவண்ணம் "இம்; சரி; எனக்கு அவசரமாய்ப் போகவேண்டும். கூப்பிட்ட காரியம் என்ன?" என்று அலட்சியமாகக் கேட்டான்.

அதைக்கண்ட கல்யாணியம்மாள் கோபமும் அன்பும் காட்டிய முகத்தோடு "தம்பி! நீ பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொண்ட மரியாதை இதுதானா? நான் கூப்பிட்டால் நீ ஒரு காததூரத்துக்கு அப்பால் போய் ஒரு மூலையில் உட்கார்ந்து பாட்டியைப்போலக் காலை நீட்டிக்கொண்டு படுத்தோடு பேசுகிறயே? மற்ற எல்லா வரம்பையும் மீறி நடந்தாலும், பெரியோர் கூப்பிட்டால், அவர்களுக்கருகில் போய், நின்றோ அல்லது உட்கார்ந்தோ, மரியாதையாக சம்பாஷிக்க வேண்டுமென்பதைக் கூடவா அநாவசியமென்று தள்ளிவிடுகிறது. தம்பி! இப்படிப்பட்ட கேவலமான நடத்தையை யாரிடத்தில் பழக்கிக்கொண்டாய்? இனியாகிலும் அதைவிட்டுவிடு. பெரிய இடத்துப் பிள்ளைக்குத்தகுந்தபடி நடக்கக் கற்றுக்கொள்" என்றாள்.

அதைக் கேட்டவுடன் கோபத்தினால் மைனருடைய முகம் மாறிக் கறுத்தது. "ஓகோ! மரியாதையில்லாமல் நான், கூப்பிட்டவுடன் ஓடிவந்தேனே! என்னைக் கண்டவுடன் ஏதாவது ஸரசச் சொல்லி அதட்டவேண்டியது. அதுதான் பெரிய ஜமீன்தாருக்குப் பெருமையோ விருக்கிறது" என்று குத்தலாக மொழிந்தான்.

அதைக் கேட்ட, கல்யாணியம்மாள் மிகுந்த கோபத்தோடு உருட்டி விழித்து கம்பீரமாக நிமிர்ந்து உட்கார்ந்து "புதிது புதிதான வார்த்தைகளையெல்லாம் சொல்லுகிறாயே! என்ன கர்வபுத்தி இது? யாருடைய சகவாசதோஷம்! தம்பி! வேண்டாம். இப்படி நடந்து கொள்வதனால் பெருமை வந்து விடுமென்று நினைக்காதே; நீ உன் தாயினிடம் இப்படி நடந்து கொள்வதை யாராவது கண்டால் ஏளனம் செய்து சிரிப்பார்கள். அறியாத பையன் என்று நான் கொஞ்சம் பொறுத்துக் கொண்டால், தலைகால் தெரியாமல் உளறுகிறாயே!" என்று கடிந்து கூறினாள். அதைக் கேட்ட மைனர் புதுமையாக "அம்மா! என்ன, ஏழையேலே இவ்வளவு கோபம்?" என்றான்.

கல்யாணி:—போதும் பிரசங்கம் நிறுத்து. நீ மகா புத்திமானென்றே நினைத்துக் கொண்டிருந்தேன். நீ இந்த அற்பமாக காலமாக கெட்டலைகிறதைப் பார்த்து ஊரெல்லாம் சிரிக்கிறது. அதைக்கேட்கக் கேட்க எனக்கு சகிக்க முடியாத தலைகுனிவாக இருக்கிறது.—

மைனர்:—இந்தப் பழைய புராணத்தை ஒதுக்கத்தான் என்னை அழைத்ததா? இதற்குமுன் இதை ஆயிரம் முறை சொல்லியாய் விட்டது. இது ஆயிரத்தொராம் முறை.



கல்யாணி (கோபமாக):—என்ன துர்ப்புத்தி! எவ்வளவு திமிருக்கு! ஏதேது இப்போதே இப்படி இருக்கிறதே! நீ எல்லாவற்றிற்கும் ஜமீன்தாராய்விட்டால், கையால்பிடிக்க முடியாது போலிருக்கிறதே! மேஜர் ஆக இன்னம் ஒரு வருஷந்தான் குறைவிருக்கிறது. அதற்குள் உன்னை நல்லவழிக்குக் கொண்டுவரவேண்டுமென்று நானும், வக்கீல்கள் இரண்டுபேரும் நினைத்து எவ்வளவோ பாடுபடுகிறோம். நான் உன்னிடம் நயமாகவும் பயமாகவும் இனிப்பின்னைக்குச் சொல்வதைப் போல எவ்வளவோ புத்திசொல்லியாய் விட்டது. நீ சந்திரிப்பதைப் போல வீட்டுக்கே வராமல் திரிகிறாய். பணத்தை வாரி வாரி இறைத்துவிட்டு வருகிறாய். எப்போதும் கெட்ட சகவாசத்தோடு திரிகிறாய். நீ எப்போதும் இப்படித்தான் போகிறாய்? ஒன்றும் விளங்கவில்லையே!

மைனர்:—நான் எப்போதும் அரசராஜாவோடு தானே இருக்கிறேன். அவனுடைய சகவாசம் கெட்ட சகவாசமா? அவனுடைய தங்கை கண்மணியை எனக்குக் கலியாணம் செய்து வைக்க ஏன் ஏற்பாடு செய்யவேண்டும்?

கல்யாணி:—ஆகா! நீ பேசுகிறது எவ்வளவு அழகாயிருக்கிறது! கண்மணியும் அவனும் தவறுதலாக ஒருவயிற்றில் பிறந்துவிட்டார்கள். மகா உத்தமியென்றாலும் அந்தக் குழந்தைக்கே தகும். எவருக்கும் கிடைக்காத மாசற்ற மாணிக்கமல்லவா கண்மணி. அவள் மேலான குணங்களும் நல்ல நடத்தையும் உடைய பத்தரைமாற்றுத் தங்கம். அவனோ சுத்த அயோக்கியன், குடியன், சூதாடி, தாசி வீடே கதியாய்க் கிடக்கும் மதிகேடன். அவனுடைய உண்மையான யோக்கியதை இன்னதென்பதை கண்மணி இன்னமும் அறிந்து கொள்ளவில்லை. அவன் விளையாட்டு புத்தியுடையவனென்று மாத்திரம் நினைத்துக் கொண்டிருக்கிறாள். உண்மையில், அவனுடைய குணம் எனக்கே தெரியாமல் போய்விட்டது. தெரிந்திருந்தால், மீனாக்ஷியம்மாளுக்கு நான் வாக்குக் கொடுத்திருக்கவே மாட்டேன். சொன்ன சொல்லுக்கு விரோதமாக இப்போது செய்ய எனக்கு மனமில்லை—என்றாள்.

மைனர்:—அப்படியானால், அந்தப் பேச்சையே எடுப்பதில் என்ன உபயோகம்? எனக்கு அவசரமாக ஒரு இடத்துக்குப் போக

வேண்டும். கூப்பிட்ட காரியம் ஒன்றுமில்லைபோலிருக்கிறது. நான் போகலாமல்லவா ?—என்றான்.

கல்யாணி:—(கோபத்தோடு) ஓகோ! அவசரமாய்ப் போக வேண்டுமோ! சரிதான். கண்மணி நல்ல தங்கமான பெண். இந்த துர்நடத்தைகளெல்லாம் அவளுக்கு கொஞ்சமாவது பிடிக்காது. அவள் நிரம்பவும் அழகாயும் நற்குணவதியாயு மிருக்கிறாளென்று நீ ஆசைப் பட்டதால், நான் இதை முடித்தேன். நீ கெட்டலைவது அவளுக்குத் தெரிந்தால், அவள் உன்னைக் கலியாணம் செய்து கொள்ளமாட்டாள். நீ மோசம் போகிறவன்தான்.

மைனர்:—ஒரு நாளுமில்லை. அவளுக்கு என்மேல் எவ்வளவு பிரியம் தெரியுமா? எனக்காக உயிரைக் கூடக் கொடுத்துவிடுவாளே. அதுவுமின்றி, அவளுக்கு சொந்தமில்லை. ஒன்றுமில்லை. இவ்வளவு பெரிய சமஸ்தானத்துக்கு எஜமானியாவதை எவளாகிலும் வேண்டாமென்பாளோ !

கல்யாணி:—சரி; அப்படியே இருக்கட்டும். நான் எதற்காக உன்னை வரவழைத்தேனென்பதை சொல்லுகிறேன்; கேள். உன்னுடைய போஷகர்களான சிவஞானமுதலியாரும், சோமநாதபுரம் ஜெமீந்தாரும் நேற்று என்னிடம் வந்து நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். மனிதர்களுடைய புத்தியைக் கெடுக்கக் கூடிய துர் விஷயங்கள் நிறைந்த இந்த சென்னையில் நான் இருப்பது தவறென்றும், அதனால் குழந்தைகள் கெட்டுப்போக சந்தர்ப்பம் உண்டாகிறதென்றும் அவர்கள் கூறியதன்றி, எல்லோரையும் அழைத்துக் கொண்டு மாரமங்கலத்துக்கு உடனே போவது நல்லதென்றும் சொல்லுகிறார்கள். ஆகையால் அப்படியே செய்யத் தீர்மானித்து விட்டேன். உன்னுடைய கலியாணகாலம் வரையில் நாம் அவ்விடத்திலேயே இருக்க வேண்டும். ஆகையால், நீயும் புறப்படத்தயாராக இருக்கவேண்டும். அதைச் சொல்லவே உன்னை அழைத்தேன்.—என்றாள்.

மைனர்:—(ஆத்திரத்தோடு சோபாவைவிட்டெழுந்த வண்ணம்,) பலேபேஷ்! நீங்களெல்லாரும் போங்கள். என் உயிர் போனாலும் நான் அந்தப் பட்டிக்காட்டுக்கு வரமாட்டேன். அங்கே எனக்கு ஒரு நிமிஷங்கூடப் பொழுது போகாது—என்றான்.



அதைக்கேட்ட கல்யாணியம்மாள் கோபத்தோடு நிமிர்ந்து உறுதியான குரலில் "அப்படியானால் நாங்கள் போகிறோம். நீ இன்னொன்று செய்; நம்முடைய சோமநாதபுரம் ஜெமீந்தார் வக்கில் பரிட்சையில் தேறியவரென்பதும் சட்டத்தில் நல்ல அநுபோக முள்ளவரென்பதும் உனக்குத்தெரியும். அவருக்கும் இந்த இராஜதானியின் கவர்னருக்கும் அன்னியோன்னியமான சிநேகமுண்டு; பம்பாய், கல்கத்தா மத்தியமாகாணம் முதலிய இராஜதானிகளில் ஜெமீன்தாரி வாகம் எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி விசாரணை செய்வதற்காக கவர்னர், எழெட்டுப் பெரிய மனிதர்களை ஒன்றாக நியமிக்கப் போகிறாராம்; அதில் நம்முடைய சோமநாதபுரம் ஜெமீந்தாருக்கும் ஒரு ஸ்தானம் கிடைத்திருக்கிறதாம். அவர் உனக்கு அதில் கீழ் உத்தியோகங்களில் ஒரு கௌரவ உத்தியோகம் சம்பாதித்துக் கொடுத்து, உன்னையும் தம்முடன் கூட அழைத்துக் கொண்டு போக விரும்புகிறார். வடஇந்தியாவிலுள்ள மகாராஜாக்களின் சமஸ்தானங்களுக்கெல்லாம் நீபோய்ப் பார்த்தால் உனக்கு உலக அநுபவம் ஏற்படுமென்று சொல்லுகிறார். ஆகையால் நீ அவருடன் போய்விட்டு வந்து சேர். அதற்குள் கலியாண காலம் வந்துவிடும்.

மைனர்:—(குறும்பாக) என்னுடைய கலியாண காலம் இப்போது வரமாட்டேனென்கிறதோ? இதே நிமிஷத்தில் கலியாணம் செய்து கொள்ள நான் தயாராக இருக்கிறேன். பெண்ணும் சலாம் போட்டுக் கொண்டு கலியாணத்தை ஏற்றுக்கொள்ளும். அதை விட்டு, மூக்கை நேராய்ப்பிடிக்காமல், தலையைச் சுற்றிப்பிடிக்கிறதைப் போல், நான் ஊரை விட்டு ஒருவருஷத்துக்குத் திண்டாட வேண்டுமோ! நான் போகவே மாட்டேன்.

கல்யாணி:—உன்னுடைய தகப்பனார் மரணசாசனத்தில் எழுதியிருக்கிறபடி கலியாணம் செய்கிறதா அல்லது நீ நினைத்தபடி செய்கிறதா?

மைனர்:—ஐயர் வருகிறவரையில் அமாவாசை காத்திருக்குமோ. என் தகப்பனார் அறுபது வயதில் கலியாணம் செய்து கொண்டால், நானும் அப்படியே செய்து கொள்ள வேண்டுமோ. அது முடியாது. ஒன்று, இப்போது கலியாணம் செய்து வையுங்கள். இல்லாவிட்டால், கலியாணம் ஆகிறவரையில் என்னை இங்கேயே விட்டு வையுங்கள், நான் எந்த ஊருக்கும் போகமாட்டேன்,

கல்யாணி:—சே! எவ்வளவு எடுப்பான பேச்சு! என்ன துடுக்கு! தம்பி! நீ இப்படி இருப்பாயென்று நான் நினைக்கவே இல்லை. நீ போகமாட்டேனென்றால், துரைத்தனத்தார் உன்னைக் கட்டாயப்படுத்திக் கொண்டு போவார்கள்.

மைனர்:—அப்படியே ஆகட்டும்; பார்க்கலாம் ஒரு கை.

கல்யாணி:—அது மாத்திரமல்ல. உனக்கு மாதமாதம் கொடுக்கிற பணத்தை நிறுத்தி விடுவார்கள்.

மைனர்:—கவலையில்லை. ஒன்றுக்கிரண்டாய் எழுதிக் கொடுத்து கடன் வாங்குகிறேன்—என்றான்.

அதைக் கேட்டவுடன், கல்யாணியம்மாளின் கோபம் அடக்க முடியாத நிலைமையை யடைந்தது; தனது ஆசனத்திலிருந்து எழுந்து நின்று அவனை உருட்டி விழித்து "இவ்வளவு துர்ப்புத்தியா உனக்கு! நீ என் சொல்லை மீறித்தான் நடக்கப் போகிறாயா?

மைனர்:—நான் இந்த ஊரிலேதான் இருக்கப் போகிறேன். என்னை வீணில் தொந்தரவு செய்ய வேண்டாம்.

கல்யாணி:—இது தொந்தரவல்ல உத்தரவு. நான் உத்தரவு செய்கிறேன். நீ கீழ்ப்படிய வேண்டும்—என்று அதட்டிக் கூறினாள்.

அதைக்கேட்ட மைனர் "ஆகட்டும். அப்படியே செய்வோம். உத்தரவுப்படி, மேல்படிகிறேம்" என்று குறும்பாக மொழிந்து அலட்சியமாக வேறு திக்கை நோக்கினான்.

அதைக்கண்ட கல்யாணியம்மாளின் மனதில் கரைகடந்த கோபமும், விசனமும் பொங்கி யெழுந்தன. மிகவும் வெறுப்பாக அவனை நோக்கி "சே! இவ்வளவு கேவலமான குணமுடைய மனிதனா நீ! ஆகா! நீ குழந்தையாயிருந்த போது உன் பொருட்டு நான் பட்டபாடுகள் இன்னின்னவை யென்று நீ அறிவாயானால்—உனக்கு நான் என்னென்ன செய்திருக்கிறே னென்பதை நீ உணர்வாயானால் நீ இப்படி நடந்து கொள்வாயா! ஆனால், அவைகளை நீ அறிந்தாலும், உன் புத்திமாறுமா" என்று கூறினாள்.



மைனர்:—(மிகவும் அலட்சியமாக) சரி; மறுபடியும் பழைய கதை ஆரம்பமோ? நான் குழந்தையாயிருக்கும்போது யாரோ என்னைத் தூக்கிக் கொண்டு போனதும். என்னை மீட்டுக் கொண்டுவந்து விட்டார்களாம். தொட்டதுக்கெல்லாம் அந்தப் பெருமையையே எடுத்துப் பேசுகிறது. இல்லாவிட்டால், மேலிருந்த நாய்களெல்லாம், குழந்தையைத் தேடாமலும், திரும்பவும் அது அகப்பட்டால், அதை அழைத்து வராமலும் தள்ளிவிடுவார்களோ?—என்று சிறிதும் நன்றியறிவென்பதே இல்லாமல் கூறினான். அவனுடைய கவிரக்கமற்ற கொடிய சொற்களைக் கேட்டவுடன், கல்யாணியம்மாளின் மனம் பொங்கி யெழுந்தது. கண்களில் கண்ணீர் கலகலவென்று உதிர்ந்தது. சொற்கள் தொண்டையிலிருந்து வெளியில் வர மாட்டாமல் அடைபட்டுப் போயின. கல்யாணியம்மாள் தன் சேலைத் தலைப்பை முகத்தில் மறைத்துக் கொண்டு இரண்டொரு நிமிஷம் கோவெனக் கதறியழுதவுடன், கண்களைத் துடைத்துக்கொண்டு "திரும்பவும் அவனைப் பார்த்து "கண்ணப்பா! உன் இஷ்டம்போலச் செய். ஏதோ அவசரமென்றுமே போய் அழைப்பார். இனிமேல் நான் உன்னை அழைப்பதுமில்லை, உன்னிடம் பயமாகக் கேட்பதுமில்லை, என்னுடைய அதிகாரத்தைச் செலுத்த வேண்டியே அப்படிச் சொல்லுகிறேன்." என்று உறுதியாகக் கூறினாள்.

மைனர்:—சரி; இனி மல்லுக்குத்தான். யார் கட்சி ஜெயிக்கிறதென்பதைப் பார்க்கலாம்—என்று இறுமாப்போடு கூறிவிட்டு, முறுக்காக எழுந்து வாசற்படியண்டை போய், சாத்தப்பட்டிருந்த கதவை ஆத்திரத்தோடு காலால் உதைத்துத் தள்ளிவிட்டு அப்பால் போய் திரும்பவும் கதவைப் படீரென்று சாத்திக்கொண்டு போய்விட்டான்.

அதை கவனித்துக்கொண்டே இருந்த கல்யாணியம்மாளுக்கு ரௌத்திராகாரமான கோபம் பொங்கி யெழுந்தது; விறைப்பாகத் திரும்பிக் கதவைப் பார்த்தாள். கண்களில் தீப்பொறி பறந்தது; "ஆ! விஷப்பாம்பே! என் மார்பிலேயே வளர்ந்து என்னையே கடிக்கிறாயல்லவா! சே! நீ மகா பாதகன்! உன் முகத்தில் விழித்தாலும் பாவம் சம்பவிக்கும். உன்னுடைய துர்ப்புத்தி அடங்க போகும்" என்று வாய்விட்டு வைது பற்களை நறநறவென்று கடித்துக் கொண்

டாள். அந்த சமயத்தில் தனக்கு மிகவும் சமீபத்தில் யாரோ மனிதர் சில சொல்லென்று இரகசியமாய்ப் பேசிக்கொண்ட ஓசையைக் கேட்டு மானைப்போல மருண்டு திடுக்கிட்டு திமிர்ந்து நாற்புறங்களையும் திரும்பிப் பார்த்தாள். அந்த அந்தப்புரத்திற்கு இரண்டு வாசல்களும் கதவுகளுமிருந்தன. அவள் சற்று முன் சென்ற கதவுக்கு எதிரிலிருந்த இன்னொரு கதவுக்கு அப்புறத்தில் அந்த ஓசை கேட்டதாக உணர்ந்த கல்யாணியம்மாள் விரைவாக எழுந்துபோய் அந்தக் கதவைத் திறந்து பார்க்க, அவளுடைய புதல்வியர் இருவரும் கதவுக்கு அப்புறத்தில் ஒளிந்து நின்றதைக் கண்டாள்.

மூத்தவளான துரைஸானி யம்மாளுக்கு பதினேழு வயதும், சிறியவளான கோமளவல்லி யம்மாளுக்கு பதினைந்து வயதும் நிறைந்திருந்தது. இருவரும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவரைப் போல, தாயின் அற்புத வடிவத்தையும் வனப்பையும் கொண்டு இரண்டு சுவர்க்க லோகங்கள் ஜதையாகக் காணப்படுவதைப்போல நின்றனர். ஆனால் துரைஸானியின் முகத்தில் உன்னதமான தோற்றமும் அமர்த்தலான பார்வையும் தாயினுடையதைப் போன்ற செருக்கிய கம்பீரமான நிமிர்வும் காணப்பட்டன. ஆனால் சிறியவளிடத்தில் பெண்தன்மையும் அதிகமான கவர்ச்சியும் ஒருவகையான இளக்கமும் அடக்க வொடுக்கமும் நற்குண நல்லொழுக்கமும் தெள்ளிதில் விளங்கின. இருவருடைய அழகும் சாமுத்திரிகா லக்ஷணத்துக்கு ஒருசிறிதும் பழுதின்றி ஒழுங்காக அமைந்திருந்ததாயினும் மூத்தவளது தேகம் திமிரையும் பக்குவ காலத்து முறுக்கையும் காட்டியது. சிறியவளது தேகமோ மிருதுத் தன்மையும் உத்தம ஜாதி அமைப்பும் பெற்று விளங்கியது. துரைஸானியம்மாள் பூலோக சக்கரவர்த்தினிபோல விருந்தாள். கோமளவல்லியம்மாளோ வானுலகத்து தெய்வகன்னிகைபோல விருந்தாள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மடந்தையர் இருவரும் கதவின் மறைவில் ஒளிந்து நின்றதைக் கண்ட கல்யாணியம்மாள் அருவருப்போடு பார்த்து "துரைஸானியம்மா! என்ன காரியம் இது? தாய்க்குக் கீழ்ப்படியாமல் எதிர்த்து வாதாடும் பிள்ளை யொருவன் எனக்கிருப்பது போதாதா? தாய் என்ன செய்கிறாளென்று ஒளிந்து பார்க்கும் இரகசியப் போலீஸ்காரர்களான இரண்டு பெண்களையுமா நான் பெற்றிருக்கிறேன்?" என்று கடிந்து கூறினாள்.



அதைக் கேட்ட துரைஸானியம்மாளின் முகம் ஆயாசத்தைக் காட்டியது. "போலீஸ்காரரா நாங்கள்?" என்று வியப்போடு கேட்டு நிறுத்தினாள். "நாங்கள் அப்படி ஒன்றும் துஷ்டத்தனம் செய்யவில்லை அம்மா" என்று பணிவாகவும் உருக்கமாகவும் கூறி கண்ணீர் விடுத்து அழுதுவிட்டாள் கோமளவல்லி. இருவரது குணத் தழுகும் அதனால் நன்றாக வெளிப்பட்டது. மூத்தவள் பிறர்க்கடங்காத செருக்கும் பௌருஷமும் கொண்டவளாயிருந்தாள். சிறியவளோ மிருதுத்தன்மை பயம் பக்தி வாத்ஸல்யம் முதலியவற்றின் வடிவமாகவே தோன்றினாள்.

கல்யாணியம்மாள் மறுபடியும் திமிர்ந்து துரைஸானியைப் பார்த்து "என்ன காரியம் இது? ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று முறுக்காகக் கேட்டாள். துரைஸானி சடக்கென்று உடனே மறுமொழி கூற ஆரம்பித்து "என்ன பிரமாதக் காரியம் செய்துவிட்டோம்? ஒன்றையும் காணோமே! உபயோகமற்ற சங்கதிகளுக்கெல்லாம் வீண் ஆடம்பரமாக இருக்கிறதே" என்று கம்பத்தைப் பார்த்துக் கூறிய வண்ணம் சற்று தூரத்திலிருந்த ஒரு ஊஞ்சலண்டை போய், குழந்தை விளையாடுவதைப்போல, அதன் தாம்பாலைப் பிடித்து ஆட்டிப் பார்த்துக்கொண்டு அலட்சியமாக நின்றாள்.

அதைக் கண்ட கல்யாணியம்மாள், தனது இரண்டாவது புதல்வியை நோக்கி "கோமளவல்லி! நீயும் மற்றவளைப்போலவே மரியாதையில்லாமல் உன்னுடைய தாயினிடத்தில் நடந்துகொள்ளப் போகிறாயா? இவளது துடுக்கான மறுமொழி சொல்லப்போகிறாயா?" என்று முன்னிலும் சாந்தமான குரலில் கேட்டாள்.

கோமளவல்லி மிகவும் பணிவாக "நாங்கள் வேண்டுமென்று இங்கே வரவில்லை. [illegible] வருவான் வருவானென்று உட்கார்ந்து பார்த்திருந்தோம்; வரவில்லை. கோபம்பிடித்த தாயாரால் நீங்கள் தேடிக்கொண்டு [illegible] எழுந்து நாங்களே இங்கே வந்தோம். கதவருகில் வந்தவுடன், உன்னை அண்ணனுடைய [illegible] பேசக் கேட்டது. அந்த சமயத்தில் நாங்கள் உள்ளே வந்தால் [illegible] உண்டாகுமென்று இங்கேயே நின்றோம். [illegible] வேண்டுமென்று [illegible]" என்று அச்சத்தோடு கூறினாள்.

"அப்படியானால் உங்கள் அம்மாள் என்னை அவமதித்ததை யெல்லாம் கேட்டுக்கொண்டு இருந்தீர்களல்லவா?" என்றான்.

கோமளவல்லி அச்சமுற்றவளாய் "எல்லாம் காதில் விழவில்லை; நீங்கள் கேட்டதற்கு அம்மாள் சரியான மறுமொழி சொல்லாமல் மரியாதைக் குறைவாகப் பேசினது மாத்திரம் தெரிந்தது. அதைக் கேட்டவுடன், எனக்கு உடம்பு கிடுகிடென்று நடுங்கிப்போய் துக்கமும் அழுகையும் வந்துவிட்டன. சகிக்கமுடியாத சங்கடப் பட்டுக் கொண்டிருந்தேன். அப்போது நீங்கள் கதவைத் திறந்தீர்கள். அவ்வளவே நடந்தது." என்று துக்ககரமான குரலில் கூறினாள்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் தனது மூத்த குமாரியைப் பார்த்து அன்போடு "துரைஸானியம்மா! இப்படி வா! ஜன்னலண்டையில் போய் எதையோ கவனித்துக் கொண்டிருக்கிறாயே! நாங்கள் இங்கே பேசுவதில் உனக்கு எவ்வித சம்பந்தமுமில்லையென்று நினைத்துக்கொண்டாயா? வா இப்படி." என்று அழைத்தாள். அதைக் கேட்ட துரைஸானி "குற்றமில்லாத அற்ப சங்கதிகளுக்கெல்லாம் கோபித்துக் கொண்டால், எனக்கு சகிக்க முடியவில்லை; நான் ஒதுங்கி வந்துவிட்டேன்" என்று கூறிக்கொண்டே தாயிடம் திரும்பி வந்தாள். மைனாவைப்போல அவள் முற்றிலும் பயமற்றவளாய்ப் போகாமல் தாயிடம் இன்னமும் சிறிது மரியாதையும் பயமும் உடையவளா யிருந்தமையால், அழைத்தவுடன் வந்துவிட்டாள். என்றாலும் கல்யாணியம்மாள் முகத்தைச் சுளித்துக்கொண்டு "ஆகா! கீழ்ப்படியாத பிள்ளைகளைப் பெறுவதைவிட அதிக துர்ப்பாக்கியம் உலகத்தில் வேறு எதுவுமில்லை." என்று விரக்தியோடு கூறி தனது இளைய குமாரத்தியை வாத்சல்யத்தோடு பார்த்து அவளுடைய சிரத்தில் நிமிர்ந்திருந்த உரோமத்தைத் தடவிக்கொடுத்து "செய்தது தவறென்று நீயாவது விசனப்படுகிறாய். தாயார் என்கிற மரியாதையை நீ கொஞ்சம் வைத்துக் கொண்டிருக்கிறாய். துரைஸானி, அவளுடைய அண்ணனைப்போலவே ஆங்காரங்கொண்டவளா யிருக்கிறாள். அவன்தான் ஆண்பிள்ளை; துஷ்ட சகவாசத்தினால் கெட்டு அப்படி நடக்கிறானென்றால், அடக்கமாயிருக்கவேண்டிய பெண் இம்மாதிரி அடங்காமலிருப்பது, பின்னால் கஷ்டத்தைத்தான் விளைவிக்கும்." என்றாள். அதைக்கேட்டு துரைஸானி முறைத்துத் தாயைப்பார்த்து



விட்டு அப்பால் திரும்பிக் கொண்டாள். அந்த சமயத்தில் ஒரு பெருத்த கூக்குரல் அறைக்கு வெளியில் உண்டாயிற்று.

அதில் முக்கியமாக ஒரு பெண்பிள்ளையின் குரலே கேட்டது. அடுத்த நிமிஷம், அந்த ஸ்திரீ தலைவிரிகோலமாக உள்ளே நுழைந்து கல்யாணியம்மாளுக்கருகில் நெருங்கி ஆத்திரத்தோடு கைகளை நீட்டி நீட்டிக் கூச்சலிட்டு "இன்னைக்கோட ஒண்ணுரெண்டு தெரிஞ்சு போவணும்; கெடக்கு கெடக்குன்னு பாத்தா, அந்தக் காலடிப் பையன் தலைமேலே வர்றான். அந்தப் பையனுக்கு இப்பிடிக் குளும்பா! என்னைக் கண்டா அவனுக்கு எப்பவாத்தாலும் எளக்காரமாப் போச்சே! அந்தக் கழுதைப் பையனை நீங்க கண்டிச்சா ஆச்சு. இல்லாட்டிப்போனா, நான் இனிமேலே சும்மா இருக்கமாட்டேன். அம்மா! இத்தனை நாளா ஒங்க மொகத்துக்காகப் பாத்தேன்." என்று தை தாவென்று அப்பம் எண்ணெயில் குதிப்பதைப்போல ஆட்டியமாடிக் கூக்குரல் செய்தாள்.

தன்னுடைய தலைமை வேலைக்காரி அவ்வாறு தாறுமாறாய்ப் பேசிக்கொண்டு வந்ததைக் கண்ட கல்யாணியம்மாள் அவளுக்கருகில் நெருங்கி "பொன்னம்மா! என்ன வைத்தியம் இது? ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறாய்? நிதானமாய்ப் பேசு. என்ன நடந்ததென்று சொன்னால் அதற்குத் தக்கபடி நான் கண்டிக்கிறேன்; பதறாதே" என்று சாந்தமாகவும் அழுத்தமாகவும் கூறினாள்.

பொன்னம்மாள் இன்னம் ஆத்திரமாக "ஒரு நாளா ரெண்டு நாளா! பாக்கறப்போதெல்லாம் திட்டறான். நான் இந்த அரமனேலே ரொம்பகாலமா இருக்கறேனும்; பழய பெருச்சாளியாம்; சடாயுவாம். கெயக்கொரங்காம். இந்த அரமனேலே பிரியமா இருக்கிறீங்களாம்; அதனாலே, நான் மந்திரியாம்; ஒரு நாளைக்கி மெல்லஒலே அடிவச்சு மிதிச்சுடப் போறானும். நாம்பாட்டுலே இப்பு ஒரு மூலையிலே படுத்திருந்தா, வழிபோட போன நாயி என் தலைலே ஒதெச்சுட்டுப் போறான்; எம்பிட்டுத் தாளிக்கச்சேவ்!" என்றாள்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் மிகவும் தத்தளிக்கவளாய் "பொன்னம்மா! பொன்னம்மா! அதிகப் பேசாதே. தம்பியை நான் கண்டிக்கிறேன். உனக்கு சமஸ்தானாதிபதியாகப் போ

கும் தம்பியை நீ இப்படி இழிவாகப்பேசினால், மற்றவருக்கு இளப்பமாக இருக்கும். பேசாமல், நீ போய்ப் படுத்துக்கொள். நான் விசாரிக்கிறேன்," என்றாள்.

கேவலமான அந்த சிப்பந்தி தனது தமயனை அவ்வளவு இழிவாகப் பேசியதைக் கண்ட துரைஸானியம்மாளுக்கு பெருத்த கோபம் பொங்கி எழுந்தது. அவளைப் பார்த்து "அடி பொன்னி! உன்னுடைய போக்கியதை எவ்வளவு! நீ தாறுமாறாய்ப் பேசுகிறாயா? யாரைப் பேசுகிறோமென்பது தெரியவில்லையோ விருக்கிறது. பேசுவதை ஜாக்கிரதையாகப் பேசு; பல்லை உடைத்துவிடச் சொல்லுவேன்" என்று அதட்டிவிட்டு தனது தாயைப் பார்த்து "அம்மா! சற்று முன் மிகவும் அற்பமான ஒரு பிழைக்காக எங்களிடத்தில் மிகவும் கடுமை காட்டிக் கண்டித்த நீங்கள், மகா கேவலமான ஒரு வேலைக்காரி மிகவும் அவமானமாகத் தூஷிப்பதைப் பொறுத்துக் கொண்டிருப்பது ஆச்சரியமாக இருக்கிறதே!" என்றாள்.

அதைக் கேட்ட பொன்னம்மாள் "ஓகோ! மகா கேவலமான வேலெக்காரியோ! ஒங்க வூட்டுப் புழுக்கச்சி இன்னு பாத்தியோ! அவன் ஒரு குறும்பன். நீ அதுக்குமேலே கிறுவம் புடிச்சவ; எனக்குத் தெரியுமே," என்றாள்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் மிகவும் அதிகாரமான குரலில் "பொன்னம்மா! வாயை மூடு. வரவர உன் புத்தி என்ன இப்படி ஆய்விட்டது. மறுபேச்சு பேசாதே. அம்மா! துரைஸானி! கோமளவல்லி! நீங்கள் உங்களுடைய அந்தப்புரத்துக்குப் போங்கள். பொன்னம்மாளுடன் நான் கொஞ்சம் தனியாகப் பேச வேண்டும்" என்றாள்.

பொன்னம்மாள் "தனியாப் பேசணுமோ! என்னோடே என்ன பேசறது! அவன் பண்ணற அக்கரமத்தெத் தடுக்க வழி செஞ்சுதான் ஆவணும். அவனெக் கண்டா எமனெப்போல இருக்குதே. வங்களாவுலே இருக்கற ஒருத்தராச்சும் அவனெ நல்லவன்னு சொல்லுவாங்களா! கெடையாது, பொல்லா துஷ்டன் அப்பா!" என்றாள்.

அதைக் கேட்ட துரைஸானி பொங்கி எழுந்த கோபத்தோடு "அம்மா! காவற்காரனைக் கூப்பிட்டு இவளை கழுத்தைப் பிடித்து முதலில் தள்ளச் சொல்லப்போகிறீர்களா இல்லையா?" என்றாள்.



கல்யாணியம்மாள் பெண்களை நோக்கி "நீங்கள் இருவரும் அந்தப்புரத்துக்குப் போங்கள். மற்றக் காரியம் அப்புறம் ஆகட்டும்" என்று அழுத்தமாக அதட்டிக்கூற, அங்கு நடந்த விபரீத சம்பாஷணையைக் கண்டு அஞ்சி நடுங்கிய கோமளவல்லி விரைவாக அப்பால் போய்விட்டாள். துரைஸானி மிகுந்த அருவருப்போடு பொன்னம்மாளை உருட்டி விழித்துப் பார்த்த வண்ணம் மிகவும் சம்பிரமாக நடந்து, அப்பால் போய் கதவை டபாரென்று சாத்தி தனது அதிருப்தியைக் காட்டி விட்டு அப்புறம் சென்றாள்.

அதன் பிறகு தனிமையிலிருந்த பொன்னம்மாளை கல்யாணியம்மாள் சாந்தப்படுத்த ஒரு நாழிகை யாயிற்று. ஜெமீந்தாரிணிக்கும் பொன்னம்மாளுக்கும் அந்தரங்கமான சில விஷயங்களில் சம்பந்த முண்டாதலால், ஜெமீந்தாரிணி அவளிடம் நயந்து போக நேர்ந்தது. அவளுடைய தாட்சணியத்துக்காக, பொன்னம்மாள் ஒருவாறு சாந்தமடைந்தாளாயினும் மைனர் தன்னை இழிவாக நடத்தியதைப்பற்றிய ஆத்திரம் மனதிற்குள் பொங்கிக் கொண்டே இருந்தது.

இங்கு நிலைமை இப்படி இருக்க, சற்று முன் வெளியிற் சென்ற இளங்குமாரிகள் இருவரும் தாயின் அந்தப்புரத்துக்கப்பால் ஒவ்வொருவருக்கும் தனியாக அமைக்கப்பட்டிருந்த அந்தப்புரங்களை நோக்கிச் சென்றனர். அவர்கள் சென்ற இடத்திற்கு 50 கெஜதூரத்துக்கு அப்பாலிருந்த ஒரு அறைவாசலில் ஒரு யௌவனப் புருஷன் நின்று கொண்டிருந்தான். குமாஸ்தாக்கள் இருந்து கணக்குகள் எழுதுவதற்காக விடப்பட்டிருந்த அந்த அறையின் வாசலில் நின்றவன் குமாஸ்தாக்களில் ஒருவன். அவனது வயது பதினெட்டுக்குமேல் இராது. அவன் மன்மதனைப் போன்ற அற்புதமான அழகும் பளபளப்பான சிவந்த மேனியும் பெற்றவன். அடர்ந்து கறுத்து வளைந்திருந்த புருவங்களும் உருண்டைக் கன்னங்களும் மூக்கும் விழியும் கரணை கரணையாயமைந்த கைகளும் கால்களும் மிக்க வசீகரமாயமைந்து, அவன் ஒரு யௌவனப் பெண்ணைப் போல விருந்தான். அவனது உடம்பில் ஒரு சேலையை மாத்திரம் அணிந்து விட்டால் அவன் உலகமெல்லாம் மோகிக்கும்படி செய்யத்தக்க அற்புதவடிவழகியான பெண்போலவே காணப்படுவான். அவனது குளிர்ந்த பார்வையும், மிருதுவான சொல்லும், அழகான நடையும், பதற்றமில்லாத

செய்கைகளும், கபடமற்ற மனதும் தத்ரூபம் பெண்ணின் தன்மையைப்போலவே இருந்தன. சிருஷ்டி கர்த்தாவான பிரம்மதேவன் அயர்ந்திருந்த சமயத்தில் பெண்ணுருபமைந்த ஒரு வடிவத்திற்கு ஆணென்ற பெயர் மாத்திரம் கொடுத்து அனுப்பிவிட்டானோ" என்று சந்தேகிக்கத்தக்க [illegible] விருந்த மோகனரங்கன் எனும்பெயர் கொண்ட அந்த [illegible] சிறுவன் [illegible] கண்டவுடன் கோமளவல்லி தன்னைச் [illegible] குனிந்து கொண்டு விரைவாக நடந்து தனது அந்தப்புரத்திற்குள் போய் விட்டாள். துரைஸானியோ அவனைக்கண்டவுடன் தனது தங்கை உள்ளே போய்விட்டாளா வென்பதை [illegible] பார்த்து விட்டு, அந்த அழகனை நோக்கி தனது [illegible] புன்னகை செய்து, தனது முழு ஆசையையும் [illegible] வெளிப்படுத்திக்காட்டி அவனை நன்றாகப் பார்த்து நெடுமூச்செறிந்தாள். அவளது மார்பு உயர்ந்து தணிந்தது. அந்த நிலைமையில் [illegible] அழகுடை நடைந்து அந்தப்புரத்திற்குள் நுழைந்தான். [illegible] அம்பைப்போலப் பாய்ந்த அவளது பார்வையைக்கண்டு அச்சமும் நடுக்கமும் வெட்கமும் கொண்ட மோகனரங்கன் தனது முகத்தைக் கீழே தாழ்த்திக் கொண்டான். அடுத்த நிமிஷத்தில் வீணை வித்துவானான மதனகோபாலன் அங்கு தோன்றினான்.

---

## 5-வது அதிகாரம்.

### சங்கடத்தின் மேல் சங்கடம்.

துரைஸானியின் அந்தப்புரத்தினின்று வெளிப்பட்ட மாரமங்கலம் மைனர் நேராக துரைராஜாவின் பங்களாவை யடைந்தான். அப்போது மாலைநேரமானதால், இராப்போஜனத்தை அப்போதே முடித்துக் கொள்ளக்கூடாமல் போனதுபற்றி பொன்னம்பலத்தை கடைக்கு அனுப்பி, சிற்றுண்டிகள் தருவித்து உட்கொண்டு, துரைராஜாவினிடம் விடைபெற்றுக் கொண்டு தமது ஏற்பாட்டின்படி சரியாக ஏழுமணிக்கு கருப்பாயியின் வீட்டை யடைந்தான். அப்போது முன்னிருட்காலமாதலால், ஏழுமணிக்கே நன்றாக இருண்டிருந்தது. மைனரது வருகையை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணம் கருப்பாயி திண்ணையில் உட்கார்ந்திருந்தாள். வாசலில் விளக்கு வைக்கப்படாமலிருந்தது. வயல்களுக்கும் தோப்புகளுக்கும் இடையில் தனிமையாக இருந்த இடமாதலால், அது மிக்க பயங்கரமாகவிருந்தது. மைனர், துணிவற்ற கோழைமனத்தினனாயினும், மோகனாங்கியின் சிநேகம் தனக்கு ஏற்படப் போகிறதென்ற ஆசையினாலும், அவள்மீது கொண்ட மோக வேகத்தினாலும் தூண்டப்பட்டவனாய் துணிவடைந்து அங்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டவுடன் கருப்பாயி எழுந்து வாசலில் வந்து புன்னகையும் மகிழ்ச்சியும் காட்டிய முகத்தோடு அவனை வரவேற்று "வாங்கசாமி வாங்க வாங்க" என்று உபசரித்து அழைக்க அவனும் புன்னகை செய்தவனாய், திண்ணையில் உட்கார முயன்றான். உடனே கருப்பாயி, "சாமி! உள்ளற போயிறலாம். இங்கே இருட்டுலே குந்தவானே, அம்பட்டச்சி வீட்டுச்சேன்னு பேரானை பண்ணுவாங்க. உள்ளற அதிகம் கிளிஞ்சல் ஒண்ணுமில்லீங்க. சுத்தமா இருக்குது; வந்து பாருங்க" என்று தேன்போல மொழிந்து முன்னால் செல்ல, மைனர் அவளது வேண்டுகோளைத் தடுக்க மாட்டாமல், அவளுக்குப் பின்னால் தொடர்ந்து சென்றான். உள்ளே யிருந்த நடை தாழ்வாரம் கூடம் முதலியவற்றைத் தாண்டி இருவரும் உள்புறம் சென்றனர். அது அதிக உயரமில்லாத சிறிய ஓட்டு வீடாதலால், இரண்டு மூன்று முறை நிலைப்படியிலும் மேன்மச்சிலும் தலை இடித்தமையால், அவன் குனிந்து செல்லும்படி நேர்ந்தது. உன்னதமான பங்களாவிலும் அரண்மனையிலும் அலங்காரமான மண்டபங்களிலும் வீடுகளிலும் இருந்து பழகிய தான் அவ்வாறு கேவலமான ஒரு குடிசைக்குள் நுழைய நேர்ந்ததைப் பற்றி அவன் வெட்கினானாயினும் வீரியத்திலும் காரியமே பெரிதென்று மதித்து உள்ளே நுழைந்தான். மோகனாங்கியை வெல்லும் காரியம் தன்னால் முடியவில்லை யென்று கருப்பாயி சொல்லி விடுவாளோவென்ற சந்தேகத்தினால் மிகவும் சஞ்சலமடைந்து வந்த மைனர், அவள் சுமுகத்தோடு தன்னை உள்ளே அழைத்துப் போனதிலிருந்து அவள் தனக்கு சந்தோஷ சமாசாரம் சொல்லப் போகிறாளென்று நினைத்தவனாய், பொங்கியெழுந்த உற்சாகத்துடன் உள்ளே சென்றான்.

முன்னால் நடந்த கருப்பாயி கூடத்திலிருந்து காமரா உள்ளில் நுழைந்து "இப்படி வந்துடுங்க சாமி!" என்று அழைக்க, மைனரும் உள்ளே புகுந்தான். அது 10 அடி நீளம் 8 அடி அகலமுள்ள ஒரு சிறிய அறை. விளக்கெண்ணெய் விளக்கொன்று ஒரு மூலையில்

எரிந்துகொண்டிருந்தது. அதன் வாசற்பக்கத்தில் ஒரு மர ஜன்னல் வைக்கப்பட்டிருந்தது. சுவர்களிலும் தரையிலும் மேடுகளும் பள்ளங்களும் பாழிகளும் காணப்பட்டனவாயினும் குப்பை செத்தையில்லாமல் அன்றைக்கே அந்த அறை சுத்தமாகப் பெருக்கப்பட்டிருந்தது நன்றாகத் தெரிந்தது. அதற்குள்ளிருந்த அடுக்குப்பானைகள் ஆணிக்கொடி தொம்பைக்கூண்டு முதலியவைகள் யாவும் வேறொரு அறைக்குக் கொண்டுபோய் வைக்கப்பட்டனவாதலின், அந்த அறையில் எவ்வித சாமானும் காணப்படவில்லை. தரையில் சுவரோரமாக ஒரு கயிற்றுக் கட்டில் மாத்திரம் காணப்பட்டது. அதன்மேல் ஒரு மெத்தையும் தலையணைகளும் போடப்பட்டிருந்தன. புதிதாய் சலவை செய்யப்பட்ட வெள்ளைத் துப்பட்டியொன்று அவற்றின்மேல் விரிக்கப்பட்டிருந்தது. கட்டிலின் கீழ், முகம் சீவப்பட்ட ஐந்தாறு இளநீர்களும் கத்தியும் காணப்பட்டன. ஒரு தட்டில் ஒரு சீப்பு பச்சைவாழைப்பழம், சர்க்கரை, வெற்றிலை பாக்கு, ஏலக்காய், லவங்கம் முதலிய சாமான்கள் காணப்பட்டன. ஒரு சிறிய வெண்கலச் செம்பில் நன்றாகக் காய்ச்சப்பட்டிருந்த பால் வைக்கப்பட்டிருந்தது. சுவர்களில் வாசனை ஊது வர்த்திகள் கொளுத்தி வைக்கப்பட்டிருந்தன வாதலின், அறைமுழுதும் கமகமவென்று வாசனை கமழ்ந்துகொண்டிருந்தது. எதிர்பாராத அந்த ஏற்பாடுகளையெல்லாம் கண்டவுடன், மைனர் மிகுந்த வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தவனாய், ஒருகால் மோகனாங்கி அவ்விடத்துக்கே வரப்போகிறாளோ வென்று ஐயமுற்று சிறிது திகைத்து நின்றான். உடனே கருப்பாயி "கட்டிலுமேலே குந்துங்க சாமீ! என்ன யோசனை பண்ணுறீங்க! ஒரு சாமானும் பழசில்லே. எல்லாம் புத்தம் புதுசு. ஒங்களுக்காக இன்னக்கே வாங்கிபோட்டது." என்று அன்போடு கூற, மைனரின் அருவருப்பு விலகியது. கட்டிலில் உட்கார்ந்து கொண்டவராய், "இதெல்லாம் சரிதான்; காரியம் பழமோ காயோ? அதை முன்னால் சொல். மனசுக்கு நிரம்பவும் ஆவலாக இருக்கிறது." என்றான்.

அதைக் கேட்ட பெண்பிள்ளை "கருப்பாயி போறு, காயிருந்த எல்லாம் பழுத்துப் போவுதா! ஒன்றும் யோசனை பண்ணாதீங்க. காரியம் அனேகமா இன்னைக்கி ராத்திரிக்குள்ளற தீந்துபோவும். அப்பாலே ஐயாவும் அம்மாளும் சந்தோசமா இருக்கறபோது என்னை நெனப்பீங்களா?" என்று பரிகாசமாய்ப் பேசி



அதைக் கேட்ட மைனர் கரைகடந்த மகிழ்ச்சியும் மனவெழுச்சியும், பதைப்பும் கொண்டவனாய் "சரி; என்ன நடந்தது? விவரமாய்ச் சொல். என்மனம் தவிக்கிறது" என்று உருக்கமாக நயந்து கேட்க, கருப்பாயி "பகல்லே நீங்கபோன அப்பாலே நான் அந்த பங்களாவுக்குள்ளற தந்தரமாய் போயி பேச்சுக்குடுத்தேன். அந்தப் பொண்ணுக்கு தாதியா ஒருத்தி இருக்கறா. அவளோடே மெள்ள நேசம் பண்ணி, ஒரு பெரிய மனிசர் வீட்டுப் புள்ளே அந்தப் பொண்ணுமேலே ஆசைப்படுறான்னு சொல்லி, காரியத்தை முடிச்சுக்குடுத்தா, அவளுக்கு அஞ்ஞூறு ரூவா குடுக்கறேன்னு சொன்னேன். அந்த ஐயா அந்தப் பொண்ணு எம்பிட்டுப் பணம் ஒனுமின்னு கேட்டாலும் குடுப்பாரு இன்னு சொன்னேன். அவ, இன்னைக்கே காரியத்தை முடிக்கறதாரேன்னு வாக்குக் குடுத்திருக்கறா. இன்னக்கி நாடகமாம். அந்தப் பொண்ணு எட்டு மணிக்கு பட்டணம் போயி ஆடிப்புட்டு, ராத்திரி ரெண்டு மணிக்கு பங்களாவுக்கு வருவாளாம். இந்நேரம் பொண்ணுக்கிட்ட சொல்லி சரிப்படுத்தி இருப்பா. ரெண்டு மணிக்கு பொண்ணு பட்டணத்திலே இருந்து பங்களாவுக்கு வந்த உடனே, தாதியா இங்கே வந்து உங்களை பங்களாவுக்கு அழைச்சிக்கிட்டுப் போறேன்னு வாக்குக் குடுத்திருக்கறா." என்றாள்.

அதைக்கேட்ட மைனர் ஆனந்த பரவசமடைந்து மெய்ம் மறந்து அப்போதே சுவர்க்கபோக மனுபவிப்பவரைப் போலாய், "கட்டாயமாக வருவாளா?" என்று கேட்டார். "சத்தியமா வருவா. யோசனை பண்ணாதீங்க, அதிருக்கட்டும். நீங்க சோறு கீறு சாப்பிட்டீங்களா இல்லியா?" என்று கருப்பாயி அன்போடு கேட்க, மைனர் "சாப்பாட்டையெல்லாம் முடித்துக் கொண்டே புறப்பட்டேன். படுத்துக் கொள்வது ஒன்றே பாக்கி. வேறொன்றும் பாக்கி இல்லை" என்றான்.

கருப்பாயி:—இருந்தாலும், இம்பிட்டுத்தூரம் வந்திருக்கிங்களே. சாப்பிட்டதெல்லாம் போயிருக்கும். கட்டிலுக்குக்கீழே பழம் பாலு எளநீரு எல்லாம் கொஞ்சம் வச்சிருக்கேன். சாப்பிட்டு, வெத்தலை பாக்கு போட்டுக்கிணு சொகமாப்படுத்துத் தூங்குங்க. சரியா ரெண்டு மணிக்கு வந்து எளுப்பறேன். என்றாள்.—அதைக்கேட்ட மைனர், அவைகள் தனக்கு வேண்டாமென்று மறுக்க, அவள் வற்புறுத்த

எரிந்துகொண்டிருந்தது. அதன் வாசற்பக்கத்தில் ஒரு மர ஜன்னல் வைக்கப்பட்டிருந்தது. சுவர்களிலும் தரையிலும் மேடுகளும் பள்ளங்களும் பாழிகளும் காணப்பட்டனவாயினும் குப்பை செத்தையில்லாமல் அன்றைக்கே அந்த அறை சுத்தமாகப் பெருக்கப்பட்டிருந்தது நன்றாகத் தெரிந்தது. அதற்குள்ளிருந்த அடுக்குப்பானைகள் தனிக்கொடி தொம்பைக்கூண்டு முதலியவைகள் யாவும் வேறொரு அறைக்குக் கொண்டுபோய் வைக்கப்பட்டனவாதலின், அந்த அறையில் எவ்வித சாமானும் காணப்படவில்லை. தரையில் சுவரோரமாக ஒரு கயிற்றுக் கட்டில் மாத்திரம் காணப்பட்டது. அதன்மேல் ஒரு மெத்தையும் தலையணைகளும் போடப்பட்டிருந்தன. புதிதாய் சலவை செய்யப்பட்ட வெள்ளைத் துப்பட்டிபொன்று அவற்றின்மேல் விரிக்கப்பட்டிருந்தது. கட்டிலின் கீழ், முகம் சீவப்பட்ட ஐந்தாறு இளநீர்களும் கத்தியும் காணப்பட்டன. ஒரு தட்டில் ஒரு சீப்பு பச்சைவாழைப்பழம், சர்க்கரை, வெற்றிலை பாக்கு, ஏலக்காய், லவங்கம் முதலிய சாமான்கள் காணப்பட்டன. ஒரு சிறிய வெண்கலச் செம்பில் நன்றாகக் காய்ச்சப்பட்டிருந்த பால் வைக்கப்பட்டிருந்தது. சுவர்களில் வாசனை ஊதுவர்த்திகள் கொளுத்தி வைக்கப்பட்டிருந்தனவாதலின், அறைமுழுதும் கமகமவென்று வாசனை கமழ்ந்துகொண்டிருந்தது. எதிர்பாராத அந்த ஏற்பாடுகளையெல்லாம் கண்டவுடன், மைனர் மிகுந்த வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தவனாய், ஒருகால் மோகனாங்கி அவ்விடத்துக்கே வரப் போகிறாளோவென்று ஐயமுற்று சிறிது திகைத்து நின்றான். உடனே கருப்பாயி "கட்டிலுமேலே குந்துங்க சாமி! என்ன யோசனை பண்ணுறீங்க! ஒரு சாமானும் பழசில்லை. எல்லாம் புத்தம் புதுசு. ஒங்களுக்காவ இன்னைக்கே வாங்கியாந்தது." என்று அன்போடு கூற, மைனரின் அருவருப்பு விலகியது. கட்டிலில் உட்கார்ந்து கொண்டவராய், "இதெல்லாம் சரிதான்; காரியம் பழமோ காயோ? அதை முன்னால் சொல். மனசுக்கு ரொம்பவும் ஆவலாக இருக்கிறது." என்றான்.

அதைக் கேட்ட பெண்பிள்ளை "கருப்பாயி போனா, காயி பிஞ்சு எல்லாம் பழுத்துப் போவுது! ஒண்ணும் யோசனை பண்ணாதீங்க. காரியம் அனேகமா இன்னைக்கி ராத்திரிக்குள்ளற நிந்துபோவும். அப்பாலே ஐயாவும் அம்மாளும் சந்தோஷமா இருக்கறபோது என்னை நெனப்பீங்களா?" என்று பரிகாசமாய்ப் பேசி



அதைக் கேட்ட மைனர் கரைகடந்த மகிழ்ச்சியும் மனவெழுச்சியும், பதைப்பும் கொண்டவனாய் "சரி; என்ன நடந்தது? விவரமாய்ச் சொல். என்மனம் தவிக்கிறது" என்று உருக்கமாக வேண்டிக் கேட்க, கருப்பாயி "பகல்லே நீங்கபோன அப்பாலே நான் அந்த வங்களாவுக்குள்ளற தந்தரமாய் போயி பேச்சுக்குடுத்தேன். அந்தப் பொண்ணுக்கு தாக்கினவ ஒருத்தி இருக்கறா. அவளோடே மெள்ள செநேகம் பண்ணி, ஒரு பெரிய மனிசர் ஊட்டுப் பிள்ளை அந்தப் பொண்ணுமேலே ஆசைப்படுறான்னு சொல்லி, காரியத்தை முடிச்சுக்குடுத்தா, அவளுக்கு அஞ்சுநூறு ரூவா குடுக்கறேன்னு சொன்னேன். அந்த ஐயா அந்தப் பொண்ணு எம்பிட்டுப் பணம் ஒனுமின்னு கேட்டாலும் கொடுப்பாரு இன்னு சொன்னேன். அவ, இன்னைக்கே காரியத்தை முடிச்சுத்தாரேன்னு வாக்குக் கொடுத்திருக்கறா. இன்னைக்கி நாடகமாம். அந்தப் பொண்ணு எட்டுமணிக்கு பட்டணம் போயி ஆடிப்புட்டு, ராத்திரி ரெண்டு மணிக்கு வங்களாவுக்கு வருவாளாம். இந்நேரம் பொண்ணுக் கிட்ட சொல்லி சரிப்படுத்தி இருப்பா. ரெண்டு மணிக்கு பொண்ணு பட்டணத்துலே இருந்து வங்களாவுக்கு வந்த ஒடனே, தாக்கினவ இங்கே வந்து ஒங்களே வங்களாவுக்கு அழைச்சிக்கிட்டுப் போறேன்னு வாக்குக் குடுத்திருக்கறா." என்றாள்.

அதைக்கேட்ட மைனர் ஆனந்த பரவசமடைந்து மெய்ம் மறந்து அப்போதே சுவர்க்கபோக மடைந்தவரைப் போலாய், "கட்டாயமாக வருவாளா?" என்று கேட்டார். "சத்தியமா வருவா. யோசனை பண்ணாதீங்க, அதிருக்கட்டும். நீங்க சோறு கீறு சாப்பிட்டீங்களா இல்லியா?" என்று கருப்பாயி அன்போடு கேட்க, மைனர் "சாப்பாட்டையெல்லாம் முடித்துக் கொண்டே புறப்பட்டேன். படுத்துக் கொள்வது ஒன்றே பாக்கி. வேறொன்றும் பாக்கி இல்லை" என்றான்.

கருப்பாயி:—இருந்தாலும், இம்பிட்டுத்தூரம் வந்தீங்களே. சாப்பிட்டதெல்லாம் போயிருக்கும். கட்டுலுக்குக்கீளே பழம் பாலு எளநீரு எல்லாம் கொஞ்சம் வச்சிருக்கேன். சாப்பிட்டு, வெத்தலை பாக்கு போட்டுக்கிணு சொகமாப்படுத்துத் தூங்குங்க. சரியா ரெண்டு மணிக்கு வந்து எழுப்பறேன். என்றாள்.—அதைக்கேட்ட மைனர், அவைகள் தனக்கு வேண்டாமென்று மறுக்க, அவன் வற்புறுத்த

மைனர் அதன் பிறகு கீழே இருந்த வஸ்துக்களில் புகுந்து, இரண்டு வாழைப்பழங்கள் ஒரு இளநீர் முதலியவற்றை உட்கொண்டு தம்பூலந்தரித்து சயனித்துக்கொண்டார். அப்போது கருப்பாயி அங்கு தோன்றி "சாமி! படுத்து சொகமா தூங்குங்க. ஆனா, கொஞ்சம் கொசுக்கடி இருக்கும். விளக்கு இல்லாமெப்போனா, கொசு கடிக்காது. ஒங்க மனசுபோல செஞ்சுக்குங்க" என்றாள்.

அதைக் கேட்ட மைனர் விளக்கை அணைத்து விடும்படி அனுமதிக்க, கருப்பாயி அப்படியே தீபத்தை நிறுத்திவிட்டு, அவரைப் படுக்கச் செய்து, அவ்விடத்தை விட்டு வெளியில் போய் வாசற் கதவை சாத்திக்கொண்டு திண்ணையில் படுத்தாள். உட்புறத்தில் கட்டிலில் படுத்த மைனர் மோகனாங்கியைக் குறித்து ஜெபம் செய்ய வாரம்பித்தார். தேஜோமயமான அவளது இன்ப வடிவம், அவரது அகக்கண்ணில் காட்சிதந்து நிருத்தனம் செய்தது. அவளோடு தான் சம்பாஷணை செய்து கொஞ்சிக்குலாவி சரஸசல்லாபம் புரிந்திருப்பதாகவும் பாவனை செய்து மேன்மேலும் மனக்கோட்டை கட்டிக்கொண்டே தூக்கம் பிடியாமல் நெடுநேரம் வரையில் படுக்கையில் புரண்டு புரண்டு கிடந்து எப்போது மணி இரண்டாகுமோவென்று பெரிதும் தவித்துக் கிடந்தார். மெத்தையில் எட்டுமணிக்கே அவர் படுத்துவிட்டதாகலின், அவரது கண்ணிமைகள் பத்துமணிக்குள் சோர்ந்துபோய் மூடிக் கொண்டன. பத்தரைமணிக்குள் துயிலில் ஆழ்ந்து விட்டார். பதினொருமணி சமயத்தில் எழுந்த கருப்பாயி மெல்ல உள்ளே சென்று கையில் விளக்கை எடுத்துக் கொண்டு மைனரிருந்த அறைக்குள் நுழைந்து பார்க்க, அவர் ஆழ்ந்த நித்திரையிலிருக்கக் கண்டாள். ஓசை செய்யாமல் அவள் அவ்விடத்தை விட்டு, திரும்பவும் வெளியில் வந்து திண்ணையில் படுத்துக்கொண்டாள். மேலும் பொழுது வளர்ந்து நடு நிசி வேளையாயிற்று. கட்டையன் குறவன் வரவில்லையே என்று நினைத்தவளாய் கருப்பாயி தனது தலையை நிமிர்த்தி நிமிர்த்தி ஒற்றையடிப்பாதையைப் பார்த்தவண்ணம் படுத்திருந்தாள். பாதையின் வழியாகவே நடக்க அறியாத கட்டையன் குறவன், வயல்களின் வழியாக நடந்து கருமுகிலைப்போல, அவளது காலடியில் வந்து நின்று, தனது கையிலிருந்த கட்டைத்தடியினால் அவளது காலில் மெல்லத் தட்டினான். இருளில் திடுக்கிட்ட கருப்பாயி சடக்கென்று எழுந்து உட்கார்ந்து, கட்டையன் வந்து நிற்பதைக் கண்டாள், உட-



னே திண்ணையை விட்டுக் கீழே இறங்கி, கையைப் பிடித்து அவனை அழைத்துக் கொண்டு சிறிது அப்பால் போக, குடங்குடமாய்க் கள்ளைக் குடித்து ஆடிக் கொண்டு வந்திருந்த கட்டையன் "ஆளு வந்திருக்கானா? நீ சொன்னபடி டமார கையிலே எதாச்சும் சொத்து கித்து வச்சிருக்கானா?" என்று கேட்டான்.

கருப்பாயி "வந்து படுத்து நல்லாத் தூங்குறான். கொறஞ்சது பத்தாயிரத்துக்கு மோசமில்லே" என்றாள்.

கட்டையன்:—சரி; அந்த மம்மட்டியை இப்பிடி எடுத்தா. மொதல்லே குழியை வெட்டித் தயாரா வச்சுடுவோம். பாளை சீவ கத்தி கொண்டாந்திருக்கறேன். ஒரே வீச்சுலே கழுத்தை அறுத்து தூக்கிக்கிட்டுப் போயி அந்த கிடங்குலே போதச்சுடலாம். அவன் எதுமேலே படுத்திருக்கான்?—என்றான்.

கருப்பாயி:—கயித்துக் கட்டிலுமேலே பஞ்சுமெத்தெ போட்டு அதுமேலே படுத்திருக்கான்.—என்றாள்.

கட்டையன்:—நல்ல தாச்சு. வெட்டின பொறவாலே மெத்தெயோடெ வச்சு சுத்தி அப்படியே கயிறு போட்டு கட்டிப் பொதச்சுடலாம். இல்லாமெப்போனா எடுக்கிட்டுப் போறபோது ரெத்தம் கித்தம் வீட்டுக்குள்ளாற சிந்தும். அதிலேருந்து அந்த தானாக்காரப் பயலுவ கண்டுக்கிடுவாலுவ, தெரிஞ்சுதா?" என்றான்.

உடனே கருப்பாயி அதை அமோதித்தவளாய், அவனை அழைத்துக் கொண்டு தென்னந்தோப்புக்குள் நுழைந்து, அங்கு முன்னாகவே வைக்கப்பட்டிருந்த மண்வெட்டியைக் காட்ட, கட்டையன் அதை யெடுத்துக்கொண்டு அரைக்கால் மயில் தூரத்துக்கப்பால் போய், தரையை வெட்டி மாரளவு குழி தோண்டிவைத்து விட்டு, தனது பிச்சாங்கத்தி கட்டைத்தடி ஆகிய இரண்டு ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு கருப்பாயியுடன் வீட்டையடைந்தான். இருவரும் ஓசையின்றி மெல்ல அடிவைத்து உள்ளே நுழைந்து கூடத்தையடைந்தனர். இருள் நன்றாக அடர்ந்திருந்தமையால் அவன் எங்கு படுத்திருக்கிறானென்பதை விளக்கின் வெளிச்சத்தில் பார்த்தால், அவனை வெட்டுவதற்குத் தோதாக இருக்குமென்று நினைத்த கட்டையன் விளக்கைக் கொளுத்தும்படி கருப்பாயியிடம் காதோடு கூற, வெளிச்சம் அறைக்குள் தெரியாமல், தாழ்வாரத்திற்போய் கருப்பாயி விள

க்கை ஏற்றினாள். விளக்கை கையால் முன்புறத்தில் மறைத்துக்கொண்டு உள்ளே நுழையும்படி கட்டையன் கருப்பாயிக்குச் சைகைகாட்ட அவள் அப்படியே சென்றாள். கையிலிருந்தகத்தி பளபள வென்று மின்ன கட்டையனும் உள்ளே நுழைந்தான். தூங்கின மனிதன் ஒரு கால்விழித்துக்கொண்டாலும், தானிருப்பது தெரியாமலிருக்கவேண்டுமென்று நினைத்த கட்டையன் கருப்பாயிக்குப்பின்னால் மறைந்து சென்றான். நன்றாகக்குறட்டைவிட்டு அயர்ந்து தூங்கிய மைனருக்கருகில் சென்ற கருப்பாயி வெளிச்சத்தைக்காட்ட, அந்த மனிதன் எவ்விடத்தில் எப்படிப்படுத்திருக்கிறானென்றுகட்டையன் பார்த்தான். நல்ல உடைகளுடன், கடுக்கனும், மோதிரங்களும் தக தக வென்று மின்ன படுத்திருந்த மைனரைக் கண்டவுடன் அவன் யாரோ பிரபுவின் வீட்டுப்பிள்ளை யென்பதை யுணர்ந்த கட்டையன், அவன் இன்னானென்பதை அறிந்து கொண்டால், அது பின்னால் எதற்காகினும் உபயோகமாக விருக்கு மென்று நினைத்து, சிறிது நகர்ந்து முகத்தை நன்றாக உற்று நோக்கினான். நோக்கவே, அந்தமுகம் அவனுக்கு அறிமுகமானதாய்த் தோன்றியது. இன்னமும் சிறிது அருகில் நெருங்கிப்பார்த்தான். உடனே திடுக்கிட்டான். "மாரமங்கலம் மைனரல்லவா" என்ற சொல், அவன்வாயிலிருந்து தானே வந்து விட்டது. "மாரமங்கலம் மைனர்" என்ற சொல் கருப்பாயியின் காதில் பட்டவுடன், அவளும் திடுக்கிட்டு "ஆ! மாரமங்கலம் மைனரா? அப்பிடீன்னு வெட்டவாணும்;" என்று வாய் விட்டுக் கூறி கட்டையனது கையைப் பிடித்துக் கொள்ள, அந்தசமயத்தில் மைனர் கண்களை விழித்துக் கொண்டான். அதைக் கண்ட கருப்பாயி, சடக்கென்று வாயால் ஊதி விளக்கை அவித்து விட்டாள். எங்கும் இருள் சூழ்ந்து கொண்டது. கருப்பாயி கட்டையன் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வெளியில் பக்கத்திலிருந்த தென்னஞ் சோலையில் வந்து நின்று, "அப்பா கட்டையா! இவனை வெட்டவாணும்; நீ போ, நான் நாளைக்கி ராத்திரி ஒங்க ஊருக்கு வந்து பேசிக்கறேன்" என்று நயந்து வேண்டிக்கொள்ள கட்டையனுக்கு ரௌத்திராகாரமான கோபம் மூண்டது. "ஓகோ! எங்கிட்டவே கைவரிசை காமிக்கிறியோ! எல்லாப் பணத்தெயும் நீயே அடிச்சுக்கப்பாக்கிறியோ? அந்தக்குழியிலே ஒங்க ரெண்டுபேரையும் சேத்துப் பொதச்சுடுவேன் பத்திரம்; விடு கையெ; அவனெ வெட்டிப்புட்டுத்தான் மறுவேலெ" என்றான்.



அதைக் கேட்ட கருப்பாயி, "கட்டையா! ஆத்திரப்படாதே! ஒனக்குப் பணந்தானே வேணும்? அவங்கிட்ட இருக்கறதிலே பாதி அஞ்சாயிரம் ஒனக்குச் சேரணும். நாளைக்கி பொழுதோட அந்த அஞ்சாயிரம் ரூபாயெ நான் ஒங்க ஊட்டுலே கொண்டாந்து தாரேன். நீபேசாமே போ. நான் கொண்டாராமெ போனா, என்னெ கொன்னுப்புடு சம்மதம்" என்றாள். அதைக் கேட்ட கட்டையன் "நீ இன்னாக்கே பணத்தை சுருட்டிக்கினு ஊரைவிட்டு ஓடிப்பூட்டா என்ன செய்யறது?" என்றான்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்க, உட்புறத்தில் விழித்துக் கொண்ட மைனருடைய நிலைமையை விவரிப்பதைவிட யூகித்துக் கொள்வதே சுலபமானது. சமீபத்தில் பேச்சுக்குரல் கேட்டதனால் விழித்துக்கொண்ட மைனர், கையில் விளக்குடன் கருப்பாயி நின்றதையும், பிச்சாங்கத்தியுடன் இராக்ஷசனைப் போல ஒரு கறுத்த ஆள் நின்றதையும் கண்டவுடன் பிரமித்துக்கொண்டான். விளக்கை அணைத்து விட்டு அவர்கள் போனவுடன் எழுந்து உட்கார்ந்தான். கால்களும் கைகளும் வெடவெடவென்று ஆடுகின்றன. குலை நடுக்க மெடுத்தது. வியர்வை உடம்பிலிருந்து பொங்கி வழிகின்றது. கருப்பாயி தன்னை வஞ்சித்துவிட்டாளென்றும், தான் இனி உயிருடன் தப்ப முடியாதென்றும் நினைத்து கதிகலங்கி என்ன செய்வதென்பதை யறியாமல் தவித்தான். அவ்வளவு தூரம் வந்தவர்கள் விளக்கை அவித்துப் போனதன் காரணமென்னவென்று ஆலோசித்தான். தான் விழித்துக் கொண்டதனால், போயிருக்கலாமென்றும், தான் மறுபடியும் தூங்கியவுடன் வருவார்களென்றும் நினைத்தான். அவ்விடத்திலேயே இருந்து உயிரை இழப்பதைவிட, தப்புவதற்கு ஏதாவது முயற்சிசெய்ய வேண்டுமென்று நினைத்தான். வீடுமுழுவதும் இருள் சூழ்ந்திருந்தது தனக்கு அனுகூலமென்று நினைத்தான். அந்த வீட்டின் உட்புறத்தை வெளிச்சத்தில் நன்றாகப் பார்த்தவனாதலின், ஓசையின்றி மெல்ல எழுந்து சுவரோரமாய் நெருக்கி நடந்து கூடத்துக்குப் போய், தாழ்வாரத்தின் வழியாக வெளியில் வந்து விட்டான். அப்போது கட்டையனும் கருப்பாயியும்பக்கத்திலிருந்த தென்னஞ் சோலையில் சச்சரவுசெய்து கொண்டிருந்தனராதலின், அந்தப் பக்கத்தில் மனிதரது பேச்சுக் குரல் சொற்பமாகக் கேட்டது. அந்தக் கள்வரிருந்த பக்கத்தில் செல்லாமல், அதற்கு எதிர்ப்புறமாக மெல்ல நடந்து, வயல்களுக்குள் புகுந்து, விரல்களைக் கீழே ஊன்றி, ஓசை

செய்யாமல் ஓட்டம் பிடித்தான். உயிர் போகக்கூடிய அந்தக் கொடிய ஆபத்திலிருந்து தப்பி எப்படியாகிலும் ஓடிவிட வேண்டுமென்னும் நினைவு அவனை மகா வேகத்துடன் தள்ளிய தாகையால், வாயுவேக மனோவேகமாய்ப் பறக்கிறான். மேடு பள்ளம் புதர் சப்பாத்து பாம்பு என்பதைக் கூட கவனியாமல் தாண்டிக் குதித்துக் கொண்டு தலை தெறிக்க குடல் அறுக ஓடுகிறான். அவர்கள் பின்னால் தொடர்ந்து வருகிறார்களோ வென்று இடையிடையே திரும்பிப் பார்க்கிறான். புதர்களிலிருந்த நரி முதலியவை துள்ளிக் குதித்தால் அவர்கள் தான் துரத்துகிறார்க ளென்று நினைத்து அவனும் துள்ளிக்குதித்தோடுவான். அவ்வாறு கால் மயில் தூரம் ஓட, அவ்விடத்தில் இராஜாபாட்டை குறுக்கிட்டது. வயல்களிலிருந்து போய் இராஜபாட்டையை யடைந்தவுடன், சிறிது துணிவுண்டாயிற்று. தான் ஓடிவந்த திசையை நோக்கி திருடர் தொடர்ந்து வரவில்லை யென்றுணர்ந்தான். என்றாலும், அவர்கள் வீட்டிற்குள் போய் தான் ஓடிவிட்டதைக் கண்டால், எப்படியும் தொடர்ந்து வருவார்கள் என்று நினைத்தவனாய், அவ்விடத்தில் நிற்க மனமற்றவனாய் சைதாப்பேட்டையிருந்த திக்கில் அந்தப் பாதையிலேயே விசையாக நடக்கலாரம்பித்தான். அப்போது இரவு மணி ஒன்றிருக்கலாம்; இருள் சூழ்ந்திருந்த தாயினும், நக்ஷத்திரங்கள் நன்றாய்ப் பிரகாசித்தமையால், மரமென்பதும், பாதை யென்பதும், கல்லென்பதும், மனிதர் என்பதும் தெரியக்கூடிய வெளிச்சமிருந்தது. பாதையின் இருபுறங்களிலும் பெருத்த மரங்களிருந்தமையால், அவைகளின் அந்தத் தோடு மறைந்து மறைந்து ஓட்டமாக நடக்க வாரம்பித்தான்.

அவ்வாறு அரைக்கால் மயில் தூரம் சென்றிருப்பான். அவனுக்குப் பின் புறத்தில், குதிரையின் காலடி ஓசை டக்டக்கென்று கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். தனக்குப் பின்னால், குதிரை மீது உட்கார்ந்துகொண்டு யாரோ ஒருவர் வந்ததைக் கண்டான். ஒருகால் திருடன் குதிரைமே லேறிக்கொண்டு தன்னைத் துரத்துகிறானோ என்ற அச்சத்தினால் அவனுடைய உயிரில் முக்கால் பாகம் போய்விட்டது. இனி தான் தப்பமுடியாது என்று நம்பிக்கை யிழந்தவனாய்த் தத்தளித்திருந்த சமயத்தில் அந்தக் குதிரை அவனிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தது. அதிலிருந்த மனிதன், மைனரைக் கண்டவுடன் குதிரையை நிறுத்தினான். நடுநடுங்கி நின்ற மைனர், குதிரை



மீது வந்தது யாரென்று பார்க்க, அந்த மனிதர் அணிந்திருந்த உடைகளினால் அவர் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் என்று உணர்ந்தான். எமனுலகம் சென்றிருந்த அவனுடைய உயிர் திரும்பியது. ஈசுவரனே தன்னைக் காப்பாற்றும் பொருட்டு அந்த இன்ஸ்பெக்டரை அனுப்பி இருக்க வேண்டுமென்று நினைத்து மிகவும் இரங்கத் தக்க பார்வையாக அவரை நோக்கினான். அவரும் மைனரைப் பார்த்து "யாரையா நீர்? இந்த அகாலத்தில் இங்கே என்ன செய்கிறீர்?" என்றார்.

அதைக் கேட்ட மைனர் மேலும் துணிவடைந்து "நான் நேற்று சாயுங்காலம் ஆலந்தூருக்குப் போய், அங்கே ஒரு வீட்டில் படுத்திருந்தேன். விடியற்காலம் ஐந்து மணிக்கே எழுந்து சைதாப்பேட்டைக்கு ஒரு அவசரக் காரியமாக வரவேண்டுமென்று படுத்துக் கொண்டேன். சற்றுமுன் விழித்துக் கொண்டு கடியாரத்தைப் பார்த்தேன். ஐந்துமணி யாயிருந்தது. உடனே புறப்பட்டு வந்து விட்டேன். இவ்வளவு தூரம் வந்தபிறகு இது நடு இரவென்பது தெரிந்தது. என்னுடைய கடியாரம் நேற்று சாயுங்காலம் ஐந்து மணிக்கே நின்று போய்விட்ட தென்பதை இப்போதுதான் கண்டேன். இருளில் தனியாய்ப்போக பயமாக இருக்கிறது. நான் இருப்பது சைதாப்பேட்டை. நான் மாயங்கலம் மைனர் ஜெமீந்தார்." என்றான்.

அதைக் கேட்டவுடன் போலீஸ் இன்ஸ்பெக்டர், மைனரை உற்றுப்பார்த்து "சரி; என் பின்னால் குதிரையின்மேல் உட்கார்ந்து கொள்ளும்; இதோ சமீபத்தில் அடையாற்றுப் பாலத்தண்டை என்னுடைய பங்களா இருக்கிறது. அதற்குள் சயனித்திருந்து பொழுது விடிந்தவுடன் போகலாம்" என்றார். அதைக் கேட்ட மைனர் சந்தோஷமும் நன்றியறிதலும் நிறைந்தவனாய் குதிரையின் அருகில் நெருங்க, இன்ஸ்பெக்டர் ஒரு புறத்தில் அங்கவடியிலிருந்த தமது காலை எடுத்து, அதில் மைனர் அவனது காலை வைத்தவுடன் கைகொடுத்துத் தூக்க, அவன் அவருக்குப் பின்புறத்தில் உட்கார்ந்து கொண்டு தனது கைகளை முன்னால் நீட்டி அவருடைய இடுப்பைச்சுற்றிக் கட்டிப்பிடித்துக் கொண்டான். உடனே அவர் குதிரையைத் தட்டிவிட, அது நாற்கால் பாய்ச்சலில் விசையாக ஓடத்தொடங்கியது. குதிரையேற்றத்தில் மைனருக்கு அவ்வளவாகப் பழக்கமில்லையாதலால், அவன் பெரிதும் அஞ்சிக்கொண்டு இன்ஸ்பெக்டருடைய இடுப்பை இறுகப்பிடித்துக் கொண்டு முது

ஜோடு முழுதைப் பூட்டிக் கொண்டான். அவர்கள் ஐந்து நிமிஷத்தில் சைதாப்பேட்டை தாலூக்காக் கச்சேரியண்டை வந்து சேர்ந்தனர். சேர்ந்தவுடன், நேராகப் போகாமல், அங்கிருந்து அடையாற்றுக்குப் போகும் பாட்டையில் இன்ஸ்பெக்டர் குதிரையைத் திருப்பி ஒரு அடி கொடுக்கவே அது ஒரேவிசையாகப் பிடுங்கிக் கொண்டு ஓடியது. கால் நாழிகையில் மூன்றுமைல் தூரம் சென்றது. எதிரில் அடையாற்றுப்பாலம் தென்பட்டது. அங்கு வந்தவுடன் குதிரையின் கடிவாளவார் கைதவறிக் கீழே விழுந்ததையால், இன்ஸ்பெக்டர் சடக்கென்று முன்புறத்தில் குனிந்து கடிவாளவாரை எடுத்துக் கொண்டு நிமிர்ந்தார். குதிரை போய்க் கொண்டே இருந்தது. இன்ஸ்பெக்டர் குனிந்து நிமிர்ந்தபோது அவருடைய இடுப்பைச்சுற்றிக் கொண்டிருந்த மைனரது கைமேலே நகர்ந்து மார்புவரையில் சென்றது. சென்றவுடன் மைனர் திடுக்கிட்டு நிமிர்ந்தார். முன்னால் உட்கார்ந்திருந்தது, ஒரு பெண், என்பதைக் கண்ட மைனர், பெரிதும் வியப்பும் அச்சமும்கொண்டு தவிக்கலானார். அவரது உடம்பு வியர்த்து கிடுகிடென்று ஆடியது. உரோமம் சிலிர்த்து நிமிர்ந்து நின்றது. இன்பமும் துன்பமும் ஒன்றுகூடி ஒரேகாலத்தில் வதைக்க வாரம்பித்தன.

18996

உண்மையில் உமக்கு அதிர்ஷ்டம் உளதேல்.

நாணயமான மனத்திற்குகந்த

நம்பிக்கையான விலைக்குகந்த

சுதேசி ஜவுளிகள்.

வேண்டுமானால் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும். திருப்திக்குகந்த சாக்குகளாய்ப் பலரகங்களிலும் சேலைகள், அங்கவஸ்திரங்கள், பட்டாடைகள், பலரகம் செட்டிச்சாய சல்லாடிப் புடவைகள், 100 தெ. 150 தெ. 200 தெ. நூல்களில் நாணயமான உயர்தரப்பட்டு ஜரிகை முதலியவற்றால் அலங்காரமாகவும் அழுத்தமாகவும் தயாரிக்கப்பட்ட துப்பட்டாக்கள், 8 முழம் 7 முழம் ஜோடிகள், முதலியனவும் சலவை செய்தவைகளும், சலவைசெய்யாதவைகளுமாய் விலை மிக மிகச் சரசமாய் பத்திரமாய் அனுப்பப்படும் வி. பி. மூலம்.

"மலாய் நாட்டினர் முன்பணம் அனுப்புக."

தீபாவளிக்கு இப்போதே எழுதுக.

இனம்! கேட்பாக் இனம்!

விசாலாக்ஷி அண்டு கோ.,

மதுரை (தெ. இ.).

தங்க மெடல்கள் பெற்ற

## சர்வதேசீ விஷசஞ்சீவி

(ரிஜிஸ்டர்டு)

கதறிவந்தவர் களிப்புடன் செல்வார்!
விஷத்தினடிவனவர் சிரித்துத் துணையடைவர்!!

குணமில்லாவிட்டால் ரூபா 100 இனும்!



எவ்வித தேள் கடியானாலும் பேதியும் மற்றும் எவ்வித விஷ கடியானபோதிலும் ஒரே நிமிஷத்தில் குணமடையும். ஒருபாக்கெட் வாங்குகிறவர்களுக்கு அழகிய படத்துடன் கூடிய 1921 வருஷத்திய கேலண்டர் அனுப்பப்படும்.

முந்துங்கள்.

1-பாக்கெட் அ. 8 1-டஜன் ரூ 5

விலாசம்:— வி. எ. எஸ். பாஷி.
சௌகார்பேட்டை, மதராஸ்.



முந்துங்கள்! புதுமை!! புதுமை!!!

உலகப் பிரசித்திபெற்ற ரோமசங்காரி என்னும் "தர்பார்சோப்"



இந்த சோப்பைத் தேய்த்தவுடன் தேகத்தில் எந்த இடத்திலுள்ள ரோமங்களையும் நீக்கிவிடும். இதனால் எவ்வித எரிச்சல், கறை, மற்றக்கெட்டவாசனை ஒன்றும் கிடையாது. இதை ஒருதரம் உபயோகித்தால் உண்மை தெரியவரும்.

விலை:— 3. கட்டிகள் அடங்கிய பெட்டி 1-க்கு 0—14—0
இரண்டு பெட்டி விலை 1—10—0

விலாசம்:— மானேஜர்,
போஸ்ட் பாக்ஸ் நெ. 205 மதராஸ்.



இங்லிஷ் கம்பெனி! குணமில்லாவிட்டால் பணம் வாபீஸ்

## விரிலஸன் தாதுவிருத்தி ஆகாரம்

இதுவரையில் எவராலும் கண்டுபிடிக்கப் படாத அருமையான ஓர் இங்கிலிஷ் மருந்து. தேக மெலிவு, இந்திரிய உடைசல், கனவில் ஸ்கலிதம், ஆண்மைக்குறைவு, ஸ்திரீகளைக் காணும்பொழுதும், நினைக்கும்பொழுதும், மூத்திரம் நீரிலும் ஸ்கலிதம், அஜீரணம், சோம்பல், கை கால் ஓய்வு, மயக்கம், பலஹீனம், பசியின்மை முதலிய பிணிகளை நீக்கி இரத்த சுத்தி, ஆண்மை, சுறுசுறுப்பு, நரம்புறுதி, மூளை வலு, சிற்றின்ப இச்சை முதலியவற்றைப் பெருக்கி சுகங் கொடுப்பது. இந்த விரிலஸன்தான் காமதேனுவென்று சொல்லத்தக்கது. இதை உபயோகித்தவர்களுக்கே இதன் உண்மை தெரியவரும். அநேக ஆங்கிலேய சீமான் சீமாட்டிகளால் அநுபவிக்கப்பட்டு நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுள்ளது. [illegible] இறும். 32 வேளை மருந்துள்ள பாட்டில் 1-க்கு ரூ. 3-8-0. 1 மாதத்து மருந்து (3 பாட்டில்) ரூ. 9-0-0.

விலாசம்:— விரிலஸன் கம்பெனி.
P. B. 377. மவுண்ட்ரோட், சென்னை.

**இங்கிலீஷ் கம்பெனி!** குணம் இல்லாவிடில் பணம் வேண்டாம்.

## ஓவர்டால் டானிக் பில்ஸ்

இது விந்து சம்போகம் செய்யும் திறமையற்று வெளியிடமாட்டாமல் தவிப்போருக்கு புருஷத்துவமுண்டாக்கும் ஜீவாமிருத குளிகை. இதற்கிணையான மருந்து இதுவரையில் எவராலும் செய்யப்பட்டதில்லை யென்றே சொல்லலாம்.

50 மாத்திரைகள் நிறைந்த 1 டப்பி ரூ. 4—8—0
3 டப்பி ரூ. 12—6—0

* * * * * *

## நைட் பில்ஸ்

மலபந்த மென்னும் கொடிய வியாதியால் ஒவ்வொரு நாட்காலையிலும் உபத்திரவப் படுவோருக்கு இது பெருத்த பாக்கியம். படுக்கும்போது ஒரு மாத்திரை உட்கொண்டால், மறுநாட்காலையில் சுகமாக மலம் கழியும். சொற்பகாலத்தில், மாத்திரை இல்லாமலே சரியான நிலைமை ஏற்பட்டுவிடும். மலபந்தத்தினால் இரத்தம் கெட்டு ஏராளமான பல ரோகங்கள் உண்டாவதையும் இது தடுக்கும்.

50 மாத்திரைகள் கொண்ட 1 டப்பி ரூ. 1/8.
3 3/12

விலாசம்:—மானேஜர், விரிலன் கம்பெனி,
தபாற்பெட்டி 377,
மவுண்ட் ரோட், சென்னை.


புதுவை "செந்தமிழ் வாசகசாலை" யாரால் கொடுக்கப்பட்ட நற்சாக்ஷிப் பத்திரமும் தங்கப்பதக்கப் பரிசும் கனம் வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் அவர்களுக்கு

அநேக வந்தனம்; உபயக்ஷேமம்.

கற்றோர்மணியே!

நீவிர் தற்கால நவீனமுறையில் தேசானுகூலத்திற்கு உகந்தவையான நீதிகளைப் புகுத்தி ஒவ்வொரு மதியோரும் தேன்றுய்க்கும் நிலவியிடும் மனோரஞ்சனிச் செல்வியை யாம் அன்புடன் வரவேற்கின்றோம். அதன்கண் படர்ந்துவரும் மேனகா திகம்பரசாமியார் என்னும் நாவல்களை வெகு பிரியத்துடன் வாசித்து இன்புற்றோம். தங்களா லெழுதப்படும் நாவல்களை யாம் வாசிக்க ஆரம்பித்தவுடன் வேடிக்கையான உபகார வேலைகளிருப்பினும் அவைகளையும் மறந்து அந்நாவலிற் செறிந்துள்ள சொற்சுவை பொருட்சுவைகளால் வசியமாக்கப்பட்டு அது வாசித்து முடிவெய்திய பின்னர் அவைகளைக் கவனிக்கும்படியாய் விடுகின்றது. இதைநோக்க தாங்கள் நாவல் எழுதும் ஆற்றலில் அதிசமர்த்தி யடைந்திருக்கின்றீர்களென்றும் தங்களுடைய கவர்ச்சியை முழுதும் பிரகிருதிக்குந்த அரும் விஷயங்களைத் தாங்கள் திரட்டித்திட்டி விடும் சவிஸ்தாரமான முறையானது எம்போன்ற செல்வோரும் மிகுதியாய் மெச்சத்தகுந்ததாக விளங்குகின்றது; அதில் ஒவ்வொரு பாத்திரங்களாற் பல நன்னீதிகளை அவசியம் கவனிப்போர்கள் நிச்சயமாய் நல்லவர்களாவார்களென்பது உறுதி. தங்களுடைய நவீனமுறையிற் சிறந்த பேராற்றலை நோக்கித் தங்கட்குப் பலரும் பல நற்சாக்ஷிப்பத்திரங்களும் தங்க வெள்ளிப் பதக்கப்பரிசுகளும் தந்து தங்களை உற்சாகப்படுத்தி இருக்கின்றனர். யாமும் எமது செந்தமிழ் வாசகசாலையாரும் தங்கள் ஆற்றலின் திறமையை வியந்து இப்பொற்பதக்கப் பரிசை மனப்பூர்வமான வந்தனத்துடன் அளிக்கின்றோம். இதுகாறும் பல மேதாவிகளும் இன்னும் இது போன்ற பதக்கங்களும் நற்சாக்ஷிப் பத்திரங்களும் தந்து தங்கட்கு உற்சாகமூட்டியபின்னர் இன்னும் இது போன்ற பல நவீனத்தை வரையத்தகுந்த பேராற்றலை அதிகப்படுத்துவார்களென்று நம்புகின்றோம்; ஆண்டவன் அருள் செய்க,

செந்தமிழ் வாசகசாலை
86 நெ. கலத்தீஸ்வரன்
கோயில் தெரு, புதுவை
30—3—1921.

இங்ஙனம்,
அ. நா. நரசிங்க முதலி
அக்கிராசனன்.

நோய்க்கிடங்கொடேல்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

உங்களிடமும் வியாதி உறவாடுகின்றதா ?

சகல வியாதிகளையும் அடியோடு துலைக்க

# அமிர்தாசம்

என்னும் தேவாமிர்தத்தை அனுப்பித்தருகிறோம்.

இது ஒரு குடும்ப ஒளஷதம். இம்மருந்துக்கு காந்த சக்தி யுண்டு; இதில் பாஷாண சம்பந்தமான சரக்குகள் கலப்படமில்லை. மனிதருக்குண்டாகும் சகல வியாதிகளுக்கும் ஒரு துளி **அமிர்தாசத்தை** ஜலத்தில் விட்டு சாப்பிடுவதாலும், வீக்கம், **கருப்பு, புண்**, ரணம், வெட்டுக்காயம் முதலியவைகளுக்கு **அமிர்தாசத்தை** மேல் பூசுவதாலும் பூரண குணமுண்டாகிறது. பிளேக், காலரா, இன்புளுயன்சா போன்ற தொத்து வியாதிகளுக்கே கைகண்ட மருந்தென்றால், மற்ற சில்லரை வியாதிகள் இதன்முன் எம்மாத்திரம்? பால்யசேஷ்டையினால் கெட்டவர்களும், மரணப்படுக்கையிலிருந்தவர்களுங்கூட இதை உபயோகித்துப் பூரணசுகமடைந்திருக்கிறார்கள். சுருக்கிச் சொல்லுமிடத்து அமிர்தாசம் கையிலிருந்தால் அன்மாவிற்கே பயமில்லை. இதற்கு அநேக புகழ்ச்சிப் பத்திரங்கள் கிடைத்திருப்பதே போதுமான அத்தாக்ஷி. இதை இன்று பிறந்த குழந்தை முதல் வயோதிகர் வரை யாவரும் பத்தியமில்லாமல் உபயோகிக்கலாம். ஏழைகளும் வாங்கி சுகமடையும் பொருட்டு சொற்ப விலைக்கு அனுப்பி வருகிறோம். முழுவிவரம் புட்டியுடனனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2, சிறிய புட்டி ரூ. 1

தபால் சார்ஜ் வேறு

Sole Agents;—எஸ். பி. ரத்னு அண்டு கோ.,
நெ. 4 மல்லூர் P. O. சேலம்

(தென்னிந்தியா.)

JL
N21.5.1
212422
சென்னை-600 098.